
# ஞானச்சுடர்

பங்குனி 2020

267ஆவது மலர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்**
**தன்னெஞ்சே தன்னைச் சுடும்.**

**பொருள் :** ஒருவன் தான் பொய்யென்றறிந்த ஒன்றைப் பிறர் அறிந்திலர் என்று மறைப்பது தவறு; மறைத்தபின் அவனது நெஞ்சே அவனை வருத்தும். (293

**உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தார்**
**உள்ளத்து ளெல்லா முளன்.**

**பொருள் :** மனத்தினால் பொய்யை நினையாது நடப்பவன் உயர்ந்தோர் மனத்தில் நிலைத்திருப்பான். (294)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

நல் வரம் தா


**கலிவிருத்தம்**



அதுவி துவென்ற வவையெல்லாங் கண்டாருக்
கதுவி துவுமாய் நின்ற பரம்பொருள்
பொதுவி னில்நடங் கண்டு களிக்கவுன்
புதும லரடி போற்றிடத் தாவரம். 04

ஆதா ரத்தால் நிராதாரஞ் சென்றுயான்
பேதா பேதங்கள் காணாப் பெருமையை
வேதாக மத்தில் விளங்கும் விமலனே
நாதா நீதா எனக்கிந்த நல்வரம். 05

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 267



2020 பங்குனி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| இலங்கையில் முருக... | ம. விமலகாந்தன் | 01 - 02 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 03 - 07 |
| வல்லிபுர மாயவனும்... | முருகவே பரமநாதன் | 08 - 09 |
| ஆனந்தக் கிருஷ்ணனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 10 - 14 |
| அறப்பணிகளில் மெத்தப்... | கே.எஸ். சிவஞானராஜா | 15 - 17 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 18 - 20 |
| மக்கள் சேவை மகேசன் சேவை | திருமதி செ. கமலாதேவி | 21 - 23 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 24 - 25 |
| ஆறுமுகம் | க. சிவசங்கரநாதன் | 26 - 27 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 28 - 29 |
| வாழ்க்கையும் ஒரு வியாபாரமே! | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 30 - 33 |
| பல்வேறு நாமங்கள்... | ச. சஜீவன் | 34 - 39 |
| வள்ளலாரின் சீர்திருத்தச்... | திருமதி ப. விக்னேஸ்வரி | 40 - 47 |
| பிறரது பாராட்டுக்கும்... | திருமதி ந. பரமேஸ்வரி | 48 - 49 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 50 - 54 |
| கதிர்காம யாத்திரை | செல்வி சி. நிலா | 55 - 56 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர்
# மாசிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:**

ஞானச்சுடர் 266ஆவது மலருக்குரிய வெளியீட்டுரையினை சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகால தொடர்பில் உள்ளவரும் இளைப்பாறிய ஆசிரியையுமாகிய திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள்.

அவர் தம் உரையில் ஆச்சிரமம் ஆற்றும் அறப் பணிகள் பற்றியும் ஞானச்சுடர் மலர் பற்றியும் சபையில் இருந்த அடியார்களுக்கு விளக்கிக் கூறியதோடு நாம் செய்கின்ற தூய பணி பலன் கருதாது செய்யப்படுமானால் அதன்மூலம் கிடைக்கும் பெறுபேற்றிற்கு இவ் ஆச்சிரமத்தின் வளர்ச்சி முன் உதாரணமாகத் திகழ்கின்றது. நாம் எவ்வளவு செல்வம் வைத்திருந்தாலும் அதைச் சரியான முறையில் பயன்படுத்தத் தெரியாமல் ஏனோதானோவென்று வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம். இவ்வகையான வாழ்க்கையில் பற்றுக் கிடைக்க வேண்டுமெனில் எம்மால் முடிந்த அளவு அறப்பணிகள் ஆற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும். இவ் இடம் அறப்பணிகள் ஆற்றும் மையமாக விளங்குவதால் என் மனதிலுதித்த ஒரு சில கருத்துக்களை உங்களோடு பகிர்ந்துள்ளேன் என்று கூறி வருடாவருடம் மாசி மாத ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரையை ஆற்றுவதற்கு பேரருள் புரியும் சந்நிதி வேலவனுக்கும் பேரவையினருக்கும் நன்றி கூறி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:**

ஞானச்சுடர் மாசிமாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை பேரவையின் செயற் பாட்டுக்கு தன்னாலான ஆதரவை நல்கி வருபவரும் முதுநிலை விரிவுரையாளருமாகிய திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள்.

ஒரு ஆன்மீகம் சார்ந்த மலர் தொடராக வெளிவருவதென்றால் அது ஒரு பெரிய சாதனை என்றே சொல்ல வேண்டும். நினைக்கவே பிரமிப்பாக இருக்கின்றது. 265 மலரில் நான் ஒரு 25 மலருக்கு மதிப்புரை ஆற்றி இருக்கின்றேன் என்று நினைக்கின்றேன். என் வரையில் இதுவும் ஒரு சாதனையே. இத்தகைய செயற்பாட்டிற்கு சந்நிதி வேலவனின் பேரருளுடன் ஆச்சிரமம் சார்ந்த பெரியோர்களின் முயற்சி என்றே கூறவேண்டும்.

நானும் பலவித நூல் வெளியீடுகளில் கலந்துகொண்டுள்ளேன். மதிப்பீட்டுரை ஆற்றுவதென்பது ஒரு சாதாரண விடயமல்ல. மலரின் தன்மைக்கேற்ற வகையில் எமது மதிப்புரைகள் அமைய வேண்டும். ஆனாலும் ஞானச்சுடர் விதிவிலக்கு. மதிப்புரைக்கு அப்பாற்பட்டது. மலரில் இடம்பெறும் கட்டுரையின் தலையங்கத்தை கருத்தில் கொண்டு கட்டுரைகள் இடம்பெற வேண்டும். இதைக் கட்டுரையாளர்கள் கருத்தில் கொள்ளவேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைத்து தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

கொரோனா வைரஸ் உலகம் முழுவதையும் புரட்டிப்போட்டு வருகிறது. சுனாமி போன்ற அந்தந்த நாடுகளுள்ளே ஏற்பட்டு வந்த அனர்த்தங்களையே இந்தத் தலைமுறை கண்டிருக்கிறது. ஆனால், முழு உலகையும் ஆட்டிப் படைக்கும் இந்த உயிர்கொல்லி வைரஸானது, அரசன் முதல் ஆண்டி வரை இன - மத- வர்க்க - நிற வித்தியாசமின்றி உலகின் அனைத்து மக்களையும் பாதித்துள்ளது. தன்னை முகங்காட்டாத எதிரியுடன் உலகத்தில் நடைபெற்றுவரும் போராட்டமே பல்லாயிரம் உயிர்ச்சேதங்களுக்கும் காரணமாகியுள்ளது.

இந்த கொரோனாவுக்கு எதிரான போரில் இலங்கை அரசும் - சுகாதார திணைக்களமும் எடுத்துவரும் மிகக் கடுமையான நடவடிக்கைகளினால் - நமது நாட்டில் உயிர்ச் சேதங்களும் பாதிப்புக்களும் கட்டுக்குள் உள்ளன.

சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தல்கள் நம் மக்களால் எவ்வளவு தூரம் கவனத்தில் கொள்ளப்படுகிறது? முகக் கவசம் அணிவதும், சமூக இடைவெளியைப் பேணுவதும், அனாவசிய நடமாட்டங்களைத் தவிர்த்து வீட்டினுள் இருப்பதுவும் போன்ற சாதாரண விடயங்களையே நம்மால் முழுமையாகக் கடைப்பிடிக்க முடியவில்லை.

வெறும் கலந்துரையாடல்களும் - அறிக்கைகளுமே இப் போருக்கு மருந்தாக மாட்டாது. கொரோனா நோயாளியின் முகத்திற்கு முன்னே - களத்தில் நின்று போராடும் வைத்தியர்கள் - தாதியர்கள் - சுகாதாரப் பணியாளர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். ஊன் உறக்கமின்றி - மனைவி மக்களை மறந்து மாதக் கணக்கில் வைத்தியசாலைகளிலேயே தங்கியிருந்து கொரோனா நோயாளிகளைக் குணப்படுத்தி அனுப்பும் இவர்களின் கால் தொட்டு வணங்க நாம் கடமைப் பட்டிருக்கிறோம்.

மொத்தத்தில் நமது கடமைகளை நாம் சரியாகச் செய்வோம். கொரோனாவை விரட்டி வெற்றி பெறுவோம்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 16. சிந்து வகுப்பு

மிடைத ரும்ப்ர வாள சடைபெ ரும்ப்ர வாக
விமலர் கொன்றை மாலை தருண சந்த்ர ரேகை
விரவு மணநாறு பாதார விந்த
விதரண விநோத மாதாவின் மைந்தன்
மீன கேதன னுருவின் மிகுந்தரு
டான வாரிதி சரவண சம்பவன்
விகிர்தி வேதனன் மவுன சுகாதன
னகில காரண னகில கலாதரன்
விகசித சுந்தர சந்தன பாளித
ம்ருகமத குங்கும கஞ்சப யோதரி
வேழமு முழைகளு மாரும் பைம்புன
மேவுறு குறமகண் மேவுந் திண்புயன்
விரிகடல் துகளெழ வெகுளும் விக்ரமன்
அரிதிரு மருமக னறுமு கத்தவன்
வெட்சி கொண்ட தோளன் வெற்பூடுற
விட்டவென்றி வேன்மு மூச்சேவகன்
வெருவு நக்கீரர் சரணென வந்தருள்
முருக னிஷ்க்ரோத முநிகுண பஞ்சரன்
மேதகுபு ராண வேதாங்குர
னோதரிய மோன ஞானாங்குரன்
மிகைத்தவர் புரத்ரய மெரித்தவர் ப்ரியப்பட
அகத்திய முநிக்கொரு தமிழ்த்ரய முரைத்தவன்
வேத மூர்த்தி திருத்தணி வெற்புறை
சோதி கார்த்திகை பெற்ற விளக்கொளி

# பங்குனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**R. கிருஸ்ணசிவம்**
(அவுஸ்திரேலியா)

**இ. சங்கரலிங்கம்**
(அம்மன் பல்பொருள் வாணிபம், ஊரெழு கிழக்கு)

**இராமசாமி திருச்செல்வம்**
(தலைவர், பர்வபத்தினி அம்பாள் தேவஸ்தானம்- ஊரெழு)

**அ. வரதராசா**
(வரியப்புலம் வீதி, சுண்ணாகம்)

**வே. நடராசா**
(தும்பளை மேற்கு)

**சி. கிருஷ்ணபிள்ளை J.P.**
(ஆவரங்கால்)

**பொதுமுகாமையாளர்**
(வலி. கிழக்கு வடபகுதி ப.நோ.கூ. சங்கம், அச்சுவேலி)

**பொதுமுகாமையாளர்**
(பனை, தென்னை வள அபிவிருத்தி கூ. சங்கம், அச்சுவேலி)

**சி. குமாரலிங்கம்**
(இளைப்பாறிய வங்கியாளர், யாழ்ப்பாணம்)

**செ.க. செல்வநாயகம்**
(செல்வா ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)

**திருமதி சு. செல்வக்குமார்**
(மாநகரசபை, யாழ்ப்பாணம்)

**அதிபர்**
(சிதம்பராக்கல்லூரி, வல்வெட்டித்துறை)

**சு. சோமாஸ்கந்தமூர்த்தி**
(சித்தங்கேணி)

**யோ. சிவஉமாகரன்**
(உயர் பட்டப்படிப்புப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

**திருமதி தயாநிதி பாலசுந்தரம்**
(தெல்லிப்பழை)

**ந. கணேஸ்வரமூர்த்தி**

(கரவெட்டி)

**ச. தங்கராசா J.P.**

(இளை. அதிபர், நீர்வேலி)

**க. மணியன்**

(புத்தூர்)

**வ. துரைராசா**

(ஒஸ்காவீதி, உரும்பராய் தெற்கு)

**கு. ரங்கநாதன்**

(இணுவில் தெற்கு)

**க. வைத்தியநாதன்**

(சுன்னாகம்)

**சி. தவலிங்கம்**

(பருத்தித்துறை)

**சபா இரத்தினசிங்கம் J.P.**

(சபா றேடர்ஸ், அச்சுவேலி)

**V. பரமானந்தம்**

((முன்னாள் பொது முகாமையாளர்- தொண்டைமானாறு)

**K. கேதீஸ்வரநாதன்**

(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)

**சு. மகேஸ்வரன்**

(மாரியம்மன் மோட்டோர்ஸ், கோப்பாய்)

**தம்பிப்பிள்ளை குணரட்ணம்**

(சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி)

**S. திருவாஞ்சீஸ்வரன்**

(V.S.K. மானிப்பாய்)

**த. விவேகானந்தராசா**

(டச்றோட், சித்தங்கேணி)

**அ. கோணேஸ்கரன்**

(தில்லையம்பதி, கோண்டாவில்)

**இ. சந்திரசேகரன்**

(மாசியப்புலம் வீதி, ஏழாலை)

**ஜெ. ஜெயப்பிரதாப்**

(சாவகச்சேரி)

**சி. அழகேசன்**

(வட்டுவினி அம்மன் கோவிலடி, இணுவில்)

**க. தர்மநாயகம்**

(மஞ்சத்தடி, இணுவில்)

**பொ. ஞானப்பிரகாசம்**

(கரணவாய் தெற்கு)

**உரிமையாளர்**

(கண்ணாடி களஞ்சியம், நெல்லியடி)

**இ. வீரசிங்கக்குருக்கள்**

(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)

**அதிபர்**

(கம்பர்மலை அ.த.க. பாடசாலை)

**அதிபர்**

(உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி)

**திருமதி சி. தருமலிங்கம்**

(இமையாணன், உடுப்பிட்டி)

**கனகலிங்கம் சந்திரவாசன்**

(நீர்வேலி)

**கி. அருள்நாதர்**

(பாலாவி தெரு, பொலிகண்டி)

**சறோஜினிதேவி மாணிக்கராசா**

(வறாத்துப்பளை, பருத்தித்துறை)

**கந்தையா காசிராசா**

(குப்பிளான் தெற்கு)

**மார்க்கண்டு முத்துப்பிள்ளை**

(அத்தியடி, யாழ்ப்பாணம்)

**க. விக்னேஸ்வரராஜா**

(புலோலி)

**லலிதா சண்முகலிங்கம்**

(திருமகள் வீதி, அரியாலை)

**சி. விவேகானந்தம்**

(பருத்தித்துறை)

**சி. நாகரூபன்**

(கரணவாய்)

**K. பிரதீபன்**
(யாழ்ப்பாணம்)
**ஐ. காளிங்கநடனம்**
(கொக்குவில்)
**பா. சிவதர்ஷினி**
(கலையகம், அல்வாய்)
**க. ஜெயபாலகணேசன்**
(சிறுப்பிட்டி தெற்கு)
**Dr. அ. செந்தில்குமரன்**
(பல் வைத்திய நிபுணர், ஆதார வைத்தியசாலை, மந்திகை)
**இ. பாஸ்கரன்**
(நல்லூர், யாழ்ப்பாணம்)
**க. சிவானந்தமூர்த்தி**
(புத்தூர்)
**சி. பத்மகுமார்**
(இணுவில் தெற்கு)
**அதிபர்**
(இமையாணன் அ.த.க. பாடசாலை)
**பா. சுதாகரன்**
(கற்பகப் பிள்ளையார் ஸ்ரோர்ஸ், உரும்பராய்)
**வ. கெங்கநாதன்**
(நீர்வேலி)
**P. நடராசா**
(கல்லடி ஒழுங்கை, சாவகச்சேரி)
**சி. சிவகுமார்**
(ஆவரங்கால்)
**S. முரளிதரன்**
(அச்சுவேலி)
**V. கருணாகரன்**
(சங்கானை)
**ச. சிவலிங்கம்**
(மானிப்பாய்)
**சண்முகம் தனலட்சுமி**
(கரணவாய்)
**வ. இரத்தினசிங்கம்**
(கம்பர்மலை)

# இலங்கையில் முருக வழிபாட்டின் தோற்றம், வளர்ச்சி

– **திரு மகேந்திரன் விமலகாந்தன்** அவர்கள் –

அறுவகைச் சமயங்களுள் ஒன்றாகவும், சிறப்பு வாய்ந்த சமயப் பிரிவாகவும் விளங்குவது கௌமார சமயம் ஆகும். இச் சமயமானது முருகப்பெருமானை முழுமுதற் கடவுளாகக் கொள்வதுண்டு. முருகக் கடவுளினுடைய திருவருள் உலகெங்கும் கிளையோடியுள்ளமை அக்கடவுளின் சிறப்பினை எடுத்தியம்புகின்றது. இலங்கை மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் அதிகளவான முருகன் ஆலயங்கள் அமைக்கப்பட்டு வழிபாடு இயற்றப்பட்டு வருவதைக் காணலாம். முருகப் பெருமானை கந்தன், கடம்பன், கதிர்வேலன், கார்த்திகேயன், வேலன், குமரன் எனப் பல பெயர்கொண்டு அழைத்து வருவதும் அவருடைய பெருமையை பறைசாற்றுவனவாக அமைகின்றன. அந்தவகையில் பல சமயத்தவராலும் போற்றப்பட்டு வரும் முருக வழிபாடானது இலங்கையில் எவ்வாறு தோன்றி வளர்ச்சி பெற்றுள்ளது என்பது பற்றி நோக்குவோம்.

இலங்கையின் முதற் சிங்கள மன்னனான விஜயனை அவன் மனைவி குவேனி கொலை செய்ய முற்பட்டவேளை கதிர்காமத் துறை தெய்வமாகிய கந்த குமாரன் விஜயனைக் காப்பாற்றியருளினான் என்ற செய்தி "இராஜவலிய" என்ற இலங்கை வரலாற்று இலக்கிய நூலிலே காணப்படுகின்றது. துட்டகாமினி என்னும் மன்னன் தனது பகைவனும், தமிழ் மன்னனுமாகிய எல்லாளனை வென்றால் நிறைவேற்றுவதாகக் கூறிய நேர்த்திக் கடனை எல்லாளனைக் கொன்று நிறைவேற்றி கதிர்காமக் கந்தனை திருப்தி செய்ததாக "கந்தஉப (கந்தனின் தோற்றம்) என்ற சிங்கள நூல் குறிப்பிடுகின்றது.

1965ஆம் ஆண்டிலே புத்தளம் மாவட்டத்திலே நிகழ்ந்த புதைபொருள் ஆராய்ச்சியின் பயனாய் திருநெல்வேலி, ஆதிச்சநல்லூர் ஆகிய இடங்களில் கிடைத்த ஈமத்தாழிகளும், சேவற்சிலை முதலியனவும் அங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும் பொன்பரிப்பு (மேற்குக் கரையோரம்), வளவகங்கைப் பள்ளத்தாக்கு (தென்கரையோரம்), மாதோட்டம் போன்ற இடங்களில் கிடைக்கப்பெற்ற ஆதாரங்களையும் கொண்டு நோக்கும் போது இலங்கை முழுவதும் மிகத் தொன்மையான காலத்திலிருந்து முருக வழிபாடு நிலவியது என்பது தெளிவாகத் தெரியவருகின்றது.

முருகன்மீது பக்திகொண்ட அருணகிரிநாதர் கதிர்காமக் கந்தன்மீது 13 பாடல்களையும் திருகோணமலை முருகன்மீது ஒரு பாடலும், நல்லூர்க் கந்தன்மீது ஒரு பாடலும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி 1478 - 1515வரை நல்லூரிலிருந்து யாழ்ப்பாண இராச்சியத்தினை ஆண்ட பரராஜசேகரன் காலத்திலே முருகனின் புகழ்பாடும் பள்ளுப் பிரபந்தமான கதிரமலைப் பள்ளு பாடப்பட்டுள்ளது. பள்ளுப் பிரபந்த வரிசையிலே இதுவே முதலில் தோன்றியது என ஆய்வாளர்கள் உரைக்கின்றனர். பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து இலங்கையில்

*உற்சாகம் உள்ளவனை எந்த எதிர்ப்பாலும் தடைசெய்துவிட முடியாது.*

புகழ்வாய்ந்த முருகத் தலங்களான கதிர் காமம், மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி, நல்லூர், மண்டூர், வெருகல், திருக்கோயில் போன்ற ஆலயங்கள் சிறப்பிடம் பெற்று விளங்கு கின்றன. இவ்வாலயங்களில் எழுந்தருளியுள்ள இறைவன்மேல் பாடப்பட்ட பிரபந்தம், தனிப் பாடல்கள் என்பன புலவர்களால் பாடப்பட்டு உள்ளது. இம்மரபு இன்றும் தொடர்ந்து கொண்டிருப்பதைக் காணலாம்.

இலங்கையிலே சிறப்பாக யாழ்ப் பாணத்திலே கந்தபுராணம் சைவ மக்கள் இடையே முக்கிய இடம்பெற்றுள்ளது. முருகன் ஆலயங்களில் மட்டுமன்றி சிவாலயங்களிலும் கந்தசஷ்டி விரதம் மற்றும் ஏனைய விரத காலங்களிலும் கந்தபுராணம் படிக்கப்பட்டு பொருள் கூறும் வழக்கமும் நிலவிவருவதைக் காணலாம். இம்முறை புராணபடனம் என்று அழைக்கப்படுகின்றது. பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை இம்மரபு இந்நாட்டிற்கே உரியது என்கிறார்.

இலங்கையிலே எத்தலங்களிலும் இல் லாதளவிற்கு முருக தலங்களில் மகோற்சவங் கள் நிகழ்வது வழக்கம். பல்லாயிரக்கணக் கான முருகனடியார்கள் அக்காலங்களில் பக்திப் பரவசத்துடன் ஆலயம் சென்று வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமானை வழிபட்டு உய்வர். சைவர்கள் மட்டுமன்றி பௌத்தம், இஸ்லாம் மக்களும் இவ்விழாக் களிற் கலந்து வழிபாடுகளை இயற்றி வரு வதைக் காண முடிகின்றது. இலங்கையில் பிரசித்தி பெற்ற ஆலயமாக விளங்கும் கதிர காம முருகன் ஆலயமானது இலங்கையில் உள்ளவர்களுக்கு மட்டுமன்றி தமிழகம் மற்றும் அயல்நாட்டில் உள்ளவர்களுக்கும் மிகவும் சிறப்பான யாத்திரைத் தலமாக விளங்கு வதானது ஈழத்தில் முருக வழிபாடு உன்னத நிலையினைப் பெற்று மிளிர்வதை எடுத்தியம்பு கின்றது.

முருகப் பெருமான் வீதிஉலா வரும் போது பஜனைக் குழுக்கள் பின் தொடர்ந்து கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருமுறைகள் எனப் பல இசைப்பாக்களை இசைத்துக் கொண்டு செல்ல பல முருகன் அடியார்கள் அங்கப்பிரதட்சணம், காவடி எடுத்தாடல், கற்பூரச்சட்டி சுமந்து செல்லல் போன்ற அற் புதச் செயல்களை நிகழ்த்துவதை கண்ணு டாகக் கண்டுகளிக்க முடிகின்றது. அதுமட்டு மன்றி சிறுவர்முதல் பெரியவர்வரை தன் இரு கரங்களையும் சிரசுக்கு மேலாகத் தூக்கி "அரோஹரா" என்று ஆர்ப்பரிக்கும் அந்த வார்த்தை அனைத்து அடியார்கள் மனதையும் உருகச் செய்து தன்நிலை மறந்து மெய் மறக்கச் செய்கின்றது.

எனவே மேற்கூறப்பட்ட விடயங்களை எடுத்து நோக்கும்பொழுது ஈழத்திலே இன்று நேற்று அல்ல பண்டைக் காலம் தொட்டு இன்றுவரை முருக வழிபாடு தொடர்வதையே காணமுடிகின்றது.

அவன்றாள் வணங்கிப் பெறும் அருள் எப்போதும் இருக்கிறது. யன்னலைத் திறந்தவுடன் காற்று வீசுகிறது. காற்று முன்பும் இருந்தது. தடுத்திருந்த யன்னலைத் திறந்தவுடன் வீசிற்று. காற்று புதிதாய் வீசியதல்ல. கொஞ்சம் இலகுவாக்கிவிட வேண்டும். அதாவது தன்னைப் பரிசுத்தமாய் வைத்திருக்க அருள் வெளிப்படும்.

*வறுமை இனிய பண்புக்குச் சோதனைக் கருவி.*

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 10. ஆனந்தாதீதம்

103. மன்ன வெம்பிரான் வருக வென்னெனை
மாலு நான்முகத் தொருவன் யாரினும்
முன்ன எம்பிரான் வருக வென்னெனை
முழுதும் யாவையும் இறுதி யுற்றநாட்
பின்ன எம்பிரான் வருக என்னெனைப்
பெய்க ழற்கண் அன் பாயென் னாவினாற்
பன்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பாவ நாசநின் சீர்கள் பாடவே.

**ப-ரை:**

மன்ன- எங்கள் அரசனே, எம்பிரான்- எங்கள் தலைவனே, எனை வருக என்- அடியேனை நின்பால் வருக என்று அழைத்தருள்வாயாக, மாலும் நான்முகத்து ஒருவன் யாரினும் முன்ன- திருமாலினும் நான்முகத்தொருவனாகிய பிரமனிலும் மற்றை எவ்வகை மேம்பட்டாரினும் முற்பட்டவனே, எம்பிரான்- எங்கள் தலைவனே, எனை வருக என்- அடியேனை நின்பால் வருக என்று அழைத்தருள்வாயாக; முழுதும் யாவையும் இறுதி உற்ற நாள் பின்ன- எல்லா வுலகங்களும் எல்லாப் பொருள்களும் நின்பால் ஒடுங்குதலுற்ற பேரூழிக் காலத்துக்குப் பின்னரும் ஒடுங்குதலின்றி நிலைபெற்றிருப்பவனே, எம்பிரான்- எங்கள் தலைவனே, எனை வருக என்- அடியேனை நின்பால் வருக என்று அழைத்தருள்வாயாக; பாவநாச- உயிர்களின் பாவங்களை ஒழிப்பவனே; எம்பிரான்- எங்கள் தலைவனே, பெய் கழல் கண் அன்பாய் என் நாவினால் நின் சீர்கள் பன்ன பாட- இட்ட வீரக்கழலிணையுடைய திருவடிக்கண் மெய்யன்புடை யேனாய் எனது நாவினால் நினது மிக்க புகழ்களைப் பிறர்க்கு எடுத்துச் சொல்லவும் இசையுடன் பாடவும், எனை வருக என்- அடியேனை நின்பால் வருக என்று அழைத்தருள்வாயாக.

மன்ன, எம்பிரான் எனை வருக என்று அழைத்தருள்வாயாக. திருமாலினும் பிரமனிலும் மற்றை யாரினும் முற்பட்டவனே, எம்பிரான், எனை வருக என்று அழைத்தருள்வாயாக; எல்லா வுலகங்களும் எல்லாப் பொருள்களும் இறுதியற்ற பேரூழிக் காலத்துப் பின்னரும் ஒடுங்குதலின்றி நிலைபெற்றிருப்பவனே, எம்பிரான் என்ன வருக என்று அழைத்தருள்வாயாக; பாவநாச, எம்பிரான் இட்ட வீரக்கழலிணையுடைய திருவடிக்கண் மெய்யன்புடையேனாய்

*சிறு துணிவு இல்லாததால் உலகில் பல திறமைகள் சிதறிப்போகின்றன.*

எனது நாவினால் நினது மிக்க புகழ்களைப் பிறர்க்கு எடுத்துச் சொல்லவும் இசையுடன் பாடவும் எனை வருக என்று அழைத்தருள்வாயாக என்பதாம்.

மன்னன் என்பது மன் எனும் இடைச் சொல்லடியாகப் பிறந்த பெயர். அது நிலை பெறுதற் பொருளில் வந்து ஈறுகெட்டு விளியாயிற்று. அங்ஙனமாயினும் பொதுவகையான் மன்னன் என்பதற்கு அரசன் எனப் பொருளுரைக்கும் வழக்காறுண்மையால் அரசனே என்னும் பொருளுரைக்கப்பட்டது.

யாரினும் என்புழி உறள் பொருளில் வந்த இன்னை மாலினும் எனச் சேர்த்தும், இன்னையும் உம்மையும் நான்முகத்தொருவன் என்பதனோடும் சேர்த்தும் பொருளுரைக்கப்பட்டது. யாரினும் என்பது எவ்வகை மேம்பாட்டினரும் என்னும் பொருளில் வந்தது. அதனாற் குறிக்கப் பட்டவர் உருத்திரர் அனந்தர் முதலானோர். இங்ஙனம் கொள்ளாது திருமாலும் பிரமனும் முதலிய தேவர்கள் யாரினும் எனப் பொருளுரைப்பது சிறப்புடைத்தாகாது. இறைவன் திருமால் பிரமன் அன்றி அவரினும் மேம்பட்ட உருத்திரன் முதலாயினாரினும் மேம்பட்டவன் என்பதை,

"மாவேறு சோதியும் வானவரும் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பி" (கோத்1)

என அடிகள் அருளிய திருவாக்கானுமறிக.

முன்னவன் பின்னவன் என்பன விளிக்கண் முன்னபின்ன என வந்தன. முழுதும் யாவையும் என எஞ்சாமைப் பொருள்படக் கூறியது உலகங்கள் எல்லாவற்றையும் அவற்றிலுள்ள பொருள்கள் எல்லாவற்றையும் அடக்குதற் பொருட்டாகும். அவை தனு கரண புவன போகங் களாகும். யாவையும் இறுதியுற்ற நாள் என்றது பேரூழிக் காலத்தை, "ஓதத்தொலி மடங்கி யூருண்டேறி யொத்துலகமெலா மொடுங்கிய பின்" நாவு 248:2. இதனை வடநூலார் சர்வசங்கார காலம் என்பர். முன்னவன் பின்னவன் என்பன தோற்றமுடைய எவருக்கும் எவற்றுக்கும் முன்னே தான் தோற்றமின்றியுள்ளவன் எனவும், பேரூழிக்குப் பின்னேதான் இறுதியின்றியுள்ளவன் எனவும் பொருள்படுவனவாகும். இதன் தாற்பரியம் தோற்றமும் ஒடுக்கமுமின்றி அநாதி நித்தியன் என்பதாகும்.

"விண்ணை மடங்க விரிநீரபரந்து வெற்புக் கரப்ப
மண்ணை மடங்க வருமொருகாலத்து மன்னி நிற்கும் அண்ணல்"
(கோவை 75)

"முன்னு மொருவரி ரும் பொழின் மூன்றற்கு முற்று மிற்றாற்
பின்னு மொருவர் சிற்றம்பலவர்"
(கோவை 160)

"மூப்பா னிளையவன் முன்னவன் பின்னவன்" (கோவை 312)

எனத் திருக்கோவையாரினும்

"பின்றானு முன்றானு மானான்றன்னை" (நாவு 224:2)

"முன்னவன் காண் பின்னவன் காண் மூவாமேனி முதல்வன் காண்"
(நாவு 261:8)

"முன்னுமாய் பின்னுமாய் முடிவானான் காண்" (நாவு 298:4)

எனத் தேவாரத்தும் வருவன காண்க.

*களங்கமற்ற மனது, மிகச் சிறந்த அறிவாற்றலைவிட மேலானது.*

பெய்கழல்- இட்ட கழல். கழல் ஈண்டு திருவடியை உணர்த்தியது. கழற்கண் அன்பாய்- திருவடிக்கண் அன்புடையனாய். "வேண்டு நின் கழற் கன்பு" (சத 74) என அடிகள் திருவடியன்பை வேண்டுதல் காண்க. பன்ன- நின் சீரகளை அறியாதவர்க்கு எடுத்துச் சொல்ல. பன்னல்- சொல்லல். "பன்னிய பனுவற் பார்ப்பன குறுமகள்" பெருங் (2) 3-30 என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. பாட என்றது அப்புகழ்களை அமைத்து இசைப்பாடல்களைப் பாட என்றவாறு. நாவினாற் பன்ன பாட வருக என் என முடியும். என் என்பது பகுதி மாத்திரையாய் முன்னிலை ஏவலொருமை வினைமுற்றுப் பொருளில் வந்தது. "எனை வருக என்" என நான்கு முறை வேண்டிக் கொண்டது இறைவனை அணுகும் ஆர்வ மிகுதியாலாகும். பாவ நாசன்- உயிர்களின் பாவங்களை ஒழிப்பவன்.

| | |
|---|---|
| "பண்டு நாம் செய்த பாவங்கள் தீர்ப்பார்" | (ஞான 41:10) |
| "பாதந் தொழுவார் பாவம் தீர்ப்பார்" | (ஞான 67:1) |
| "நினைத்துத் தொழுவார் பாவம் தீர்க்கும் நிமலா" | (ஞான 69:6) |
| "பணியு மடியார்களன பாவமற இன்னருள் பயந்து" | (ஞான 340:4) |
| "பத்தர் தம் பாவந் தீர்க்கும்.... அத்தனார்" | (நாவு 68:10) |
| "தன் அடைந்தார் தம்..... பாவமெலாம் அரித்தானை" | (நாவு 279:2) |
| "பாவம் தீர்க்கும் அருமணியை" | (நாவு 242:1) |

எனத் தேவாரத்தும் வருவனவுங் காண்க. புண்ணியங்களும் உயிர்கள் கதியடைவதற்கு பொன் விலங்கு போலத் தடையாகவுள்ளனவன்றோ அவற்றை யொழித்தல் வேண்டாவோவெனின் பாவம் நீங்கிய உயிர்கள் செய்யும் புண்ணியங்கள் பயன் கருதாது செய்யும் நிஷ்காமிய கருமங்களாய் வீடுபேற்றிற்கு ஏதுவாதல் பற்றி அவற்றை ஒழித்தல் கூறப்பட்டிலது.

இதன்கண், "வருக என் னெனை" எனப் பலகாற் கூறுமுகத்தால் அடிகள் ஆனந்தாதீத நிலையை விரும்புதல் மிகுதியாகப் புலப்படுதலின் ஆனந்தாதீதம் என்னும் பத்தாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 99.

**104. பாட வேண்டும்நான் போற்றி நின்னையே**
**பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்**
**காட வேண்டும்நான் போற்றி யம்பலத்**
**தாடு நின்கழற் போது நாயினேன்**
**கூட வேண்டும்நான் போற்றி யிப்புழுக்**
**கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்**
**வீட வேண்டும்நான் போற்றி வீடுதந்**
**தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே.**

**ப-ரை:**

நின் மெய்யர் மெய்யனே- நின்னுடைய மெய்யடியார்களுக்கு மெய்ப் பொருளாயுள்ள வனே, நான் நின்னையே போற்றி பாட வேண்டும்- அடியேன் மற்றெவரையும் வணங்காது நின்னையே வணங்கி உன் புகழ்களையே பாட அருள் செய்ய வேண்டும். நான் போற்றி

*பெற்றுக்கொள்பவன் அல்ல, கொடுப்பவனே பேறு பெற்றவன்.*

பாடி நைந்து நைந்து நெக்கு நெக்கு உருகி ஆட வேண்டும்- அங்ஙனம் நான் நின்னை வணங்கிப் புகழ்களைப் பாடி நின்னைக் காணும் அவாவினால் உள்ளம் வருந்தி வருந்தி நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகி யான் ஆனந்தக் கூத்து ஆட அருள்செய்ய வேண்டும், நாயினேன் நான் போற்றி அம்பலத்து ஆடு நின் கழல் போதுகூட வேண்டும்- கீழ்மையுடையேனாகிய அடியேன் நின்னை வணங்கித் தில்லைத் திருச்சிற்றம்பலத்தின் கண் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்ற நின் வீரக் கழலினையுடைய திருவடி மலர்களைச் சார்ந்து தரிசிக்க அருள் செய்தல் வேண்டும்; போற்றி எனை இப் புழுக்கூடு நீக்கு- நினக்கு வணக்கம்; அடியேனை இப்புழுக்கூடாகிய உடம்பினின்றும் நீக்கியருள வேண்டும் நான்- நின்னை வணங்கி நிலையற்ற பொய்யாகிய இவ்வுலக பந்தங்கள் எல்லாவற்றினும் நீங்கும்படி அருள் செய்ய வேண்டும், வீடு தந்தருளு போற்றி- அந்தமில் இன்பத் தழிவில் வீட்டைத் தந்தருளுக; நினக்கு வணக்கம்.

நின் மெய்யடியவர்களுக்கு மெய்ப்பொருளாக வுள்ளவனே, அடியேன் நின்னையே வணங்கி நின் புகழ்களையே பாட அருள் செய்ய வேண்டும்; அங்ஙனம் நான் நின்னை வணங்கிப் புகழ்களைப் பாடி நின்னைக் காணும் அவாவினால் உள்ளம் நைந்து நைந்து நெக்கு நெக்கு உருகி நான் ஆனந்தக் கூத்து ஆட அருள் செய்ய வேண்டும். கீழ்மையுடையேனாகிய நான் நின்னை வணங்கித் திருச்சிற்றம்பலத்தின் கண் ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளுகின்ற நின் திருவடி மலர்களைச் சார்ந்து தரிசிக்க அருள் செய்தல் வேண்டும். நினக்கு வணக்கம்; அடியேனை இப்புழுக் கூட்டினின்றும் நீக்கியருள வேண்டும். நான் நின்னை வணங்கிப் பொய்யாகிய இவ்வுலக வாழ்வினின்றும் நீங்கும்படி அருள் செய்ய வேண்டும். வீடு தந்தருளுக. நினக்கு வணக்கம் என்பதாம்.

நின்னையே பாடவேண்டும் எனக் கூறினும் நின் புகழ்களையே பாடவேண்டும் என்பது கருத்தாகக் கொள்க. நின்னையே என்பதில் ஏகாரம் பிரிநிலை. பாடி என்றது முன்னர்ப் பாட வேண்டும் என்பதை அனுவதித்தது. நைதல்- வருந்துதல். "நைந்துள்ளி, யுகுவதுபோலு மென்னெஞ்சு" (கலி 33:15-16) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. நைதல் ஈண்டு பிரிந்து மறைந்த இறைவனைக் காணும் அவா மிகுதியால் வருந்துதலை உணர்த்தியது. நைந்து உருகி என இயையும். "உடைந்து நைந்துருகி" (ஆசைப் 4) என வருதலுங் காண்க. நெக்கு- நெகிழ்ந்து. நெகிழ்தல் உருகுதற்கு முன் நிகழும் வினை. நெக்கு நெக்கு உருகி எனக் கூட்டுக. "ஊற்று மணற் போல் நெக்கு நெக்குள்ளே உருகி", "நெக்கு நெக்குள் ளருகி யுருகி" (புணர்ச்சிப் 2,8) என அடிகள் அருளியமை காண்க. ஆடுதல்- ஆனந்தக் கூத்தாடுதல்.

அம்பலத்தாடு நின் கழல்- தில்லைச் சிற்றம்பலத்தாடும் நின் திருவடி.

"அம்பலத் தாடினானுக்கு" பொற் 11

"அம்பலத்தாடு கின்ற என்பொலா மணியை" அச்சப் 3.

என இத்திருவாசகத்தும்,

"தில்லைச் சிற்றம்பலத்துப் பயில்கின்ற கூத்தன்" (18)

"அம்பலத்து ஆடும்பிரான்" (19)

"அம்பலத்தாடு முன்னோன்" (65)

"சிற்றம்பலத் தாடுமெங் கூத்தபிரான்" (204)

*துன்பத்தைச் சந்திக்கத் தெரிந்தவனுக்கு வாழ்க்கையில் தோல்வியே இல்லை.*

"அம்பலத்துக் குனிக்கும் பிரான்" (229)
"சிற்றம்பலத்து நடம்பயல் வோன்" (263)

எனத் திருக்கோவையாரினும் வருவன காண்க. கழல்- கழலணிந்த திருவடி. "செயன் மன்னஞ் சீரக் கழற் சிற்றம்பலவர்" 395 எனத் திருக்கோவையாரில் வருதலுங் காண்க. கழல்போது- திருவடி மலர். "தில்லையோன் அடிப்போது" (கோவை 181) என வருதலுங் காண்க. "வீடு தந்தருளு" எனப் பின்னர் வருதலால் "அம்பலத்தாடு நின் கழற்போது கூடவேண்டும்" என்பதற்குத் தில்லைச்சிற்றம்பலத்தின் கண் ஆனந்தத் தாண்டவஞ் செய்யும் நின் திருவடி மலர்களைச் சார்ந்து தரிசிக்க அருள்செய்ய வேண்டும் எனப் பொருளுரைக்கப்பட்டது.

புழுக்கூடு- புழுக்கூடாகிய உடம்பு. "ஊனார் புழுக்கூடு" "முடையார் புழுக்கூடு" (சத59,60) "புழுக்கணுடைப் புன் குரம்பை" (அடைக்1) "முழுப்புழுக் குரம்பை" (பிடித்) "புழுவினாற் பொதிந்திடு குரம்பை" (சென்னிப்8) எனப் பிறாண்டு அருளியவாறுங் காண்க. இறைவன் திருவடி மலரை அடைதற்கு இவ்வுடம்பு தடையாக இருத்தலின் "இப்புழுக்கூடு நீக்கு" என்றார். விடவேண்டும்- நீக்க வேண்டும் என்றது நீங்க அருள்செய்ய வேண்டும் என்றவாறு. நீக்கு அருளு என்னும் வினைமுதல்கள் நீக்குவாய் அருள்வாய் என்னும் முன்னிலை யேவலொருமை வினைமுற்றுப் பொருளில் வந்தன. அருளு என்பதில் உ, சாரியை.

மெய்யர் என்றது மெய்ம்மையுடையவர்கள் எனப் பொருள்படுமாயினும் நின் மெய்யர் என்றதனால் மெய்யன்புடைய அடியவர்களை உணர்த்தியது. மெய்யர்க்கு என நான்காவது விரிக்க. மெய்யனே என்பதற்கு மெய்ப்பொருளாக நின்று அருள் செய்பவனே என்பது கருத்தாகக் கொள்க. "மெய்யர் மெய்யை" (பொற்கண் 12) "அடியவர் படுதுயர் களைவதோர் வாய்மையர்" (ஞான 344:2) "மெய்யர்க்கு மெய்ப் பொருளான விமலனை", "மெய்யர் மெய்ப்பொருளோ" (சுந் 45:11; 52:2) என வருவன காண்க.

இதன்கண், "இப்புழுக்கூடு நீக்கு", "வீடு தந்தருளு" என்பவற்றால் வீட்டின்பமாகிய ஆனந்தாதீதத்தை விரும்புதல் புலப்படுதலின் ஆனந்தாதீதம் என்னும் ப்த்தாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 100

(தொடரும்...

---

### ஐம்பூதமும் மானுடரும்

ஐம்பூதமாவன பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகும். இவை முறையே நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம் என்பனவே. மனிதனுக்கு வெளியேயும் உடலுள்ளேயும் வியாபித்து இருக்கின்றன.

"வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்" என்ற திருக்குறளில் தெய்வப்புலவர் திருவள்ளுவர் கூடா ஒழுக்கம் உடையவனது நெஞ்சத்துள் இருக்கும் ஐந்து பூதமும் தம்முள்ளே வெட்கப்படும் என்று கூறுகிறார். இவை மனித வாழ்வியக்கத்திற்கு காப்பரணாகவும் வாழ்வாதாரத்திற்கும் மிகப்பெரும் உறுதுணை என்றால் அது மிகையாகாது.

ஒரு மனிதனது உடலினுள்ளே நெருப்பு என்பது இருக்கும் வரையில் அவன் உயிர் வாழ்வான். உயிர் பிரிந்தபோதே அவனின் உடலம் சடலம் ஆகின்றது. உயிரானது பிரியும் வேளையில் நெருப்பு, காற்று, வானம் என்பன அகன்றுவிட மண்ணும் நீரும் தான் சடலத்தில் இருக்கும்.

*-இராஜா தர்மலிங்கம்-*

*சிந்திக்கத் தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவையில்லை.*

# வல்லிபுர மாயவனும் பலாப்பழமும்

– **திரு முருகவே பரமநாதன்** அவர்கள் –

விராட புருடனது சரீரமாகிய பிரம் மாண்டத்தின் இடைநாடி ஸ்தானம் எனப் பெற்றதும், பெருமை பொருந்திய மகாமேரு மலையின் கொடுமுடியாக விளங்கப்பட்டதும், சுந்தரமூர்த்தி நாயனார்- திருஞானசம்பந்த நாயனார் என்பவர்களால் பாடல் சான்ற சிவ சேத்திரங்களையும், தேவர் இருடிகள் என்பவர் களால் தாபிக்கப்பட்ட சிவத் தலங்களையும் கலியுகத்திலே கண்கண்ட பரம்பொருளெனப் பாருளோர் போற்றுகின்ற கதிர்காமத்தையும், சிவனொளிபாதம் போன்ற திவ்விய சேத்திரங் களையும், புண்ணிய தீர்த்தங்களையும் தன் பாலுடையதும், தமிழ் மன்னரால் நெடுங் காலம் செங்கோல் செலுத்தப்பட்டதும் மலை படு காடுபடு திரவியங்களையுடையதும், நீர்வளம் நிலவளம் நிறைந்ததும், இரத்தினம் எடுக்கப்படுவதும் ஆன இலங்காபுரியில் இரா மனது பாத பங்கயங்கள் படிந்த பெருமை மிக்கதுமான (இலங்காபுரியின்) வடக்கின் கண்ணேயுள்ள யாழ்ப்பாணத்து வடகீழ் பகுதி யான வடமராட்சியின் வங்கக் கடலுக்கு அணித்தாக, ஆன்ம கோடிகளை இரட்சிக்கும் பொருட்டு ஸ்ரீபூமி நாயகராகிய பகவான் மகா விஷ்ணு மூர்த்தியானவர்- மச்சாவதாரமாகிய திரு வடிவத்தை எடுத்து- காத்தற் கடவுளாய் "வல்லிபுரம் என்னும் திவ்விய ஷேத்திரத்தில் கோயில் கொண்டு வீற்றிருந்து அருளினார். ஆனபடியால் இப்பதியானது மற்றைப் பதி யினும் மேலான சுயம்பு ஸ்தலமாய் விளங்கு கிறது. எழுவான் திசையில் வல்லிபுர ஆழ் வார் ஆலயமும் படுவான் கரையில் (சுவர் ணாலயம்) பொன்னாலை வரதராஜப் பெரு மாள் கோயிலும் அமைந்துள்ளன எனத் தட் சிண கைலாய மான்மியம் கூறுகிறது. இவ் வண்ணம் புகழ்பூத்த இவ்வாலயத்தில் பல சதாப்தங்கட்கு முன் ஓர் அதிசயமான சம்பவம் நடந்தது.

அக்காலத்திற் பூசகராயும் முகாமை யாளராயும் இருந்த தாமோதர உடையார் வழமைபோல் ஓர்நாட் தன் கோயிற் பூசையை முடித்துக்கொண்டு வந்து, வழமைபோல் கவடு கிராய்த் தாமரைக்குளம் உள்ள பகுதியில் அமைந்த தன் வயலில் உழுது கொண்டிருந் தார். மேற்கு ஊரவர் ஒருவர் கோயிலுக்குத் தன் நேர்த்தியை நிறைவேற்றப் போனார். கோயிலுக்குப் போன அப் பக்தர் கோயிலிற் பூசகரைக் காணாமையால் மீண்டும் அவர் வீட்டைத் தேடி வந்தார். இப்படிப் போகும் வழியிலே, தாமரைக் குளக்கரையில் உழுது கொண்டு நின்ற பூசகர் தாம் உடையாரைக் கண்டு நடந்த சம்பவத்தைக் கூறியதும் அருகே இருந்த தாமரைக் குளக்கரையில் அவர் கொண்டுவந்திருந்த பலாப்பழத்தை வெட்டி, நைவேத்தியம் செய்து, பாதியை எடுத்துக்

*உயர்ந்த எண்ணம் கொண்டவர்களுக்கு தனிமை என்பதே இல்லை.*

கொண்டு மீதியை அந்த அடியாரிடம் கொடுத்து விட்டார். அந்தப் பெரியவர் மிக்க மன வேதனையுடன் வீடுவந்து சேர்ந்தார். இரவு அவர் நித்திரை செய்யும்போது, வல்லிபுர சுவாமி கனவிற் தோன்றி "உன்னுடைய பலாப்பழம் மிகவும் இனிமையாய் இருந்தது. அடுத்தமுறையும் ஒன்று கொண்டுவா" எனத் திருவாய் மலர்ந்தருளினர். அவ்வடியார் அடுத்தநாள் வைகறையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, நீராடி மரத்தில் இருந்த பழமொன்றை வெட்டிக்கொண்டு பெட்டியில் வைத்துக் கால் நடையாக ஆழ்வார் சுவாமி ஆலயத்தை அடைந்து, பூசகரிடம் விபரத்தைச் சொல்லிக் கொடுத்தார். அர்ச்சகர் அப்பழத்தைப் பூசையில் வைத்து நிவேதனம் செய்து, பக்தருக்குப் பாதியைக் கொடுத்தார். அப்பெருமாள் அடியவர் வீதிவலம் வந்து எம்பெருமானை வழிபட்டு வீட்டுக்குச் சென்றார். எம்பெருமானின் திருவருள் கிடந்தவாறு என்னே. இந்த நிகழ்வைப் பிள்ளைத்தமிழ்ப் பெரும்புலவர் ஏழாலையூர் மு. கந்தையா அவர்கள் ஓர் பாடலிலே வடித்துள்ளார்.

காவுதொறும் வட மதுரைக் கன்னியர் குழாம் வைத்த
கனத்த ரக முத்தம் நானும்
கடலிடைப் பிறந்து நின் உடலிடை இருந்ததிரு
கனிவா யின் முத்த நானும்
தேவு மிகு பாஞ்ச சன் னியமுத்தம் வேய்முத்தஞ்
செம்மையின் நாறுமலதும்
திவ்வியத் தயிர்நாறும் நெய்நாறும் ஆய்ச்சியொடு
பேய்ச்சிமுலை யமுதுநாறும்
பாவுமன் பாளர்தம் பரிவகல அன்றுநின்
பாசமார் பூசகர் செப்பச்
பசுந்தரை நிவேதித்த பலாப்பழச் சுவையும்
பகர்ந்திடின் நாறு மென்சீர்
மேவு பொன் னிதழ்கள் கொடு தேவகி செழும்பால
விகிர்த முத்தந் தருகவே
விருஷ்ணிகுல தீபமாய் மேவியுல கிடர்தீர்க்கும்
வீர முத்தந்தருகவே

முத்தம் பருவம் 7.
வல்லிபுர மாயவன் பிள்ளைத்தமிழ்.

***உரைவளம்:***

பருவப்பெயர் முத்தமென்பதற்குப் பொருந்த தாய்மார் கொடுக்கும் அன்பு முத்தமல்லாத மற்றும் பல வேறு முத்தங்கள் மாயவனது இதழ்களுக்குப் பரிச்சயமாய் இருப்பதும் முத்தம் நாறும் என்ற வழக்குக்கு ஒப்ப முத்தமல்லாத ஒன்றும் வல்லிபுர மாயவன் இதழில் நாறுமென்னும் ஒரு கற்பனையை முன் வைத்திருக்கிறது இப்பாடல். இலக்குமி முத்தம், வடமதுரைக் கன்னியர் முத்தம், பாஞ்சசன்யமும் புல்லாங்குழல் தரும் முத்தம் என அமையும். தயிர் நாறும், நெய் நாறும், பலாப்பழச்சுவை நாறும் என வருவன மணத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

*துன்பத்தைப் போன்ற பயிற்சிக் கருவிகள் வேறு இல்லை.*

# ஆனந்தக் கிருஷ்ணனின் அற்புத லீலைகள் (தொடர்ச்சி...

– **திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்** அவர்கள் –

**ராதையின் பிரேம பக்தி**

கண்ணன் குழந்தையாக இருந்தபோது முதன் முறையாக மற்றக் கோகுலச் சிறுவர்களுடன் மாடுமேய்க்கப் புறப்படுகிறான். யசோதைக்கு மனம் பதை பதைக்கிறது.

மாடு மேய்க்கும் கண்ணா
நீ போகவேண்டாம் கண்ணே
போக வேண்டும் தாயே
தடை சொல்லாதே நீயே.

கண்ணன் போகப் புறப்பட யசோதை திருஷ்டி சுற்றி அனுப்புகிறாள். கண்ணன் மாடு மேய்க்கும் அழகைக்கண்டு ஆனந்திக்க, அவனையறியாமலே பின் தொடருகிறாள். கோகுலத்துக் கோபி ராதிகா எனும் ராதா. கண்ணனை நிழலாகத் தொடர்ந்து, மாடு மேய்க்கும் அழகை மறைந்திருந்து பார்க்கிறாள். அப்போது எதிரே இருந்த மூங்கில் ஒன்றை வண்டு துளைப்பதைப் பார்க்கிறாள். மூங்கிலிலுள்ள தேனைப் பருக வண்டு மூங்கிலைத் துளைத்து உள்ளே செல்லும். இப்படி மீண்டும், மீண்டும் உள்ளே சென்று வந்து துளைகளைப் போட்டது. பலமாக வீசிய காற்றில் மூங்கில் ஆட, துளைகள் வழியே நுழைந்த காற்று இனிமையான குழலோசையை எழுப்பியது. சட்டென ராதை மனதில் ஓர் எண்ணம் பளிச்சிட்டது. அந்த மூங்கிலை முறித்து ஒரு புல்லாங்குழலாக்கி கண்ணனிடம் கொடுத்து ஊதச் சொன்னாள். கண்ணன் விரல்கள் லாவகமாகக் குழலை வருட, குழலை ஊத தெய்வீககானம் பிறந்தது. இதுவே புல்லாங்குழல் பிறந்த கதை.

பசுக்களும், கன்றுகளும், வனவிலங்குகளும் தங்களை மறந்து கண்ணன் குழலோசையில் மயங்கின. குழலிலிருந்து பிறந்த தெய்வீக நாதம் ராதையைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தியது. இப்படிக் கண்ணன் கையில் புல்லாங்குழலைத் தந்து, குழலூதும் கண்ணனாக்கியவள் ராதை. எங்கோ யமுனைக் கரையில் கண்ணன் இசைத்த குழலோசை, ராதையை எப்போதும் பேரானந்தத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தது.

புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே
எங்கள் புருஷோத்தமன் புகழ் பாடுங்களே
வண்டாடும் கங்கைமலர்த் தோட்டங்களே
எங்கள் மதுசூதனன் புகழ் பாடுங்களே

..............................................................

*இயற்கை ஒரு வேலையை முடிப்பதற்காகவே ஓர் அறிஞனைப் படைக்கிறது.*

காலம் சுழன்றது. குழந்தையாகக் கோகுலத்திலே விளையாடிய கண்ணன், இப்போது குருஷேத்திர வீரனாக, தர்மஸ் தாபனப் பணியில் ஈடுபடும் நேரம் வந்தது. கண்ணன் குருஷேத்திரம் புறப்படுமுன் நந்த கோபரும், யசோதையும் கண் கலங்கினர். கோபாலர்கள் வருந்தினர். கோபியர்கள் துயரத் தால் துடித்தனர். எல்லோரும் கலங்கிக் கதறிக் கொண்டிருக்க ராதை மட்டும் தெளிவாக இருந் தாள். கண்ணனை இதயத்திலே எப்போதும் நீங்காமலேயே வைத்துக்கொள்ளும் வழிமுறை யையும் தெரிந்து வைத்திருந்தாள். கண்ணன் ராதையைச் சந்தித்து விடைபெற வந்தான். வழக்கமான தெய்வீக ஆராதனைகளும், சேவையும் செய்தாள். "கண்ணா! ஒருமுறை உன் குழலோசையைக் கேட்க விருப்பம்" என்றாள். கண்ணன் குழலை இசைக்க ராதை பிரேம பக்தியால் தன்னை மறந்திருந்தாள். திடீரென, "கண்ணா! எனக்கொரு ஆசை. நிறைவேற்றுவாயா?" என்றாள். குருஷேத்திரப் போருக்குப் போகாதே என்று மட்டும் கேட்கா மல், வேறு என்னவரம் வேண்டுமானாலும் கேள்" தருகிறேன் என்றான்.

"கிருஷ்ணா! எனக்குத் தெரிந்தவரை நீ குழந்தைக் கண்ணன். அன்புத் தெய்வம். அமைதி காக்கும் தேவன். பாசமும், பற்றும், பரிவும், பண்பும் மிக்கவன். தர்மத்தைக் காக்க நீ போர்க்கோலம் பூண்டாலும், உன் உள்ளே அடங்கியுள்ள அந்த கோகுலக் கிருஷ்ணனை நான் கொடுத்த புல்லாங்குழலில் ஆவாகனம் செய்து என்னிடம் தந்துவிடு! நான் தினமும் ஆராதித்து என் மூச்சால் நிரப்பி, தெய்வீக நாதத்தை எழுப்பி, அந்த நாத மண்டலத்தில் உன்னுடன் இணைந்து வாழ்ந்து கொண்டிருக் கிறேன்" என்று வரம் கேட்டாள். கண்ணனும் ராதை கேட்ட வரத்தைத் தட்டாமல், தன்னையே தன் புல்லாங்குழலில் ஆவாகனம் செய்து ராதையிடம் கொடுத்தான். குழந்தைக் கண்ண னைப் புல்லாங்குழல் வடிவில் ராதை பெற்றுக் கொண்டபோது, பாஞ்சஜன்யம் எனும் சங்கம் கண்ணன் கையில் அமர்ந்து கோகுலக் கண் ணனை குருஷேத்திரக் கிருஷ்ணனாக்கியது. குருஷேத்திரத்தில் கண்ணன் தர்ம சங்கம் ஊதிக்கொண்டிருந்தபோது, பிருந்தாவனத்தில் ராதை பிரேம பாவத்துடன் புல்லாங்குழலை இசைத்துக் கொண்டிருந்தாள்.

குருஷேத்திரப் போர் முடிந்தது. தர்ம ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது. கண்ணனின் பாஞ்சஜன்ய முழக்கம் நின்றது. கண்ணனின் மனமே அமைதியையும் ஆனந்தத்தையும் தேடியது. குருஷேத்திரக் கண்ணன் கோகுலக் கண்ணனாக தனது பக்தர்களுடன் வாழ விரும்பினான். அவன் மூச்சு அவன் குழலைத் தேடியது. ராதையைத் தேடி வந்தான் கண் ணன். தன் புல்லாங்குழலை ஊத ஆரம்பிக் கிறான். கிருஷ்ணா! கிருஷ்ணா என்ற சப்தத் தையே எழுப்பியது. அது ராதை செய்த ஆராதனையின் மகத்துவம்!

அப்போது கண்ணன் கேட்டான், ராதா சதா சர்வகாலமும் கிருஷ்ணா! கிருஷ்ணா! என்று என்னையே எண்ணி, என்னையே ஆராதித்து, என் நாமத்தையே ஸ்மரித்து, புல்லாங்குழலின் ஓசையைக்கூட கிருஷ்ண சப்தமாக மாற்றியிருக்கிறாயே! இந்த ஆரா தனையில் அப்படி என்ன ஆனந்தமடை கிறாய்? என்றான்.

கிருஷ்ணா! உன்னைத் தரிசிப்பதில், நினைப்பதில், நாமத்தைச் சொல்வதில் கிடைக்கும் பேரானந்தத்தை வார்த்தைகளில் விளக்க ஏலாது. தெரிந்துகொள்ள ஆசைப் பட்டால் நீயே ராதையாக மாறி அந்தக் கிருஷ்ணனைத் தேடிப்பார்! அவன் நாமத்தைப்

*நேரத்திற்கு ஏற்ப பண்பை நிலை நிறுத்திக்கொள்.*

பாடிப்பார்! அவனைத் தரிசித்துப் பார்! அப்போது அந்தத் தெய்வீக ஆனந்தம் உனக்குக் கிட்டும். எத்தனை உண்மையான வார்த்தைகள். இதனை மெய்ப்பிப்பதற்காக பகவான் கிருஷ்ணர் கலியுகத்தில் கிருஷ்ண சைதன்யராகத் தோன்றி ராதையின் பாவத்தோடு தெருவெல்லாம் கிருஷ்ணா! கிருஷ்ணா என்று பக்திப் பரவசத்தில் பாடித்திரிந்து, கிருஷ்ணனைத் தேடித் திரிந்து கிருஷ்ண நாம மகிமையைக் காட்டியுள்ளார்.

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராமராம ஹரே ஹரே.

புல்லாங்குழல் மனித ஜீவன்கள் இரண்டிற்கும் ஒன்பது துவாரங்கள். அவற்றின் வழியே செல்லும் காற்று, குழலில் ஓசையாகவும், மனித உடலில் ஆசையாகவும் பரிமளிக்கிறது. மனிதன் ஆசைகளைவிட்டு வாழும்போது ஆன்மீகம் பிறந்து அமைதியும், ஆனந்தமும், தெய்வீகமும் பரிமளிக்கிறது. கிருஷ்ணனைத் தரிசித்து, அவனை நினைத்து, அவன் நாமத்தைப் பாடிப் பேரானந்தம் அடைவதே நாம் செய்யும் தவமாகும்.

பச்சை மாமலை போல்மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிரயான் போய் இந்திரபோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

### ராதா கிருஷ்ணனில் ஐக்கியம்

யமுனை நதிக்கரையில் யசோதையின் செல்லப்பிள்ளை கண்ணன் ஓடி ஆடி விளையாடும் பிருந்தாவனம், கனிகள், பூக்கள், தேன் சிந்தும் மலர்கள் கூடிய பூஞ்சோலை. அதில் தாமரை, அல்லிமலர் அமையப்பட்ட நீரநிலைகள். ஒரு மாலைப் பொழுதில் ராதை குளத்தருகில் இருந்த பளிங்கு மேடையில் வந்தமர்ந்தாள். இமைப்பொழுதும் நெஞ்சைவிட்டு நீங்காத நீலவண்ணச் சிறுவன் அவள் அகத்தில் தோன்றினான். பழைய நினைவுகள் மனதில் மயில்போல் அசைந்தது. பழைய நினைவுகளிலிருந்து மீண்டாள் மடந்தை. காற்றினிலே மோகனம் மிதந்து வந்தது. கண்ணன் வந்தான்.

"ப்ரியே! உனக்குராதா என்று பெயர்சூட்டி அழைக்க விரும்புகிறேன்"

"கோவிந்தனின் விருப்பம் கோபியின் பாக்கியம்" "ராத!" "கண்ணா!"

"ராதா! உனக்கு ஏன் இப்படியொரு பெயர் வைத்தேன் தெரியுமா"

"கண்ணா! உன்னையே என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. உன் எண்ணத்தையா என்னால் அறியமுடியும் நீயே சொல்!" மந்தஹாசத்துடன் மாதவன் கூறலானான். "ராதா! உன் ஆத்மார்த்த அன்பனான கண்ணனுக்கு என்ன பிடிக்கும்? "வெண்ணெய்". அப்புறம் நாவற்பழம். அதெல்லாம் சிறுபராயத்தில். இப்பொழுது என் கவனத்தைக் கவர்வது எது? "வேய்ங்குழல்" மிகவும் சரியாகக் கூறினாய். "கீதம் உள்ளத்தை உருக வைக்கும் இசை". கீதத்திற்கு ராகம், தாளம் இரண்டும் முக்கிய தேவை. அதுதான் நீ. அதெப்படி ராகத்தின் முதல் எழுத்து உன்பெயரில் "ரா" என்ற முதல் எழுத்து "தா" என்ற இரண்டாமெழுத்து தாளத்தின் முதல் எழுத்து ராகமும் தாளமும் கலப்பதுதான் கீதம். ராதா என்ற நீ என்

*உனக்குத் தெரியாததைத் தெரியாது என்று ஒப்புக்கொள்வதே அறிவு.*

மனதிற்கிசைந்த கீதம் "ராதா"! கண்ணா! என்று கூறிய ராதை சுற்றும் முற்றும் பார்த்தாள். கண்ணனைக் காணவில்லை. மாயக் கண்ணன் மாயமாய் மறைந்து விட்டான். சட்டெனப் பின்னலைப் பின்னின்று இழுக்கிறான். ராதா கண்களை இறுக மூடிக்கொள்கிறாள். "ராதா" கண்ணைத் திறந்துதான் பாரேன் என்று தேவகி மைந்தன் கூற, ராதா அவனைச் சிக்கெனப் பிடித்து, கண்களைத் திறந்தாள்.

"ராதா, உனக்குத் திருமணம் நடக்க ஏற்பாடு நடக்கிறதாமே" நீ என்ன சொன்னாய்? களவுக்கழகு செய்யும் கள்வா! கள்ளழகா! கண்ணபிரானே! நான்ஸ்திரீ என்கிற ஜீவன். குவளைக் கண்ணனும் என்னைப் போன்ற ஜீவாத்மா அவனும் ஸ்திரீதான். ஸ்திரீயாக்கப் பட்ட ஜீவன் புருஷோத்தமனாகிய பரமாத்மாவைத் தான் மணக்கவேண்டும் "அந்தப் புருஷோத்தமனை" இனம் கண்டுவிட்டாயா? கண்டுவிட்டேன் புருஷோத்தமனை எப்பொழுதும் எனக்கு இளம் பராயத்திலேயே மெய்ஞ் ஞானத்தை அளித்த மெய்யப்பா! ஒப்புயர்வில்லாத ஒப்பிலியப்பா! உலகளந்த உத்தமா! நீதானே என் பாசத்தை முதிர்ச்சியடையச் செய்து அன்பாக்கினாய். உன்பால் கொண்ட அன்பைக் கனியாக்கி அன்று பக்தியாக மாற்றினாய். காதலாகிக் கண்ணீர் மல்க நின்ற என்னை உன் பக்தையாக மாற்றிய மாதவா! உன் கருணையால் என்னை உன் ஒலியாக்கிக் கொண்டாய். நாராயணா! நீ ஒருவன் தானே புருஷன். ஜீவாத்மாக்களாகிய மானிட ஜென்மத்தின் உன்னத லட்சியமே உன்னுடன் ஒன்றிணைந்து ஐக்கியமாவதுதானே? "ராதா!" நீ பக்தியின் உச்சநிலைக்கு வந்துவிட்டாய் கரங்களை நீட்டி, அந்தர்யாமியைப் பற்றிக் கொள்" முன்னேற அடி ஒன்றினை எடுத்து வைத்தாள். நாராயணஸ்வரூபமான கிருஷ்ணன் நாலடிகள் நகர்ந்து ராதாவின் முன்வந்து நின்றாள்.

கோபாலனின் தோள்களை இறுகக் கட்டிக்கொண்ட ராதா, கோவிந்தனாகிய ஆதி மூலத்தை ஆலிங்கனம் செய்தாள். அப்படியே அச்சுதனின் உடலிலிருந்து நழுவி - நழுவி கண்ணனின் துயரறு திருவடிகளில் சரணடைந்தாள் ராதா. சரணடைந்துவிட்ட பின், சத்ரதாரி, சதுர்புஜனாகத் தோற்றமளித்தான். சசிவர்ணம், நீலமேகவண்ணத்துடன் கலக்க கண்ணன் ராதாவைத் தன் இரு கரங்களில் தூக்கி நிறுத்தினான். சரணாகதி என தஞ்சமடைந்த ஜீவனை, பகவான் குனிந்து தன் கரங்களால் தூக்கி தன்னுடன் இணைத்துக் கொள்கிறான். இரண்டாகப் பிரிந்த ஜீவன் மறுபடியும் ஒன்றாகிற ஜீவன் முக்தி நிலைதான் அத்வைதம். அத்வைத ஸ்வரூபனிடம் கலந்து விடுவதே பேரின்பத்தின் உன்னதநிலை. பேரருளனாகிய பரம்பொருளின் காருண்யமே மோட்சம்.

ராதாவைக் குனிந்து தூக்கித் துவண்டு தொங்கிக் கிடந்த அவள் கைகளைத் தோள்களின் மேல் போட்டுக்கொண்டு, ராதாவின் முதுகுத்தண்டைத் தடவியவாறே கண்ணன் ஒரு வினாடி காட்சியளித்தான். மறு வினாடி ராதா என்ற உடலுக்குள் இருந்த ஜீவன் திரு நாராயணனுடன் கலந்துவிட்டது. ராதா என்ற பூதஉடல் மலர் மாலையாக மாறி, என்றென்றும் கண்ணனின் தோள்களில் தொங்கியவாறே அவன் மார்பில் புரண்டு அவன் மேனிக்கு அழகு சேர்க்கிறது. இடுப்பிலிருந்து குழலை எடுத்த ராதா கிருஷ்ணன் உதட்டில் வைத்து இசைத்தான். "விஷ்ணுப்ரியா" ராகஸ்வரங்கள் குழலிசையாக விண்ணிலும் மண்ணிலும் வியாபித்தன. மனம் மகிழ்ந்து, மந்தகாசம் புரிந்துகொண்டே மதுராபுரி நோக்கிப் புறப்பட்டான் ராதா கிருஷ்ணன்.

ஆலமரத்தின் இலைமேல் ஒரு பாலகனாய்
ஞாலமேழு முண்டான் அரங்கத்து அரவின் அணையான்
கோலமா மணி ஆரமும் முத்துத் தாமமும் முடிவில்லாத தோரெழில்
நீலமேனி ஐயோ! நிறை கொண்டது என் நெஞ்சினையே.

(தொடரும்...

## இறைவனின் எடைக்கு எடை

சத்தியபாமா, ருக்மணி இருவருமே இறைவன் கண்ணனின் தேவியர். சத்தியபாமா தற்பெருமை மிகுந்தவள். கணவன் தனக்கே சொந்தம் என்று நினைத்திருந்தாள். மாறாக ருக்மணியோ அடக்கமும் பணிவும் கொண்டவளாக விளங்கினாள்.

சத்தியபாமாவின் இல்லத்திற்கு நாரதர் வந்தார். அவரை வரவேற்ற பாமா "என் கணவரை என்னிடமே இருத்திக்கொள்ள ஏதேனும் வழி சொல்லுங்கள்" என்று கேட்டாள்.

பாமா, ருக்மணி இருவரின் இயல்பையும் அறிந்திருந்த நாரதர், "உங்கள் கணவரைத் தராசின் ஒரு தட்டில் அமர வையுங்கள். இன்னொரு தட்டில் அவருடைய எடைக்கு இணையாகப் பொன்னை வையுங்கள். அந்தப் பொன்னை ருக்மணிக்குத் தாருங்கள். உங்கள் கணவர் உங்களுடனே எப்பொழுதும் இருப்பார்" என்று வழிமுறைகளைச் சொல்லிவிட்டுச் சென்றார்.

அதன்படியே தன் கணவரின் எடைக்கு எடை பொன் கொடுக்க முடிவு செய்தாள் பாமா. கண்ணன் இதற்கு எவ்வளவோ மறுத்தும் அவள் கேட்கவில்லை. வேறு வழியில்லாத அவர் துலாபாரத்திற்கு ஒப்புக்கொண்டார்.

தராசின் ஒரு தட்டில் அமர்ந்தான் கண்ணன். பாமா தன்னிடம் இருந்த நகைகளை எல்லாம் இன்னொரு தட்டில் வைத்தாள். அம்பாரம் அம்பாரமாக நகைகள் வைக்கப்பட்டன. என்ன வியப்பு! கண்ணன் அமர்ந்திருந்த தட்டு தாழ்ந்தே இருந்தது.

எல்லா நகைகளையும் வைத்தாயிற்றே. நகைகள் ஏதும் இல்லையே. என்ன செய்வது என்று அறியாமல் திகைத்து நின்றாள் பாமா.

அப்பொழுது அங்கே ருக்மணி வந்தாள். துளசி இலை ஒன்றை அவள் பக்தியுடன் தராசின் இன்னொரு தட்டில் வைத்தாள்.

இப்பொழுது கண்ணன் இருந்த தட்டும் துளசி இலை இருந்த தட்டும் நேராயின.

ருக்மணியின் உண்மை அன்பை உணர்ந்த பாமா தலை கவிழ்ந்தாள். தற்பெருமை அவளை விட்டு நீங்கியது.

*உண்மைக்கு ஒப்பானது எதுவும் இல்லை.*

# அறப்பணிகளில் மெத்தப் பெரியது இந்த உபகாரமாகும்

– **திரு கே.எஸ். சிவஞானராஜா** அவர்கள் –

ஒரு தனிமனித ஆன்ம பலத்தினாலே "ராஜா பிளாசா" - மாதிரிக் கிராமம், அரசினது பங்களிப்புடன் அமைக்கப்பட்ட நூறு வீட்டுத்திட்டமாகும். நன்கொடையாளர், பொன் மனப் பேராளன், கல்விக் கொடையாளன், செங்கைப் புரவோன், சிவதர்ம வள்ளல், பொன்மனத் திறலோன், பதிவரோதயன், ஈகைச் செம்மல், ஆகிய பட்டங்களைப் பேறாகக் கொண்ட திரு இராசையா குவேந்திரநாதன் அவர்களால், அவர் துணைவியார் திருமதி குவேந்திரநாதன் றஞ்சினிதேவி சகிதம் மேற்படி 100 வீடுகளும் மிகவும் நேர்த்தியாகவும், சகலவசதிகளுடன் பேறாக்கப்பட்டுள்ளன. நூறு குடும்பங்களும் தமது குஞ்சு குருமன்களோடு தலைநிமிர்ந்து வாழ்வதற்காக இறை ஆசியோடும், பெற்றோர்களின் நினைவுகளோடும் குடும்பத்தவர்கள் மனங்கொள்ளுமாறு திட்டமிடப்பட்டுக் கட்டப்பட்ட இல்லங்களே இந்த "ராஜா பிளாசா" வீட்டுத்திட்டமாகும்.

சூரிய சந்திரர் இருக்கும் வரை இந்த நூறு குடும்பங்கள் மட்டுமல்ல இந்த மண்ணே இராசையா குவேந்திரநாதன் குடும்பத்தவர்களை வாழ்த்தி வரம் பெருக்குவார்கள் என்பது திண்ணம்.

ஒரு தனி மனிதனாக நேர்வழி நின்று, காணிகளை விலைகொடுத்து வாங்கி நூறு பயனாளிகளின் பெயரில் கட்டப்பெற்ற வீடுகளை உறுதியோடு வழங்கி, நீடு வாழுமாறு வாழச் செய்த மாண்பு குவேந்திரநாதனையே சாரும்.

இவரைப்போல இதுவரை எமது தமிழர் பூமியில் எவருமே அறப்பணி செய்யவில்லை என்பது நம் மண்ணில் பதிவாகிறது. இவ்வாறான ஒருவருக்கு அதியுயர்ந்த விருது இலங்கையில் ஏன் கொடுக்கப்படவில்லை என்பது விடையில்லாத வினாவாகத் தொடர்ந்தும் எழுப்பப்படுகிறது.

முகமனும், அறிமுகமும், பந்தமும், சிபார்சும் விருந்தும் இலஞ்சமும் வால்பிடித்தலும் பலனும் விரும்பாத பல தருமவான்களுள் இவரும் பாக்கியமானவர். பெறுமதியானவர். அங்காலும் அப்பாலும் காசு வாங்கி இடையிலே தரகராகச் செயற்படும் முதலாளி இவரல்ல. தான் தனது சொந்தப் பணத்திலே அறம் பெருக்குகின்ற உபகாரியாவார். சிவன் சொத்துக் களாகிய எம்மை சீவன்களுக்காக அர்ப்பணிக்கின்ற காரணத்தினால் தற்போதைய கௌரவ சபாநாயகர் இவரை அழைத்து கௌரவம் செய்த அதிகௌரவத்திற்கு உரியவராகின்றார்.

## இவரது பேறான பெறுமதிகள்

கோண்டாவில் கிராம மக்களுக்கு வரப்பிரசாதமாக உபதபாற் கந்தோர் கட்டிடம் அமைத்து 2013இல் கையளித்தமை. இலங்கையில் இது முன்னுதாரணமாகப் பதிவீடு செய்யப்படுகின்றது.

*எங்கே உண்மை இருக்கிறதோ அங்கே தன்னலம் இருப்பதில்லை.*

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய ஆரம்பப் பாடசாலைக்கு,

$6^1/_2$ பரப்புக் காணி அன்பளிப்பாக வழங்கியமை.

04 வகுப்பறைக் கட்டிடத் தொகுதியினை அமைத்துக் கொடுத்தமை.

சுற்றுமதில் அமைத்துக் கொடுத்தமை.

மலசலகூட வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி, நுழைவாயில் மற்றும் வாகனத் தரிப்பிட வசதிகள் செய்து கொடுத்தமை.

மிக முக்கியமாக கோண்டாவில் கிராமத்திற்காக $2^1/_2$ பரப்புக் காணியில், குட்டிச் சுட்டி முன்பள்ளி சிறுவர்களுக்கான அகம் பகல் நேரக் காப்பகமும், J/120 கிராம சேவையாளர் அலுவலகமும், 2014இல் அமைத்துக் கொடுத்தமை.

மஸ்கன் வீதியிலே, நவக்கிரி புத்தூர் எனும் இடத்தில் 25 பரப்புக் காணி கொள்முதல் செய்யப்பட்டு பதினைந்து வீடுகள் சகல வசதிகளும் நிரம்பியதாகப் பூர்த்தி செய்யப்பட்டு, சிறுவர் இல்லத்தில் கல்வி கற்ற பெண் தலைமைத்துவக் குடும்பப் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டது. தனித்தனி கிணறுகளும், பாதுகாப்பான சுற்று மதில்களும், மலசலகூட வசதிகளும், வானுயர வழிபிறக்கும் நீள் தருக்களும், வணக்கதலமும், வீதிகளும், முன்பள்ளியும், பசுமை தரும் சோலைகளும் பொலியுமாறு ஒவ்வொரு வீடுகளும் கையளிக்கப்பட்டுள்ளன. இந்த 15 வீடுகளும் 2016ஆம் ஆண்டிலே கையளிக்கப்பட்டன.

இலுப்பையடிச் சந்தியில் இருந்து ஊரெழு வரை பலாலி வீதியில் இரு மருங்கிலும் நிழல்தரும் 300 மரங்கள் நடப்பட்டு தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு விவசாய வீதியில் 45 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டு, 30 குழாய்க் கிணறுகள் சுற்று வேலிகள் அமைக்கப்பட்டு அரச அதிபர் ஒத்துழைப்புடன் மீள் குடியேற்ற அமைச்சு நிதியுடன் 30 வீடுகள், 2017இல் கையளிக்கப்பட்டது.

யாழ் கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலைக்கு எட்டுப் பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டு, குழாய்க் கிணறும் அமைக்கப்பட்டு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இந்தக் கைங்கரியம் 2018இல் ஒப்பேறியது.

கோண்டாவில் மக்கள் நலன் பேணும் அமைப்பின் பயன்பாட்டிற்காக, $2^1/_2$ பரப்புக் காணி கொள்முதல் செய்யப்பட்டு குழாய்க் கிணறும் அமைக்கப்பட்டு 2018இல் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

"ராஜா பிளாசா" வீதி, மஸ்கன் வடக்கு புன்னாலைக்கட்டுவனில் 75 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டு, 15 அடிப் பாதை வசதியுடன் 56 துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு 55 வீடுகளும், தனித்தனிக் கிணறும், முன்பள்ளியும், விநாயகர் ஆலயமும் அமைக்கப்பட்டு 2019இல் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. இந்த 55 வீடுகளுக்கும் வடமாகாண அபிவிருத்தி அமைச்சின் ஊடாக மத்திய அமைச்சின் நிதியுதவியோடு குவேந்திரநாதன் அவர்களது மேலான நிதிப் பங்களிப்பும் பேறாக்கப்பட்டு முழுமை கொள்ள வழி சமைக்கப்பட்டது.

இத்தகு காருண்ய வள்ளலின் கௌரவிப்பு விழா, 09.02.2020 ஞாயிறன்று காலை, ஆசிமட அரசடி விநாயகர் மணிமண்டபத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. யாழ் மாவட்டத்திலிருந்து பல பிரமுகர்களும், மக்களும் கலந்து பாராட்டி குவேந்திரநாதன்

அவர்களுக்குப் பேஷான புகழாரம் செலுத்தி, கோண்டாவிலைப் பூத்திருக்க வழிசமைத்தனர். புண்ணியவான் ஆகிய குவேந்திரநாதன் ஒரு குபேரபூபதியானார். தொடரட்டும் அவரது பணிகள்!

அவர் இந்த மண்ணுக்கு வரமாகிய மக்களின் தூதுவராவார்.

**பாமலர்**

பொன்மனப் பேராளன், கல்விக் கொடையாளன், செங்கைப் புரவோன், சிவதர்மவள்ளல், பொன்மனத்திறலோன், பதிவரோதயன், ஈகைச் செம்மல், இல்லக ஜோதி ஆகிய பட்டங்களையும், விருதுகளையும் தமதாக்கி, நூறு வீட்டுத்திட்ட நன்கொடையாளராக மிளிர்கின்ற ஒப்புரவாளர், பெருந்தகையாளர், புண்ணியப் பிரமனாம் ஸ்ரீமான் இராசையா குவேந்திரநாதன் அவர்கள் அவர்தம் பாரியார் ஸ்ரீமதி குவேந்திரநாதன் றஞ்சினிதேவி அவர்கள் சகிதம் கௌரவம் பெறும் கௌரவிப்பு நாளான 09.02.2020 ஞாயிறன்று ஆசிமட அரசடி விநாயகர் மணிமண்டபத்தில், பெரியோர்கள் ஆசியோடு முன்னிருக்க, போற்றியும் வாழ்த்தியும் இசைத்து வழங்கிய

**வாழ்த்துப் பாமாலை**

மண்குளிர விண்குளிர மக்கள்தம் மனங்குளிர மாதவம் பெருக
அண்ணாந்து அதிசயிக்கவல்ல அற்புதமாம் நூறில்லம் பூத்திருந்தொளிர
கண்ணாரக் கண்டு கையாரத் தொழுவோம் குவேந்திரநாத வள்ளலைப்
பண்ணார வாழ்த்துகிறோம் பாரினில் அறப்பிரமன் என்பதாம் பணிந்து.

தனிமனிதனாய் நின்று சம்பாத்தியம் அனைத்தையும் தரணிக்கேயீந்து
மனிதருள் மாணிக்கமாய் மாதவக் கொழுந்தென மன்னிய பிரபுவாய்
இனிவருங்காலம் ஈகையின் வரமாய் இந்தமண் எண்ணியது பலிக்க
கனிமொழி றஞ்சினியும் கோண்டாவிலும் இனிக்க குடும்பமுடன் அறம் வெல்க.

(வாழ்க எம்மான்)

## மகிழ்ச்சியுடன் இறக்க வழி

பரீட்சித்து மன்னனுக்கு ஏழு நாளில் சாவு என்ற சாபம் கிடைத்தது. சாவிலிருந்து தப்பிக்க வழி இல்லை என்பது அவனுக்குப் புரிந்தது.

சுகாச்சாரியாரை அழைத்த அவன், "நான் மகிழ்ச்சியுடன் இறக்க வேண்டும். அதற்கு ஒரு வழி சொல்லுங்கள்" என்று கேட்டான்.

அவன் முன் அமர்ந்த சுகாச்சாரியார் ஏழு நாட்களும் பாகவதம் சொல்லிக் கொண்டிருந்தார். அதைக் கேட்டுக்கொண்டே மகிழ்ச்சியுடன் உயிரை விட்டான் அவன்.

*தோல்வி மனச்சோர்வைத் தருவதில்லை, மாறாக உற்சாகத்தையே தருகிறது.*

# திருவிளையாடற் புராண வசனம்

(ஏழாவது)

– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –

## குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்

தடாதகைப் பிராட்டி, திருக்கல்யாணந் தரிசிக்க வந்த முனிவர்கள், தேவர்கள், அரசர்கள் யாவரையும் அமுது செய்வித்து பூசுவனவும் உடுப்பனவும் பூண்பனவும், தாம்பூலமும் கொடுத்து விடுத்தருளினாள். அப்பொழுது மடைத் தொழிலாளர்கள் தடாதகைப் பிராட்டி திருமுன் சென்று வணங்கி நின்று, "அடியேம் சமைத்த போனகம் ஆயிரத்தொரு கூறாயினும் தொலைந்திலது; அடியேங்கள் அதனை யாது செய்வோம்?" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அது கேட்ட தடாதகைப் பிராட்டி தன் கணவராகிய சௌந்தர பாண்டியர் திருமுன் சென்று, வணங்கி ஒதுங்கி நின்று, "சுவாமிகள் முப்பத்து முக்கோடி கணங்களோடும் இங்கே எழுந்தருளுதலை நினைந்து, போனகம் அளவின்றிச் சமைக்கப்பட்டது; எஞ்சிய அன்னம் இமயமலையும் அதன் புறத்துள்ள மலைகளும் ஒருங்கு சேர்ந்தாற்போலக் குவிந்து கிடக்கின்றது; கறிவர்க்கமும் அத்தன்மைத்தே" என்று விண்ணப்பஞ் செய்தாள். சிவபெருமான் புன்னகை செய்து, "நீ தமிழ்நாட்டு மூவேந்தருட் சிறந்த பாண்டிய ராசன் மகளன்றோ? உன்னால் அரிதிற் பெறற்பாலது யாது? தேவதருவும் உன்னுடைய பணியைச் செய்துகொண்டு இங்கிருக்குமாயின், பிறர் செல்வமெல்லாம் உன் செல்வமன்றோ? அளவில்லாத உன்னுடைய செல்வப்பெருக்கை நாம் அறியும் வண்ணம் சமைப்பித்தாய் போலும்! உன்னுடைய விருந்தை உண்ணும்படி பசியினாலே களைப்படைந்தவர் நம்முடைய கணத்தினுள்ளே காணோம்; நாம் செய்யத் தக்கது யாது!" என்றார். சமீபத்திலே நின்ற குண்டோதரருடைய வயிற்றிலே வடவாமுகாக்கினி மடுக்கும் வண்ணம் திருவுளங் கொண்டருளினார். அது வந்து உதராக்கினியாய்ச் சொலிக்க, குண்டோதரர் நஞ்சுண்டாற் போலச் சரீரஞ் சோர்ந்து, வேர்த்து, ஆவியொடுங்கி, "சுவாமீ! பசியினால் வருந்துகின்றேன்" என்றார். சிவபெருமான், "இக் குண்டோதரனுக்கு ஒருபிடி சோறு கொடு, அப்புறஞ் சொல்லுவோம்" என்றார். தடாதகைப் பிராட்டி வணங்கிக்கொண்டு போனாள். குண்டோதரரும் உடனே நடை தளர்ந்து, கண் புகைந்து, வாய் புலர நடந்தார். தடாதகைப் பிராட்டியுடைய ஏவலினாலே, ஏவன் மகளிர்கள் குண்டோதரரைக் கொண்டுபோய் அன்னத்தின் முன் விடுத்தார்கள். குண்டோதரர் அங்குள்ள அன்னத்தையும், பல வகைக் கறிகளையும், பால் தயிர் நெய் தேன்களையும் பண்ணியங்களையும், பழங்களையும், தேங்காய்களையும், வேவாத அன்னத்தையும் எடுத்தெடுத்து உண்டார். உண்டும் பசி நீங்காமையால் வருத்தமுற்றார். இது கண்ட சேடியர்களுள்ளே சிலர் கையை நெரித்து அதிசயமடைந்தார்கள்; சிலர் வெருண்டார்கள்; சிலர் கண்ணைப் பொத்திக் கொண்டு போய்விட்டார்கள். தடாதகைப் பிராட்டி அதிசயமடைந்து, தனது நாயகர் திருமுன்பு போய், நாணம் உள்ளே கிடப்ப, அளகம் பிடரிலே தாழ, ஒதுங்கி, நிலங் கிளைத்துக் கொண்டு நின்றாள். சிவபெருமான் அந்த

நிலையைக் கண்டு, அறியாதவர் போலப் பிராட்டியை நோக்கி, "குண்டோதரன் உண்டு, எஞ்சியுள்ளனவாயின் இன்னமும் பூதங்களை உண்டு மன விடுத்து" மகிழும் வண்ணம் உண்பிப்போம்" என்றார். அதுகேட்ட பிராட்டி, "சுவாமீ! இன்னும் குண்டோதரனுடைய பசி அடங்கிற்றிலது; வேறு பூதங்களை விடுத் தருளுவீராயின், அவைகள் உலகங்களெல் லாவற்றையும் எடுத்து உட்கொண்டு விடும். அதனால் உமக்குச் சங்காரருத்திரர் என்னுந் திருநாமம் மெய்ப்படும்; குண்டோதரன் தன் செயலைத் தானே இங்கு வந்து விண்ணப்பஞ் செய்ய நீர் அறிந்துகொள்வீர்" என்றாள். அப்பொழுது குண்டோதரர் பசித்தீச் சுட வந்து, "சுவாமீ! எம்பெருமாட்டி சமைப்பித்த அன்னம் முதலியவைகள் மலைகள் போலக் கிடந்தன; அவைகளை அடியேன் எடுத்து உண்ணவும், என் பசி தணியாது இட்டுண் ணாதவர்களுடைய வயிறுபோலக் காந்துகின் றது" என்றார். "பகைவருடைய முப்புரத்திலிட்ட தீ பசியுருவமாய் என் வயிற்றினுள்ளே குடி புகுந்ததோ?" என்பார்; கை எறிவார்; அண்டங் கள் வெடிபடக் கதறுவார்; ஐயோ! ஐயோ! என்பார்; பெரு மூச்செறிவார்; ஆவி சோர்ந்து அயருவார்.

## எட்டாவது
## அன்னக்குழியும் வைகையு மழைத்த படலம்

கிருபா சமுத்திரமாகிய சோமசுந்தரக் கடவுள் தடாதகைப் பிராட்டியைப் பார்த்து, உள்ளே நகைத்து, பசியினால் வருந்துகின்ற குண்டோதரர் பொருட்டு அன்னபூரணியை நினைத்தருளினார். உடனே நான்கு குழியிலே தயிர் கலந்த அன்னந் தோன்றியது. அப் பொழுது சோமசுந்தரக் கடவுள் அத்தயிரன் னத்தைப் புசிக்கும் பொருட்டுக் குண்டோதர ரைப் பணித்தருளினார். அவர் அதனைக் கையினால் எடுத்தெடுத்துப் புசிக்கப் பசிநோய் நீங்கியது. உடனே சரீரம் வீங்கி, நிலங் கிழிபட மலைபோல விழுந்து, புரண்டு, தாகத் தினால் வருத்தமுற்று, எழுந்து வாவிகள் ஓடைகள் குளங்கள் கிணறுகள் முதலிய நீர் நிலைகளெல்லாவற்றினும் உள்ள நீரெல் லாம் குடித்தார். குடித்ததும் தாகம் நீங்காமை யால் வருந்தி, சோமசுந்தரக் கடவுளுடைய திருவடியிலே வீழ்ந்து, விண்ணப்பஞ் செய்தார்.

சிவபெருமான் தமது திருமுடியின் மேல் இருக்கும் கங்கையை நோக்கி, "நீ இம் மதுரையின் புறத்து ஒரு நதியாய் விரைந்து வருவாயாக" என்று திருவாய் மலர்ந் தருளினார். கங்காநதி சிவபெருமானை வணங்கி, "கருணாநிதியாகிய சுவாமீ! "நீ பகீரதன் பொருட்டுச் சென்று ஒரு தீர்த்தமாகி உன் னிடத்தே ஸ்நானஞ் செய்வோருடைய பாவங் களைப் போக்குவாயாக" என்று அன்றும் அடியேனைப் பணித்தருளினீர். இன்றும் ஒரு நதியாகப் பணித்தருளுவீராயின், அடியே னிடத்தே ஸ்நானஞ் செய்தவர்களுக்கும் அடி யேனைத் தரிசித்தவர்களுக்கும் பரிசித்தவர் களுக்கும் பிறவித் தொடர்ச்சியின் பற்றை அறுத்து, பத்தியையும் ஞானத்தையும் அவை களால் வரும் முத்தியையும் கொடுக்கும் பொருட்டுப் பணித்தருளும்" என்று விண்ணப் பஞ் செய்து, வரங்கொண்டு, வணங்கி, அளப் பில்லாத வேகத்துடனே மதுரையின் புறத்து ஒரு நதியாய் வந்தது. அதுகண்டு, சோமசுந்தர பாண்டியர் குண்டோதரரை அந் நதியினிடத்து விடுத்தருள. அவர் நதியினிடையே புகுந்திருந்து

*வாழ்க்கையை ரசிப்பவர்களே நீண்டகாலம் வாழ்கின்றனர்.*

கொண்டு, இரண்டு கைகளையும் கரையேற நீட்டித் தடுத்து, மலைபோல நிமிர்த்த நீரை வாயங்காந்து குடித்து, மகிழ்ச்சியுற்று, எம் பெருமான் திருமுன் சென்று, திருவடிகளை வணங்கி, ஆனந்தக் கூத்தாடி, அன்புருவாய் அளவில்லாத கீதங்களைப் பாடினார். சோம சுந்தர பாண்டியர் அது கேட்டுத், திருவுள மகிழ்ந்து, கணங்கட்குத் தலைமை கொடுத்து, தடாதகைப் பிராட்டியாரோடும் பூமியை அரசு செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார்.

இவ் வைகைநதி சிவகங்கையென வும், சிவஞான நதியெனவும், வேகவதியென வும், கிருதமாலையெனவும் பெயர் பெறும்.

## அழுவது உடலுக்கா? உயிருக்கா?

தன் ஒரே மகனான உதயகுமாரன் கொல்லப்பட்டதற்கு மணிமேகலைதான் காரணம் என்று நினைத்தாள் கோப்பெருந்தேவி. பெண் துறவியான அவளைக் கொடுமைப்படுத்த நினைத்தாள். தன் கணவன் சோழ அரசனிடம், "துறவியான மணிமேகலை சிறையில் இருப்பது தகாது. நம் அந்தப்புரத்திற்கு அனுப்பி வையுங்கள். நான் அவளை நன்றாகக் கவனித்துக்கொள்கிறேன்" என்றாள். மனைவியின் சூழ்ச்சியை அறியாத அரசன் அதற்கு ஒப்புக்கொண்டான்.

அந்தப்புரத்திற்கு வந்த மணிமேகலையிடம் அன்பு கொண்டவள்போல நடித்தாள் கோப்பெருந்தேவி. பழிவாங்கும் படலத்தைத் தொடங்கினாள். நஞ்சூட்டி அவளைக் கொல்ல முயற்சி செய்தாள். நஞ்சை உண்டும் மணிமேகலை உயிருடன் இருப்பதை அறிந்தாள். பல நாட்கள் மணிமேகலையைப் பட்டினி போட்டாள். பசிப்பிணி போக்கும் மந்திரம் அறிந்திருந்த மணிமேகலை எந்தத் துன்பமும் இன்றி இருந்தாள்.

நாளாக நாளாக கோப்பெருந்தேவிக்கு மணிமேகலை சாதாரண பெண் அல்ல. தெய்வத் தன்மை உடையவள் என்பது புரிந்தது. தான் அவளுக்குச் செய்த துன்பங் களை எல்லாம் நினைத்து வருந்தினாள்.

உள்ளம் திருந்திய அவள் மணிமேகலையின் திருவடிகளில் விழுந்து வணங்க வந்தாள். அவளைத் தடுத்து நிறுத்திய மணிமேகலை அம்மா! உம் மகன் உம்மைவிட்டு நீங்கிவிட்டான். அதற்காக நீர் வருந்துகிறீர். நான் கேட்கும் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லும். உம் மகனின் உடலுக்காக அழுகிறீரா? அல்லது அவன் உயிருக்காக அழுகிறீரா?

உடலுக்காக நீர் அழுவதாக நான் நினைக்கவில்லை. ஏனென்றால் நீர் நினைத் திருந்தால் உம் மகனின் உடலைப் பாதுகாத்து வைத்திருக்க முடியும். ஆகவே நீர் உம் மகனின் உயிருக்காகத்தான் அழுகிறீர். உயிர் சிறிது காலம் தங்கியிருக்கும் கூடுதான் உடல். உடலைவிட்டு நீங்கிய உயிர் எந்த உடலில் சென்று தங்குகிறது என்பதை யாராலும் அறிய இயலாது.

உம் மகனின் உயிர் ஏதேனும் ஓர் உடலில் தங்கி இருக்கும். உம் மகனிடத்து உண்மையான அன்பு உமக்கு இருக்குமானால் எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டும். உம் மகனுடைய உயிரும் அந்த அன்பைப் பெறும்" என்று அறிவுரை கூறி ஆறுதல் வழங்கினாள்.

*தாங்கிக் கொள்வது, நம் விதியை வெல்ல சிறந்த வழியாகும்.*

# மக்கள் சேவை மகேசன் சேவை சில பதிவுகள்

– **திருமதி கமலாதேவி செல்லத்துரை** அவர்கள் –

மனிதனுக்கு மனிதனால் செய்யப் படும் சேவையானது உண்மைப் பொருளாய் விளங்கும் கடவுளைப்பற்றி மனிதன் அறிந்து கொள்ள வழிவகுக்கும். சேவையானது எவர் என்று பாராமல் தேவையான இடத்தில் செய் யப்பட வேண்டும். எதுவித எதிர்பார்ப்பும் இருக் கக்கூடாது.

இங்கு அன்பும் சகோதர உணர் வுடனேயும் செய்யப்பட வேண்டியது. உதவி என்ற பதம் புதுமெருகு பெற்று சேவை என்ற உயர் நிலைக்கு ஏற்றப்பட்டது. ஏனையோரின் பாராட்டைப் பெறுவதற்காகச் செய்யப்படுவது பகட்டுத் தன்மை உள்ளதாகும். ஆணவத்தை யும் தற்பெருமையையும் ஏற்படுத்தும். இயன்ற அளவு சேவை செய்யலாம். இதற்கு அளவு இல்லை.

இந்த உலகத்தைச் சிருஷ்டித்தது அன்பாகும். அவ்வழியில் நின்று கடவுளை அடையலாம் என்று அறநூல்கள் பதிவு செய் கின்றன. எல்லா இடங்களிலும் இறைவனை நாம் காண வேண்டும். எல்லா உயிர்களையும் கடவுளாக நாம் வணங்க வேண்டும். எமது ஆடம்பரங்களைத் துறந்து செய்தல் வாழ்க் கையைத் துறத்தல் என்று பொருள்படாது.

அன்னை திரேசா சேவைக்கு முதல் இடமாக இருக்கின்றார். மேல் நாட்டில் பிறந்த வர் இந்தியாவிற்கு வந்தபொழுது அங்கு சேவையின் அவசியத்தை உணர்ந்து அங் கேயே தங்கிவிட்டார். தொழு நோயாளிகளை யும் உதவி தேவையுள்ள குழந்தைகளையும் இனங்கண்டு சேவை செய்தார். வைத்தியர் கைவிட்ட நோயாளிகளைக் கண்டுபிடித்து அவசியமான சேவையை நல்கினார். ஐந்து ரூபாவுடன் ஒரு அறக்கட்டளை நிலையத்தை ஸ்தாபித்தார். 150 நாடுகளில் அவரது நிலை யங்கள் செயலாற்றி புகழ்பெற்றவையாக விளங்கின. அவரது வழிவந்த புத்திஜீவிகள் இன்றும் சேவையின் மகத்துவத்தை ஞாபகப் படுத்துகின்றார்கள்.

இராமாயணத்தின் முக்கிய பாத்திர மான அனுமன் சேவையை தனது உயிர் மூச்சாகக் கருதிப் பங்காற்றினார். எந்நேரமும் ராம ஜெபத்துடன் கடலைக் கடந்தது தொடக் கம் சீதையைக் கண்டு பிடித்து உதவி செய் தார். ராம ஜெபத்தின் மகிமையை உலகிற்கு விளக்கி இன்றும் சிரஞ்சீவியாக வாழ்கின்றார்.

ராஜராஜ சோழன் தஞ்சைப் பெருங் கோவில் கோபுரம் ஸ்தாபித்தபொழுது ஒரு மூதாட்டி நீராகாரம் வழங்கி வந்தார். அவரின் ஞாபகமாக ஏதாவது தர முடியுமா என்று வேலையாட்கள் கேட்டபொழுது ஒரு கல்லை மட்டும் காண்பித்து உபயோகமானதாயின் எடுக்கும்படி கூறினார். அந்தக் கல்லு உப யோகிக்கப்பட்டு பலராலும் மெச்சப்பட்டது. இன்றும் காட்சிப் பொருளாகவும் தகுதிக்கு ஏற்ற சேவையின் மகத்துவத்தையும் காட்டு கின்றது.

புத்திஜீவிகளின் ஆற்றுப்படுத்தலில் பல தகுதிவாய்ந்த சேவைகள் சமகாலத்தில் நடைபெறுகின்றன. ''மக்கள் சேவையே

*வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்கிறவனே சிறந்த அறிவாளி.*

மகேசன் சேவை" என்ற கூற்றுக்கிணங்க சேவை நிலையங்கள் வறுமைக்கோட்டிற்குள் உள்ளவர்களை இனங்கண்டு வீடு அற்றவர்களுக்கு வீடும் விதவைகளுக்கு வாழ்வாதாரத்திற்கு உபகாரமாக தையல் யந்திரம், கால்நடை கோழிக்குஞ்சுகள் போன்றவற்றை வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றது. பாடசாலை மாணவர்கட்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் துவிச்சக்கரவண்டி போன்றவையும் வழங்கி வைக்கப்படுகின்றது.

சில சேவை நிலையங்களில் இரத்த தான முகாம்கள் அமைக்கப்பட்டு இரத்த தானத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்துத் தகுதியானவர்களை ஊக்குவித்துப் பங்களிக்க வைக்கின்றனர். அதன் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதால் பலரும் பங்குபற்றச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

கந்தபுராண கலாசாரம் உள்ள நமது நாட்டில் பிடி அரிசிமுறை சில இடங்களில் எடுத்துரைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. உண்டியலில் சிறுதொகை நாள்தோறும் சேமித்துச் சேவைக்குப் பயன்படுத்துவதும் கைக்கொள்ள வேண்டியது. ஒவ்வொரு நாளும் சேவைக்குப் பயன்பட்டது போல பதிவு செய்யப்படும். நாரயண சேவை பெரிதும் போற்றப்பட வேண்டும். அன்னதான நிலையங்களில் அவர்களுக்கு முதல் உணவு அளிக்கின்றனர். உணவு உண்பவர்களை நாராயணராகப் பாவித்து வணங்க வேண்டும்.

சிரமதானம்மூலம் சேவை செய்வதற்குப் பல இடங்கள் இனங்காணப்படுகின்றது. அவற்றைத் தேடிச் செய்வதற்குப் பாடசாலை மாணவர்கட்கு ஆசிரியர்கள் உழவாரத் தொண்டு செய்த அப்பரின் மனநிலையை விளக்கி ஏனைய விபரம் தெரியாதவர்கட்கும் தெரிவிக்கும்படி விளங்கவைக்க வேண்டும். இதனால் கோவில் நிலங்கள், அனாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் போன்ற பொது இடங்கள் சுகாதாரமாக வைப்பதற்கு உதவியாகும். சிறு வயதில் பல நீதிக்கதைகளையும் சேவை செய்தோரின் வரலாறுகளையும் அறிந்திருந்தும் அதைப் பின்பற்றும் நோக்கம் இல்லாமல் அது பாடசாலையுடன் மறந்து போனதாக இருக்கின்றது. எங்கள் சமூகத்தில் இப்படியான செயல்கள் கவலை அளிப்பனவாக இருக்கின்றது. விவசாயிகள் அறுவடையின் பின்னர் ஓரளவு நெல்லை பொது சேவைகட்கு அதாவது கோவில்களுக்கும் ஏனைய பொது இடங்களுக்கும் சேவைக்குப் பயன்படுத்துகின்றனர்.

கல்விச் சேவை தேவைப்பட்டவர்களை இனம்கண்டு, "பழம் தரும் மரங்கள் அப்பழங்களைத் தாமே உண்ணாமல் பிறருக்குத் தன்நலமில்லாமல் உதவுவது" போன்று தகுதி வாய்ந்தவர்கள் சேவை செய்ய வேண்டும். பண்டைக் காலத்தில் குருகுலத்தில் மாணவர்கள் கல்வி கற்றனர். இறுதியில்தான் குரு தெட்சணை அளித்தனர். அங்கு அரசன் முதல் ஆண்டிவரை ஒன்றாகக் குரு சேவை செய்தனர்.

வறுமைக்கோட்டிற்குள் இருக்கும் மாணவர்கட்கு இலவசமாக கல்விச்சேவை செய்வதற்கு யாராவது உதவ முன்வர வேண்டும். முக்கியமாகக் கல்வி விற்பன்னர்கள் தொழிலாகக் கருதாமல் சேவையாகச் செய்து மாணவர்களின் ஐயங்களை அகற்றி அவர்களை உற்சாகப்படுத்தி அவர்கட்குத் தேவையான கற்றல் உபகரணங்களையும் வழங்கித் தாமும் திருப்தி அடையலாம்.

எமது முன்னோரினது வித்தியாசமான வாழ்க்கை சமகாலத்தில் இருக்கின்றது. அவர்கள் குறைவாகப் படித்தாலும் அவற்றைக் கடைப்பிடித்தனர். செல்வம் மதிப்பு மிக்கதாக இருந்தது. செல்வம் எந்நேரமும்

*நகைச்சுவை பக்கவிளைவுகள் எதுவுமில்லாத அரிய மருந்தாகும்.*

செல்வோம் என்று கூறும் உண்மையை உணர்ந்து அதற்கு மதிப்பளித்தனர். இக் கலியுகத்தில் மேநாட்டு மோகங்கொண்டவர்கள் ஆடம்பரமான வாழ்க்கையில் எல்லாம் விரய மாக்கின்றனர். அந்நிலையை மாற்றி நாம் மக்களை நன்னெறிப்படுத்தக்கூடிய கவனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

தவசிகள், மடத்துறவிகள், சமய ஆன்ம நலத்துறையின் குருமார்கள், பண்டிதர் போன்றவர்கள் சேவை பற்றிய உன்னத உண் மையை வெளிக்கொணர்வதற்குப் பாடுபட வேண்டும். எமக்கு உதவுபவர்க்குச் சேவை செய்வது இயற்கை. எமக்கு இன்னல் செய் பவர்க்குச் செய்யும் சேவை எம்மைப் புனித மாக்கி நடு உணர்வு நிலையில் நின்று எமக்கு வாய்த்த சேவை மனப்பான்மையை உயர்த்த உதவி செய்யும் அதற்கு மனம் பக்குவப்பட்ட தாக அமைய வேண்டும். சகோதரப் பிறப்பாகக் கணிக்கப்பட வேண்டிய சமூகத்தினருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது சேவா தளங்களில் உள்ளவர்களின் வினைத்திறன் மிக்க கடமையாகும்.

## செல்வச் சந்நிதி

செல்வச் சந்நிதி முருகனை நாடுவோம்
செல்வம் எல்லாம் தருவான்
அவன் புகழ் பாடுவோம்.

ஆற்றங் கரைதனில் அமர்ந்திருப்பான் - அவனை
அணுகும் பக்தரின் குறைகளெல்லாம் தீர்த்து வைப்பான்
நித்திய அழகனாய் தோன்றிநிற்பான் - அவனை
நித்தமும் பாடுவோர் பிணிகளெல்லாம் போக்கி நிற்பான்.

போற்றும் பனுவல்களால் மகிழ்ந்திடுவான் - அவன்
பொன் பொருள் எல்லாமே பொழிந்திடுவான்
கூத்துக் காவடியால் குணமளிப்பான் - அவன்
கூற்றம் அணுகாமல் காத்து நிற்பான்.

அன்னதானக் கந்தனாய் அன்பர் பசி போக்கிடுவான்
என்னதானம் செய்தாலும் ஏற்றே அருள் செய்திடுவான்
துன்ப துயரங்களை தூரவே விரட்டிடுவான்
அன்பும் அறமும் பெருக வழி வகுப்பான்.

*-கற்கரைக் கற்பகன்-*

*இயற்கை என்ற புத்தகத்தின் ஆசிரியர் இறைவன்.*

# வழித்துணை 33

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 அநியாயம் அளவுக்கு அதிகமாகப் போய்விட்டால்
நியாயங்கள் நிலைக்காமல் நிலைபெயர்ந்து சென்றுவிடும்
நியாயங்கள் நிலைக்காமல் நிலைபெயர்ந்து சென்றதனால்
அநியாயம் நிலைக்குமென்று எண்ணிடுதல் தவறாகும்.

02 வாக்குறுதி என்பது பெறுமதியில் ஒன்றாகும்
காற்றாடி போலஅது காற்றினிலே பறப்பதன்று
காற்றாடி பறந்திட்டால் மீண்டுமொன்று கட்டிடலாம்
வாக்குறுதி பறந்திட்டால் வாழ்வுறுதி பறந்துவிடும்.

03 மனத்தினை மாண்புடன் படைத்தவன் இறைவனே
சினத்திலும் சரிபிழையை மாறியது நினைக்காது
குணத்தினை மாற்றிநாம் எமக்கேற்ப நடந்திட்டால்
கணமேனும் தரிக்காமல் கடவுளெம்மைத் தண்டிப்பார்.

04 ஆத்மீக பயணத்தின் படிமுறையை வகுக்கவே
சாத்வீக சாட்சியினை மனிதத்துள் இறைபடைத்தான்
நேர்த்தியான பயணத்தின் சிலவருட பாத்திரத்தை
மனச்சாட்சியை பகைத்துநீர் பாழாக்கிக் கொள்ளாதீர்.

05 கோபத்தைத் தடுப்பதற்கு எண்ணுரைத்தல் ஓர்வழியாம்
ஆபத்தைத் தடுப்பதற்கு அதுவொன்றே நல்வழியாம்
சிறுகோபம் என்றிட்டால் நூறுவரை எண்ணும்நீர்
இறங்கவே இல்லையெனில் இறங்கும்நீர் இறங்கிவிடும்.

06 சிறப்பெல்லாம் இப்போது உமக்கிங்கு கிடைப்பதனால்
மறம்கூடச் சரியென்று மனத்தளவில் எண்ணாதீர்
அறமிங்கு அல்லலுற மறம்கூட மகிழ்ந்திருக்கும்
இறப்பிற்கு பின்னால்தான் அறமோங்க மறமுழலும்.

07 கேட்டுவாங்குவது கல்வி கேளாமல் வாங்குவது நன்றி
கொடுத்துவாங்குவது மரியாதை கொடுக்காமல் வாங்குவது அன்பு
அடுத்து முயன்றிந்த நான்கினையும் வாங்கிடுவீர்
கிடைத்துவிடும் உங்களுக்கே மானிடத்தின் மாண்பு.

08 கறந்தால்தான் பால்சுவைக்கும் கறக்காவிடில் கசக்கும்
கற்றால்தான் வாழ்வினிக்கும் கற்றிடில்எமை அழிக்கும்
தெளிந்திந்த உண்மையினை கறந்திடுவீர் அறிவை
முயன்றால்தான் உயர்வுண்டு முயற்சியின்றேல் தாழ்வே.

09 மலர்படைத்தது மரமாகும் பால்படைத்தது பசுவாகும்
அதை நீபடைத்தாற் போற்படைத்து நிம்மதியை அடையாதே
நீபடைக்கச் சிலவுண்டு அதுநீதி நேர்மை நியாயத்தோடு
பயபக்திப் படையலுமாம் படைத்துப்பார் பலனுண்டாம்.

10 வாங்குகையில் உதவியென்பார் கொடுக்கையிலே எதிரியென்பார்
வாதாடி வழக்காடி நாணயத்தைப் போட்டுடைப்பார்
வாங்காமல் கொடுப்பதுவே வையகத்துச் சிறப்பெனினும்
வாங்கியதை கொடுப்பதற்கே வையகத்தோர் ஏங்குவாரேன்.


**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com


*ஒரு முள் குத்திய அனுபவம் கடலளவு எச்சரிக்கைக்குச் சமம்.*

# ஆறுமுகம்

– திரு க. சிவசங்கரநாதன் அவர்கள் –

உலக படைப்பில் பல தத்துவங்கள் மாயையின் விரிவாக அமைந்துள்ளன. அம் மாயை சுத்த மாயை, அசுத்த மாயை பிர கிருதி மாயை என்று வகைப்படும். உயிர்க் குலங்கள் தத்தம் வினைகளுக்கு ஏற்ற வகையில் இன்ப துன்பங்களை நுகர்ந்தும் புண்ணிய பாவங்களை இயற்றியும் பிரபஞ் சத்தில் உழலுகின்றன. தத்துவங்கள் ஒடுங் கும்போது மாயையும் ஒடுங்கிவிடும். மாயை ஒடுங்குவது வேறு மாயையின் பிணிப்பில் இருந்து விலகுவது வேறு. மழை நிற்பது வேறு நாம் குடை பிடித்துக்கொண்டு மழை யில் நனையாமல் இருப்பது வேறு. சிவஞானம் பெற்றவர்கள் தம்மளவில் மாயையின் பிணிப் பிலிருந்து விடுபடுகிறார்கள்.

ஆன்ம தத்துவங்கள் பிரகிருதி மாயை யிலிருந்து தோன்றுவன பெரிய மாயைகளாகிய சுத்தமாயை அசுத்தமாயை என்னும் இரண் டையும் களைந்து சுத்த சிவமாக நிற்கும் முருகப்பெருமான் பிரகிருதி மாயையினின்றும் நம்மை ஏறவாங்கி அருள் செய்யும் வலிமை பெற்றவன் என்பதை சொல்லவேண்டிய தில்லை. அவ்வளவு பெரியவன் உபதேசம் செய்திருக்கிறான். அவனால் பெரிய தடைகள் நீங்கிவிடும். மகமாயை களைந்திடும் வன் மையை உடைய பிரான்முகம் ஆறும் மொழிந்தானாம். ஆறுமுகங்களாலும் உப தேசம் செய்தான் என்று பொருள் கொள்வது ஒரு வகை முகம். ஆறின் தத்துவத்தையும் எனக்கு அருள் செய்தான் என்று கொள்வது சிறப்பு.

ஆறுமுகங்களின் தத்துவத்தை நூல் கள் பல படியாகக் கூறுகின்றன. முருகன் ஆறு குணங்கள் நிரம்பியவன். ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறு இயல்புகளையும் உடையமை யால் பகவான் என்ற பெயர் அமைந்தது. முருகன் இந்த ஆறு இயல்புகளின் விளை வான செயல்களைத் தன் ஆறு திருமுகங் களாற் செய்கிறான்.

மனிதனுடைய உடம்பில் ஆறு ஆதா ரங்கள் இருக்கின்றன. அந்த ஆறிலும் இருந்து யோகியர்களுக்குத் துணை செய்கிறவன் அப் பெருமான். ஆறு ஆதாரங்களிலும் ஆறுமுக னாக இருந்து அதற்கு மேல் உருவம் கரந்த பரா பரப்பொருளாக அவன் நிலவுகிறான்.

நீடார் சடாதரத்தின் மீதே பராபரத்தை
நீ காண் எனா அனைச் சொல் அருள்வாயே.

என்று திருப்புகழில் அருணை முனிவர் இதனைப் புலப்படுத்துகின்றார்.

சக்தியின்முகம் ஒன்றும் சிவபிரான் முகம் ஐந்துமாக ஆறு திருமுகங்கள் அமைந்தன என்றும் கூறுவர். முருகனிடம் சக்தியின் பகுதியும் சிவபிரான் பகுதியும் இணைந்து விளங்குகின்றன

*உலகில் சாகாவரம் பெற்ற பொருள் புத்தகங்கள்தான்.*

என்ற கருத்தையே இது புலப்படுத்தும். சிவ பிரான் சச்சிதானந்த மயமானவன். அம்பிகை அருள்மயமானவள் என்றும் நிலைபெற்றதாய் ஞானமே உருவமாய் இன்ப வடிவாய் இருப் பதால் சச்சிதானந்தன் என்று சொல்கிறோம். அந்த மூன்றும் அவனுடைய தனித்தன்மை யையும் பரம்பொருளென்ற நிலையையும் காட்டுவன. நிலையற்ற வாழ்வும் சிற்றறிவும் துன்ப அனுபவமும் உடைய ஆருயிர்களுக்கு சச்சிதானந்த உருவான இறைவனோடு ஒன்று படும் நிலை கிடைத்தால் அவ்வுயிர்களும் நிலைபெற்ற வாழ்வும் முழுஞானமும் இன்ப துன்பங்களுக்கு அப்பாற்பட்ட ஆனந்தமும் பெறுவார்கள். அப்படிப் பெறுவதற்கு அவன் அருள் வேண்டும்.

செல்வன் சிவபெருமான் ஏழை ஆன்மா. செல்வன் ஏழைக்கு அருளத் தூண்டுவது ஈகைக் குணம். அது இல்லாவிட்டால் செல் வனிடம் செல்வம் இருக்கும். ஏழையினிடம் வறுமை இருக்கும். அளவிலாச் செல்வனிடம் என்றும் வறுமை சேராது. ஆனால் வறிய வனிடம் உள்ள வறுமை போகச் செல்வம் சேரலாம். அதற்குச் செல்வனிடம் ஈகைப் பண்பு உருவாக வேண்டும். சிவபெருமானிடம் உள்ள சச்சிதானந்த உயிர்கள் பெற அவன் அருள் இடை நின்று கூட்டுவிக்க வேண்டும். அந்த அருளே சக்தி. பராசக்தியின் அருளும் சிவபிரானின் சச்சிதானந்தமும் இணைந்தவன் முருகன். அருள் மிகுந்த திருக்கோலம் பூண் டவன் அவன் சமைக்குமிடம் ஒன்றும் உணவு வழங்குமிடம் ஒன்றும் தனித்தனியே இராமல் இரண்டும் ஒருங்கே வாய்ந்ததுபோல அமைந்த மூர்த்தி முருகன். ஐந்து முகம் பெற்ற இறை வன் வழங்கிய கருணையைப் பின்னும் பெருக வழங்கும்பொருட்டு ஆறுமுகத்தோடு தோன்றினான் முருகன். அதனால் அம் முகங் கள் கருணை கூர்முகங்கள் என்று கச்சியப்ப சிவாசாரியார் பாடுகிறார். கூந்தல் உள்ளது சிறத்தல் முன்பு உயிர்களுக்குக் கருணை பாய்ந்தது ஆறுமுக மூர்த்தி தோன்றியபின் அதுபின்னும் பெருகிப்பாயலாயிற்று.

முருகன் கருணை மிகுதியினாலே பக்தர்களின் பக்தி ஒன்றையே கண்டு பிற பக்குவங்களைப் பாராமல் அருள்செய்ய ஆறு முகம் படைத்து அவதாரம் செய்திருக்கிறேன். ஆதலில் நீ எளிதிலே என் அருளைப் பெற லாம் என்பதை அருணகிரிநாதருக்குப் புலப் படுத்தினான். முருகனை ஏழைமுதல் பணக் காரன் வரை வழிபடுவதை செல்வச்சந்நிதி ஆலயத்தில் காணலாம். அருணகிரிநாதர் பாடிய பாடல்கள் முருகனை வழிபட சிறந்த பாடல்களாக அமைந்துள்ளன. அவற்றை திரு முறைகளோடு படித்துப் பயன்பெறலாம்.

## துணையின்றேல்

புதிராய்ப் படைத்தான் என்னை இறைவன் (பிரம்மன்)
தினம் புழுவாய்த் துடிக்க வைத்தான்
கதிர் வேலாயுதன் துணையின்றேல் இவ்வுலகில்
ஒரு நிமிடம் என்னால் வாழ முடியாது!
உதிக்கின்ற சூரியனை மறைக்கின்ற கிரகணங்
கள்போல் ஆற்றலும் மறைவும் வரமாய்
துதிக்கின்றேன் உன்னை தும்பிக்கையான்
தம்பியே, துயர் நீக்கியருள் வாய் முருகா!

-இராம ஜெயபாலன்-

உயிர்களுக்குச் செய்யும் தொண்டே கடவுளுக்குச் செய்யும் தொண்டு.

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| மக்கள் வங்கி | சுன்னாகம் | 28500. 00 |
| சி. சிவகுமார் | இணுவில் | 2500. 00 |
| சு. சோதிலிங்கம் | அல்லைப்பிட்டி | 5000. 00 |
| க. சுபச்சந்திரன் | குப்பிளான் | 1மூடை அரிசி |
| மு. அபிகரன் | குடத்தனை | 2000. 00 |
| மகேஸ்வரலிங்கம் பவளராணி நினைவாக | கந்தர்மடம் | 2000. 00 |
| திரு செல்லையா குடும்பம் | கதிரிப்பாய் | 10000. 00 |
| த. தயாளன் | பண்டத்தரிப்பு | 3000. 00 |
| ஸ்ரீதரன் சாளினி | கொக்குவில் | 2500. 00 |
| திருமதி சி. விநாயகநாதன் | பருத்தித்துறை | 5000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| Bright Way Construction | நீர்வேலி | 5000. 00 |
| ச. ராகவேந்தன் | பருத்தித்துறை (கல்விப் பணிக்காக) | 5000. 00 |
| க. குமரேசன் | வல்வெட்டித்துறை | 13000. 00 |
| Dr K. குலேஸ்வரகுமார் | கொட்டகல | 3000. 00 |
| கஜேந்தன் வினோ | நாவற்குழி | 1000. 00 |
| ஜெ. சங்கீதா | நவாலி | 2500. 00 |
| சனுஜன் கேதீஸ்வரன் | வவுனியா | 2000. 00 |
| நிர்மலா ரமேஷ் | கனடா | 2000. 00 |
| K. தனுஷன் | கனடா | 1000. 00 |
| N. நிழலேஷன் | நல்லூர் | 1மூடை அரிசி |
| ச. அஷ்மிதா<br>சி. சசிதரன்<br>ச. சிவதோஷா | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| அ. ஹரிப்பிரணவன், அ. ரிஷியவந்தனி | வட்டுக்கோட்டை | 2000. 00 |
| சி. அஷிதன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| திருமதி கமலா தர்மலிங்கம் | சித்தங்கேணி | 5000. 00 |
| செ. கேசவன் | ஆவரங்கால் | 2000. 00 |
| வே. முருகவேல் | வல்வெட்டித்துறை | 9500. 00 |
| சு. சுரேஷ்குமார் | லண்டன் | 10000. 00 |
| திரு கஜேந்திரலிங்கம் | நெல்லியடி | 1000. 00 |
| த. ஜெயந்தினி | அச்சுவேலி | 5000. 00 |

*உங்களை முதலில் தெரிந்துகொள்ளல் புத்திசாலித்தனத்தின் முதற்படி.*

| | | |
|---|---|---|
| ஜே. துஷிதா | அல்வாய் | 1000. 00 |
| வே.ரா. சிவசூரியமூர்த்தி | கரவெட்டி | 1000. 00 |
| திரு சுப்பிரமணியம் குடும்பம் | தாவடி | 1500. 00 |
| முகுந்தன் சதுர்ஜா | வல்வெட்டித்துறை | 1500. 00 |
| T. விஸ்வலிங்கம் (சைவசித்தாந்தம்) | கனடா | 100 கனேடிய டொலர் |
| மதுரா | கனடா | 2000. 00 |
| ஜீ. கிருஸ்ணவேணி | திருகோணமலை | 2000. 00 |
| திருமதி சரஸ்வதி தியாகராஜா, தி. சசிதரன் | லண்டன் | 2மூடை அரிசி |
| ர. சுபீட்ஷன் (திரு வீடியோ) | அல்வாய் | 2000. 00 |
| இ. துரைராஜா | அச்சுவேலி | 5000. 00 |
| M. கிருஷ்ணமூர்த்தி | அச்சுவேலி | 5000. 00 |
| புவிகரன் அஷ்வன்ஜா | | 2000. 00 |
| ம. நிலோஜன் | உடுவில் | 60k அரிசி 5000. 00 |
| பிரபா | நல்லூர் | மரக்கறி, 1மூடை அரிசி |
| பி. கிஷாந்தனி | நல்லூர் | 5000. 00 |
| இராம ஜெயபாலன் | சங்கானை | 5000. 00 |
| உதயராசா வளர்மதி குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| ச. கௌசிதரன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ம. ருக்மணிதேவி | நீர்வேலி | 1000. 00 |
| ச. பரஞ்சோதி | கோண்டாவில் | 10000. 00 |
| பொ. ஜெயக்குமார் | கோண்டாவில் | 10000. 00 |
| K. கரன் | சுன்னாகம் | 5000. 00 |
| சாந்தினி சண்முகராஜா | தெகிவளை | 3புட்டி அரிசி 5000. 00 |
| அ. முரளிதரன் (சம்பத் வங்கி) | திருநெல்வேலி | 2000. 00 |
| கலா யுவனா | தொல்புரம் | 500. 00 |
| இரத்தினசிங்கம் குடும்பம் | தொல்புரம் | 500. 00 |
| அ. துஸ்யந்தன் | இளவாலை | 5000. 00 |
| ந. ஸ்ரீராஜ் | லண்டன் | 2000. 00 |
| காயத்திரி துரைராஜா | கனடா | 5000. 00 |
| மகாலிங்கம் குடும்பம் | மலேசியா | 500. 00 |
| மயூரன் இராகசரஸ்வதி | சுன்னாகம் | 1000. 00 |
| இ. திருக்குமரன் | சங்குவேலி | 1000. 00 |
| பா. பாலச்சந்திரன் மயிலணி | சுன்னாகம் | 1000. 00 |
| உ. யசோதா | உடுவில் | 1011. 00 |
| காயத்திரி காசிராசன் | மானிப்பாய் | 5000. 00 |
| வை. கணேசநாதன் | அளவெட்டி | 20000. 00 |

(தொடரும்...

*இனிமையாகப் பேசுபவனுக்கு வேண்டாதவன் எவனுமில்லை.*

# வாழ்க்கையும் ஒரு வியாபாரமே!

– **திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு** அவர்கள் –

எமது வாழ்க்கையும் ஒரு வகை சந்தையே! ஒரு வகை வாணிபமே. அங்கே ஏற்ற இறக்கங்கள், நயநட்டங்கள், சுக துக்கங்கள், கூட்டல் கழித்தல்கள், வரவு செலவு, கொடுக்கல் வாங்கல், பேரம் பேசல், எதிர்பார்ப்புக்கள் என்பன இடம்பெறுதல் வழமை. இவ்வாணிபச் சந்தையின் மத்தியிலும் நாம் முக்திக்குரித்தான பக்தியை மறந்துவிடலாகாது. பக்தி, வல்லமை வாய்ந்தது.

மக்கள் சமுதாயத்தை எடுத்துக் கொண்டால் எம்முள் மூன்று வகையினர் உளர். அவர்களுள் ஒரு சாரார் பிறரின்பம் கண்டு மகிழ்வோர், பிறரைப் பொருட்படுத்தாது தம் இன்பம் நாடுவோர் மற்றுமொரு சாரார். பிறர் இன்பம் தடுப்போர் ஒரு சாரார்.

எம்முள் கோபம், பொறாமை, பேராசை ஆகியன தவிர்க்கப்படல் வேண்டும். அவை சத்குணங்களேயல்ல, சகதி. அவற்றிலிருந்து விடுபட்டு அவற்றுடன் ஒட்டாது நாம் வாழ முயல வேண்டும். தாமரை மலரைப் பாருங்கள்! நீரிலிருந்து மேல்வரினும் தாமரை, நீரில் ஒட்டாது. நீரில் நனையாது, இவ்வண்ணம் தீய குணங்களிலிருந்து நாம் விலகி வாழ முற்பட வேண்டும். சற்று நின்று தாமரையை நோக்குங்கால் அதற்கும் சகதிக்குமான தொடர்பு ஏதாவது தெரிகிறதா? இல்லையே! இயற்கையைக் காண்கின்றோம். இரசிக்கின்றோம்.

ஈஸ்வரனின் தேகம் தான் இயற்கை. கடவுள், இயற்கை, மனிதன் இதுவே வரிசைக்கிரமம். ஆனால் இன்று நம்முள் பலர் இவ்வரிசைக்கிரமத்தை மாற்றி அமைத்து மனிதன், இயற்கை, கடவுள் எனக் கொண்டு நடக்கத் தலைப்பட்டுள்ளனர். எப்படியிருக்கின்றது? மூடத்தனம். மனிதன் தனது நன்மையில் அதிக கவனம் செலுத்துகின்றான். தனது வசதிக்காக இயற்கையை அழிக்கவும் அவன் தயங்குவதில்லை. இயற்கை இறைவனின் சொத்தல்லவா? இயற்கையை அழித்தல் தெய்வ நிந்தனை என்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டாமா? மனிதன், மூன்றாமிடத்தில் கடவுளை வைக்கலாமா? இறைவனின் கர்ப்பத்தில் உள்ள குழந்தைகளே நாம். கருவின் கடும் உதைப்புக்களை தாயானவள், பெருமையுடன் தாங்கிக்கொள்ளவில்லையா? இதுபோலவே இறைவனும் எமது தவறான செயல்களை, அட்டகாசங்களை, தன் கருணையாலும் சகிப்புத்தன்மையாலும் தாங்கிக்கொள்கிறான் என்பதை நாம் உணரவேண்டாமா? இறைவன் துர்க்கையாக வரம் தருகிறார். இலக்குமியாக வளம் தருகிறார். சரஸ்வதி ஆகி ஞானம் தருகின்றார்.

*மூடநம்பிக்கையும் குருட்டுப் பழக்கமும் சமூகத்தின் முதல் பகைவன்.*

இவற்றிற்கெல்லாம் நாம் இறை என்னும் தாய்க்கு என்ன கைம்மாறு செய்கின்றோம்? ஒரு துதி தன்னும் தவறாது நன்றிக்கடனாகச் செலுத்த வேண்டாமா? சிந்தித்துப் பார்க்கவேண்டிய விடயம் இது.

இறைவன் யாருக்காக சிருஷ்டியை ஆரம்பித்தான்! தன்னை வெளிக்காட்ட இறைவன் எண்ணினான். மலைகள் தோன்றின, நதிகள் பாய ஆரம்பித்தன. கீழே பூமி, மேலே வானம், சமுத்திரம், கடல், நிலம், ஓடும் நதிகள், சூரியன், சந்திரன், பாலைவனங்கள் யாவும் தோன்றின. யாவும் இறையின் அம்சங்களே! எம்மிடம் சக்தி என்று ஒன்றுமேயில்லை. எமது நினைப்புத்தான் பெரிது.

நாம் பறவைகள் தாம், ஆனால் இறகுகளோ ஈசனிடம்.
எம்மிடம் பாதங்கள், ஆனால் பாதையோ அவனிடம்.
நாம் பார்க்கும் கண்கள் எமதே, ஆனால் வடிவம் இறைவன் வசம்.
உலகம் நம்மிடம் ஆனால் மோட்சம் அவனிடம்.

எனவே எமது தேவைகள் என்ன? சிந்திப்போமா?

கல்வி மனிதனைச் சம்பூரணம் ஆக்குகின்றது. வாழ்வின் பெரும் சாபக்கேடே, அறியாமையேதான். அறியாமையை உருவாக்கித் தருவது பெரும் துன்பங்களே! ஆசைகளே! நாமே எமது அறியாமைக்கு பாத்திரவாளிகள். யாரையுமே குறை சொல்ல வேண்டாம். எமது அகங்காரமே எமது அழிவுக்குக் காரணம். சற்று சிந்தியுங்கள்! பார்க்க முடியாதவன் குருடன் அல்லன். பார்க்க மறுப்பவனே குருடன். எனவே குழப்பங்கள் அகல பணிவு தேவை. நாம் சிரமப்பட்டு பணிவை மேற்கொள்ள வேண்டும். நல்லவற்றைக் கற்க வேண்டும். பணிவான மார்க்கங்கள் சமயத்திடமே உள்ளன. பணிவு என்பது சமயவாதிகளிடம் உள்ளன. அதுவே எமது வெற்றிக்கு வித்தாகும். சமயமே எமக்கு வழிகாட்ட வேண்டும். எனவே நாம் சமயத்தை நாடி எமது பயணத்தை திசை திருப்புவோம். அதற்காக நாம் துறவி ஆக வேண்டும் என்பதல்ல அர்த்தம். இல்லறமே நல்லறம். அதிலும் தர்ம சிந்தனைக்கு இடமுண்டு. கடமைகள் உண்டு. சமய சடங்குகளை ஆற்ற, விருந்தோம்ப, உகந்தநிலை இல்லறமே. இதன் காரணமாகத்தான் "இல்லறம்" என்று தனிப்பட கூறாமல், "இல்லற தர்மம்" என நூல்கள் கூறியுள்ளன. இல்லறத்திலேயும் பக்தி இடம்பெற வேண்டும். தர்மம் தலை காக்க வேண்டும்.

இந்த இல்லறம் என்னும் பயணத்தை யாம் நடாத்தும்போது, எமக்கு எத்தனை எத்தனையோ விதமான தடங்கல்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. அங்குதான் நாம் விழிப்பாக இருந்தாக வேண்டும். இந்நேர விழிப்பால்தான் வாழ்வில் வெற்றியடைய முடியும்.

இதனை அப்பர் சுவாமிகள் மிக அழகாக விளக்கி உள்ளார். எப்படியென்று பாருங்கள்.

மனமெனும் தோணி பற்றி மதி எனும் கோலை ஊன்றி
சினமெனும் சரக்கை ஏற்றி செறிகடல் ஓடும் போது
மதன் எனும் பாறை தாக்கி மறியும் போது அறிய ஒண்ணாது
உனை உண்ணும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடைய கோவே.

என்கிறது அப்பர் சுவாமிகளது தேவாரம். பிறவியை ஒரு கடல் என உருவகிக்கிறார் அப்பர் அடிகள். அதிலே ஒரு நிலைதான் இல்லறம். பிறவி எனும் கடலிலே நாம் பயணம்

*உணராத ஆற்றலும் ஊறாத நீரும் தாகத்தைத் தணிக்க முடியாது.*

செய்யும்போது நாம் ஒரு தோணியை அமர்த்திக் கொண்டு பயணிக்கிறோம். அத் தோணி தான் எமது மனம். அத் தோணியைச் செலுத்தும் கோலாக நாம் எமது மதியை உபயோகிக்க வேண்டும். கடல் பாதையிலே காமம் என்னும் பாறை எமது பிறவித்தோணியோடு மோத நேரிடும். "அந்நேரமே நமசிவாய" என்னும் மந்திரத்தை யான் செபிக்க நீ எனக்கு அருள்வாய் இறைவா என இறைவனை இறைஞ்சுகிறார் அப்பர் சுவாமிகள். அலை கடலில் தத்தளிக்கும் நேரத்தில் எமக்கு அபயம் அளிப்பது "நமசிவாய" என்னும் பஞ்சாட்சர மந்திரம் ஆகும்.

கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணை ஆவது நமச்சிவாயவே.

ஐந்தெழுத்தின் புணை பிடித்து போற்றிப் புகழ்ந்து வாழ்ந்தவர் மணிவாசகப் பெருமான், "நமச்சிவாய" எனும் மந்திரத்தைக் கெட்டியாய் பற்றிய வண்ணம், தம்மை துன்பக் கடலினின்றும் காப்பாற்றியருள்வாய் என, எம் பெருமானை பின்வருமாறு பாடியுள்ளார்.

"போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்குகிறேன்
போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை
போற்றியோ நமச்சிவாய புறம்எனை போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சிவாய, சயசய போற்றி போற்றி"

அப்பர் சுவாமிகள், மணிவாசகர் போன்றோர் இத்துணை தூரம் பஞ்சாட்சர மந்திரத்தின் அருமை, உண்மைகளை உணர்ந்து அதனை இடைவிடாது செபித்து வாழ்ந்திருந்த வரலாறு படித்தும் நாம் இன்று என்ன செய்கின்றோம். எப்போதாவது செபிக்கின்றோம். அதில் ஒழுங்கில்லை. சிரத்தையில்லை இதனால் எம் வாழ்விலும் ஒழுங்கில்லை, நிம்மதியில்லை, காலையும் மாலையும் வெண்ணீறு அணிகையில் பஞ்சாட்சர மந்திரத்தை சில நிமிடங்கள் தன்னும் நாம் தவறாது, சிரத்தையோடு உச்சரிக்க வேண்டும். மனமும் மொழியும் இணைந்து செபித்தால் பஞ்சாட்சர மந்திரம் எத்துணை இடர்வரினும் எமைக் காப்பாற்றி நிற்கும் என்பது உறுதி.

"கற்றுணை பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே"

எனும் அப்பர் சுவாமிகளது பாடல் வரிகள் நாம் எல்லோரும் அறிந்ததே.

எம்மிடம் ஆன்மீகம் உறைந்துள்ளது. ஆனால், நாம் அதனை உணர்ந்ததாக இல்லை. அதனை உறைநிலையில் விடக்கூடாது. அதனை இன்னமும் உறைய விட்டுள்ளோம் நாம் என்றே கூறலாம். இதன் காரணமாகத்தான் முன்பில்லாத துன்பங்கள், துயரங்கள் எம்மேல் இன்று வந்து உறைகின்றன.

"அருந்தவம் தரும் அஞ்செழுத்து ஓதினால் அனைத்தும் வெற்றி" என்பது அருள் வாக்கு. இந்த இடத்தில் அப்பர் சுவாமிகள் வாழ்வில் இடம்பெற்ற ஒரு சுவாரஸ்யமான சம்பவத்தைச் சொல்கிறேன், கேட்டுப் பாருங்கள்!

பணக்காரன் ஒருவன் இறந்து விட்டான். இவனிடமிருந்த பணத்தை அனுபவிக்க அவன் இன்னமும் பல்லாண்டு காலம் வாழ்ந்திருக்கலாம் எனத் தோன்றியது, அவனது சுற்றத்தார்க்கு. அவர்கள், மிகுந்த ஆதங்கத்துடன் அப்பர் சுவாமிகளை அணுகி இவன் "பிழைப்பானா இறப்பானா" என வினாவினர்.

*உன்னை நீயே பலவீனன் என்று நினைத்துக்கொள்வது மிகப்பெரிய பாவம்.*

அதற்கு சுவாமிகள் இவன் வாழ்ந்த போது "நமசிவாய" மந்திரத்தை வாயார ஓதி னானா? எனக் கேட்டார். "ஐயோ நமச்சிவாயத் தைக் கேட்டும் அறியான் இவன். அவனுக்கு மூன்றெழுத்து மந்திரமான "பணம்" என்ற சொல்லே, தாரக மந்திரமாயிருந்தது" என்று பதில் வந்தது.

"சரி, அஞ்செழுத்தை நெஞ்சமுத்தாது போனால் போகட்டும்! செந்தழல் மேனியான் சிவன்பற்றித் தன்னும் எப்போதாவது பேசி இருப்பானா?" என்று கேட்டார் சுவாமிகள்.

"கடவுள்" என்ற சொல்லே அவன் காதில் பட்டிருக்காது. அவன் ஒரு பெரிய குடும்பத்தின் தலைவன். பொருள் வேட்டையில் ஈடுபட்டிருந்த அவனுக்குச் சிவனார் பெருமை எங்கே தெரிந்திருக்கப் போகின்றது? இது பதில்.

"சரி, விடுங்கள். வாழ்க்கையில் ஆலய தரிசனம் செய்திருப்பானா? கோயில் வலம் வந்தானா இவன்?" என வினாவினார் சுவாமிகள். சுவாமி! "பொருளைத் தேடி உலக நாடுகளை வலம் வந்தானே ஒழிய எம்பெரு மான் திருக்கோயிலை இவன் ஒரு முறை தன்னும் வலம் வந்தது கிடையாது" எனப் பதில் வந்தது. இருக்கட்டும், உணவு உண் பதற்கு முன்னர் சில மலர்கள் தன்னும் தூவி இறையை வழிபட்டானா? அப்பர் சுவாமிகள் தொடர்ந்து வினாவினார். இல்லையே! சுவாமி வெந்தது பாதி வேகாதது பாதி என்று அவசரத்தில் ஓடி ஓடி இவன் உண்டானே ஒழிய, இவன் எங்கே உண்ணுமுன் மலர் தூவி இறை சிந்தனை செய்தான்? எனப் பதில் வந்தது.

சரி, காலை, மாலை வெண்ணீறு அணியும் வழக்கம் தன்னும் இவனிடம் இருந்ததா? கேட்டார் சுவாமிகள். இல்லையே ஐயா. நீராடியதும் ஒருவித வாசனை மாவை முகத்தில் ஒத்திக்கொள்வான் அவ்வளவுதான். வெண்ணீறு அணியும் பழக்கம் ஒன்றும் இவனிடம் இருந்ததாக இல்லை.

அப்பர் சுவாமிகள் பெருமூச்சு விட் டார். அத்தகையவன் ஏன் பிறந்தான்? சாவ தற்குத்தான் பிறந்தான். ஏன் இறந்தான்? மீண் டும் பிறப்பதற்காக இறந்தான். பிறந்து இறந்து வாழ்வதே இவன் போன்றோர் தொழில். சிவ சிந்தனையற்றோர் எவராயினும் அவர் கதி இதுதான். அப்பர் சுவாமிகள் மேலும் அங்கு நிற்க விரும்பவில்லை. தொடர்ந்து நடந்தார்.

இதை எல்லாம் ஏன் இங்கு சொன் னேன் என்றால், இப்பணக்காரன் போல் யாமும் லௌகீகத்தில் மூழ்கி ஆத்மீகத்தை மறந்து விடக்கூடாது. இவன் செய்யத் தவறிய ஒவ் வொன்றும் வாழ்வில் யாம் செய்ய வேண்டி யவை. அவற்றைத் தவறாது செய்வோம். பிறந்த பயனை அடைவோம். முயல்வோமா?

## வேல் ஒளிர் சந்நிதி!

அழகன் முருகன் அமர்ந்த சந்நிதி!
ஆற்றங்கரையில் அமைந்த சந்நிதி!
இளவல் சண்முகன் இலங்கிடும் சந்நிதி!
ஈடது இல்லா வேல் ஒளிர் சந்நிதி!
உளமதில் உவகை ஊட்டிடும் சந்நிதி!
ஊழ்வினை யாவும் போக்கிடும் சந்நிதி!
எழுதிடும் ஏடெலாம் மணம்கமழ் சந்நிதி!
ஏற்றம் காட்டும் ஒப்பிலாச் சந்நிதி!

-ப. மகேந்திரதாசன்-

*நீ பட்ட துன்பத்தைவிட அதில் நீ பெற்ற அனுபவமே சிறந்தது.*

# பல்வேறு நாமங்கள் துலங்கும் யாழ்ப்பாணத்து விநாயகர் ஆலயங்கள்

– **திரு சண்முகலிங்கம் சஜீலன்** அவர்கள் –

நமது சைவசமய வழிபாட்டில் விநாயகர் ஓர் அற்புதமான, ஒப்பற்ற தெய்வமாகத் திகழ்கிறார். இவர் பிள்ளையார், கணபதி, ஐங்கரன், கஜமுகன், ஏரம்பமூர்த்தி, வேழமுகன், வக்கிரதுண்டர், கரிமுகன், தொப்பை அப்பன், ஒற்றைக்கொம்பன் எனப் பல்வேறு பெயர்களில் வழிபடப்படுகிறார். இவ்வாறு பல நாமங்களில் வழிபட்டாலும் ஈழத்தில் சைவ சமயத்தவர்களாகிய நாம் பிள்ளையார் என மிகவும் உரிமையோடு சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கிறோம். பிள்ளையார் எனும் போது சிறுபிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோருக்கும் மிகவும் பிடித்தவராக விநாயகர் காணப்படுகிறார். இவ்வற்புதமான தெய்வம் குழந்தைத்தனம் மிக்க யானை முகத்தினையும், தேவர்கள், மனிதர்கள் பூத கணங்கள் ஆகியோரின் அம்சம் பொருந்திய உடலமைப்பினையும் உடையவர். இதனால் விநாயகர் சகல நிலைகளையும் கடந்த தெய்வமாக வணங்கப்படுகிறார்.

ஈழத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் விநாயகர் வழிபாடு மிகவும் சிறப்புற்றுக் காணப்படுகிறது. எக்காரியத்திலும் முதல் வணக்கத்திற்குரியவராகவும் ஆகம கிரியை நெறிகளில் முதலிடம் பெறுபவராகவும் விளங்கும் விநாயகர் சகல வளங்களையும், சகல செல்வங்களையும் வழங்குபவராகவும் அறிவு, ஞானம் முதலியவற்றோடு, சகல சித்திகளையும் அருள்பவராகவும் அறியப்படுகிறார். மேலும் விவசாய விருத்தியின் பொருட்டும் தொழில், கல்வி, செல்வம் ஆகியவற்றின் மேம்பாடு கருதியும் யாழ் குடாநாட்டு மக்கள் விநாயகரை முழுமுதற் கடவுளாக வழிபடுகின்றனர். விநாயகர் வழிபாடு தமிழகத்திலும் ஈழத்திலும் சங்ககாலம் முதல் நிலவி வந்து உள்ளது. இதனை ஆன்மீகவியல் அறிஞர்களும், தொல்லியல் அறிஞர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர். தமிழகத்தில் சங்ககாலத்தில் விநாயகர் வழிபாடு நிலவியதாக கி.வா. ஜகந்நாதன் போன்ற ஆன்மீக சொற்பொழிவாளர்கள் கூறியுள்ளனர். காவிரியாற்றங்கரையின் கீழ்ப்படுக்கையில் கி.பி. 4ஆம், 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விநாயகர் சிலைகள் தொல்லியல் அகழ்வாய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதேபோன்று ஈழத்திலும் பல்லவர் காலத்திற்குரியதாகவும் சோழர் காலத்திற்குரியதாகவும் கருதப்படும் சில விநாயகர் சிலைகள் நல்லூர், கந்தரோடை, வல்லிபுரம், பூநகரி போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் ஈழத்திலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் விநாயகர் வழிபாடு மிகப் பழங்காலத்திலிருந்தே நிலவி வந்துள்ளது எனலாம். இதற்கு யாழ் குடாநாட்டில் இன்றும் காணப்படும் மிகத் தொன்மையான விநாயகர் ஆலயங்களும் சான்று பகர்கின்றன.

பொதுவாக யாழ்ப்பாணத்தில் ஆகம முறையில் அமைக்கப்பட்ட விநாயகர் ஆலயங்கள், ஆகம முறையில் அமைக்கப்படாத

விநாயகர் ஆலயங்கள், பெரிய ஆலயங்கள், சிறிய ஆலயங்கள், மடாலயங்கள், ஆகம முறையில் பூசை வழிபாடுகள் நடைபெறும் ஆலயங்கள், கிராமிய வழிகாட்டம்சங்கள் நிறைந்த ஆலயங்கள் எனப் பலவகையான விநாயகர் ஆலயங்கள் உள்ளன. இவ் ஆலயங்களில் எல்லாம் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து தேர், தீர்த்தம், பூங்காவனம் என முடிவடையும். மகோற்சவத் திருவிழாக்களும், அலங்கார உற்சவங்களும் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சிலவற்றில் விநாய கருடைய விசேட விழாக் காலங்களிலும், விரத நாட்களிலும் சிறப்பான பூசை வழிபாடு கள் நடைபெறுகின்றன. இவற்றில் பொங்கல், படையல், மடைபரவுதல் ஆகிய விசேட வழி பாடுகளும் உண்டு. விநாயகருக்குரிய கண பதி ஹோமம் அஷ்டோத்தர (108) சகஸ்ரநாம (1008) அர்ச்சனைகளும், லச்சார்ச்சனையும் நடைபெறுவதுண்டு.

யாழ்ப்பாணத்தில் இவ்வாறாகச் சிறப் புற்ற விநாயகர் ஆலயங்கள் பலவும் பல நாமங்களில் வழங்கப்பட்டு வருகிறது. இவை விநாயகருக்கேயுரிய சிறப்பாக பல்வேறு நாமங் களாலும் ஆலயத்தைத் தாபித்த மன்னர்களின் பெயர்களாலும், ஆலயத்தில் அமைந்துள்ள தலவிருட்சங்களின் பெயர்களாலும் ஆலயத் திற்கருகில் உள்ள புனித நீர்நிலைகளின் பெயர்களாலும் ஆலயம் அமைந்துள்ள பிர தேசம், குறிச்சி, காணி, நிலம் ஆகியவற்றின் பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.

## விநாயகருக்குரிய பல்வேறு நாமங்களால் அழைக்கப்படும் ஆலயங்கள்

மேற்குறிப்பிட்டது போன்று விநாயகருக்கு பல்வேறு நாமங்கள் உண்டு. இவை விநாயகருக்கு பல்வேறு காரணங்களால் வழங்கப்படும் பெயர்களாகும். சகல சித்திகளையும் அருள்வதாலும், சித்தி, புத்தி என இரு தேவியருடன் காட்சியளிப்பதாலும், வழிபடும் அடியவர் களுக்கு அறிவு ஞானத்தை வழங்குவதாலும் சித்தி விநாயகர் என அழைக்கப்படுகிறார். இராமாயணத்தில் இராம இராவண யுத்தத்தில் இராமர் இராவணனைக் கொன்றதால் இராமருக்கு பிரம்மஹத்தி தோசம், வீரகத்திதோஷம் என்பவை ஏற்பட்டதாகவும் இராமர் இதற்கான பரிகார பூசை செய்ய விநாயகர் தோன்றி இத் தோசங்களை நீக்கியருளியதாகவும் இதிகாச புராணக் கதைகள் கூறுகின்றன. அத்துடன் வீர என்ற அசுரனைச் சங்காரம் செய்து உலகினை விநா யகர் காப்பாற்றினார் எனவும் கதையுண்டு. இதனால் வீரகத்தி விநாயகர் என அழைக்கப் படுகின்றார். மேலும் விநாயகர் பக்தர்களுக்குக் கேட்ட வரம் நல்கும் கற்பகதருவாகக் காட்சி அளிப்பதால் கற்பக விநாயகர் எனவும் சகல செல்வங்களையும் அருளுவதால் செல்வ விநாயகர் எனவும் அழைக்கப்படுகிறார். இப் பெயர்களிலாலான விநாயகர் ஆலயங்கள் பலவும் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் இருப்பதைக் காணலாம்.

### சித்தி விநாயகர்:

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்தி விநாயகர் கோயில், நாவற்குழி சித்தி விநாயகர் ஆலயம், நெடுந்தீவு நெழுவினி சித்தி விநாயகர் ஆலயம், அரியாலை நீரொச்சித்தாழ்வு சித்தி விநாயகர் ஆலயம், மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலயம்.

**வீரகத்தி விநாயகர்:**

மண்கும்பான் வெள்ளைப் புற்றடி வீரகத்தி விநாயகர் கோயில், யாழ்ப்பாணம் நீராவியடி ஜெயவீரகத்தி விநாயகர் கோயில், கரவெட்டி கப்பூது வீரகத்திப் பிள்ளையார் கோயில், கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயம், நெடுந்தீவு மகாலித்துறை வீரகத்தி விநாயகர் ஆலயம்.

**கற்பக விநாயகர்:**

வண்ணார்பண்ணை சாந்தையர்மடம் கற்பக விநாயகர் ஆலயம், உரும்பராய் ஓடையம்பதி கற்பகவிநாயகர் ஆலயம், காரைநகர் வாரிவளவு கற்பகவிநாயகர் ஆலயம், வரணி கும்பிட்டான்புலம் கற்பகவிநாயகர் ஆலயம், நல்லூர் தெற்கு கற்பகப் பிள்ளையார் ஆலயம், இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலயம்.

**செல்வ விநாயகர்:**

சுண்டுக்குளி கொய்யாத்தோட்டம் செல்வ விநாயகர் ஆலயம், வடகோவை செல்வ விநாயகர் ஆலயம், இளவாலை சோடக்கன் புன்னையடி செல்வவிநாயகர் ஆலயம்.

விநாயகர் உயிர்களுக்கு ஏற்படும் விக்கினங்களைத் தீர்ப்பதால் விக்கினேஸ்வரர் எனவும், பூதகணங்களுக்குத் தலைவர் என்பதால் கணபதி, மகா கணபதி எனவும் தனக்கு மேல் தலைவர் இல்லாதவர் என்பதால் விநாயகர் எனவும் பார்வதி பரமேஸ்வரரின் மூத்த பிள்ளையாதலாலும் சிறு பிள்ளைகளுக்கும் பிடித்த தெய்வமாக விளங்குபவராதலாலும் மூத்தவிநாயகர், பிள்ளையார், பாலகணபதி, பால விநாயகர் எனவும் அழைக்கப்படுகிறார். இப்பெயரிலமைந்த விநாயகர் கோயில்கள் பலவும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ளன.

**விக்கினேசுவரர்:**

கட்டுவன் சோழங்கராயர் விக்கினேஸ்வரர் ஆலயம், பெரியவிளான் வடசேரி விக்கினேசுவரர் ஆலயம், காரைநகர் களபூமி கரப்பிட்டியந்தனை விக்கினேஸ்வரர் கோயில்.

**கணபதி (மகாகணபதி):**

சித்தன்கேணி பெரியவளவு மகாகணபதிப்பிள்ளையார் கோயில், வட்டுக்கோட்டை உருக்கியவளை மகாகணபதிப்பிள்ளையார் கோயில், வேலணை மேற்கு பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் கோயில், மீசாலை அல்லாரை அறுகம்புலம் மகாகணபதிப் பிள்ளையார் கோயில், கோண்டாவில் கந்தர்வளவு மகாகணபதிப்பிள்ளையார் கோயில்.

**மூத்தவிநாயகர்:**

கரணவாய் மூத்தவிநாயகர் கோயில், நல்லூர் மூத்தவிநாயகர் கோயில்

பொதுவாக இறை பரம்பொருளை ஒளி வடிவமாகவே வேதங்களும், திருமுறைகளும் குறிப்பிடுகின்றன. எமது வழிபாட்டிலும் ஒளி வடிவம் முன்னிலை பெற்றிருப்பதை நாம் எமது

ஆலய வழிபாட்டில் அவதானிக்கலாம். ஆபரணங்கள், அணிகலன்கள் பொதுவாக ஒளிவீசும் தன்மையுடையது. இதற்குக் காரணம் அவை ஒளி பொருந்திய நவரத்தினங்களாலான மாணிக்கம், முத்து, மரகதம், கோமேதகம் போன்றவற்றாலும் உலோகங்களான தங்கம், வெள்ளி போன்றவற்றாலும் ஆக்கப்பட்டிருப்பதுதான். இதேபோன்று விநாயகரும் இறை பரம்பொருளல்லவா. எனவே ஒளி வடிவமாக விளங்குகிறார். தன்னை வழிபடும் அடியவரின் உள்ளத்திலும் ஒளி வடிவில் உறைகின்றார். மேலும் தங்கம் வெள்ளி இரத்தினங்கள் போன்றவற்றிலும் மேலாக விலைமதிக்க முடியாத அரும் பெரும் சொத்தாகவும் விநாயகர் விளங்குகிறார். இதனால் விநாயகரை முத்து, மாணிக்கம், தங்கம் (சுவர்ணம், சொர்ணம்) போன்ற பெயர்களில் அழைப்பது பொருத்தமே. இவ்வகை விநாயகர் ஆலயங்களும் யாழ் குடாநாட்டில் பரவலாகக் காணப்படுகின்றன. மேலும் சிந்தாமணி என்பது ஒரு வகை ஆபரணமாகவும், ஒருவகை கடலை வகையாகவும் உள்ளது. இது யாகத்தில் பயன்படுத்தப்படும் ஒரு பொருளாகவும் உள்ளது. எனவே விநாயகருக்கு சிந்தாமணி என்ற பெயரும் உள்ளது.

**முத்து விநாயகர்:**

ஊர்காவற்றுறை புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் ஆலயம், வண்ணார்பண்ணை வடமேற்கு கேசாலில் முத்து விநாயகர் ஆலயம், காரைநகர் துறைமுகம் முத்து விநாயகர் ஆலயம், அரியாலை கிழக்கு முத்து விநாயகர் ஆலயம்.

**மாணிக்கவிநாயகர்:**

புத்தூர் நவக்கிரி மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், வேலணை மாணிக்கப் பிள்ளையார் ஆலயம், மயிலிட்டி சங்குவத்தை மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், அச்சுவேலி இடைக்காடு மாணிக்கப்பிள்ளையார் ஆலயம்.

**சிந்தாமணிப் பிள்ளையார்:**

நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் கோயில், அராலி உதாறன் சிந்தாமணிப் பிள்ளையார் கோயில், கரவெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணிப் பிள்ளையார் கோவில், அல்லைப்பிட்டி சிந்தாமணிப் பிள்ளையார் கோயில்.

**சொர்ண விநாயகர்:**

கொக்குவில் மேற்கு சொர்ணவடலி சித்திவிநாயகர் கோயில்.

விநாயகரை வழிபடுவதால் பக்தர்களுக்கு பரம திருப்தியும், ஆனந்தமும், உள்ளத்தில் உவகையும் ஏற்படுகிறது. எனவே ஆனந்தம், பரமானந்தம், அருளானந்தம் போன்ற நாமங்களும் விநாயகருக்கு உள்ளது. கைலாயத்தில் சிவகுடும்பத்தில் விநாயகர் மூத்தபிள்ளை, முருகன் இளையபிள்ளை சிறுவயதில் இருவரும் மிகவும் குறும்புத்தனம் மிக்கவர்களாகவும், செல்லப்பிள்ளைகளாகவுமே வளர்ந்து வந்துள்ளனர் என்பதை புராண இதிகாசக் கதைகளின் மூலமாக அறியக்கூடியதாகவுள்ளது. எனவே விநாயகருக்கு செல்லப்பிள்ளை என்ற பெயரும்

உள்ளது. விநாயகருக்கு ஐந்து திருக்கரங்கள். ஒரு கையில் அங்குசமும், இன்னொரு கையில் பாசக்கயிறும் உள்ளது. ஒரு கை தும்பிக்கை. மற்றைய இரு கையில் ஒன்று அபய மளிக்கும் அபயகரமாகவும் மற்றையது அனைத்தையும் வழங்கும் வரதகரமாகவும் உள்ளது. எனவே கேட்ட வரம் அனைத்தையும் நல்கும் வரதகரமுடையவராக இருப்பதால் விநாயகருக்கு வரதவிநாயகர் என்ற பெயரும் வழங்கப்படுகிறது. எனவே ஆனந்தப் பிள்ளையார் செல்லப் பிள்ளையார் வரத விநாயகர் என அழைக்கப்படும் ஆலயங்கள் பலவும் யாழ்ப்பாணத்தில் இருப்பதை அவதானிக்கலாம்.

**ஆனந்தப்பிள்ளையார்:**

காங்கேசன்துறை கசாயத்துறை ஆனந்தப்பிள்ளையார் ஆலயம், வரணி இயற்றாலை, கல்வளை பரமானந்தப்பிள்ளையார் ஆலயம், கந்தரோடை அருளானந்தப்பிள்ளையார் ஆலயம்.

**செல்லப்பிள்ளையார்:**

சிறுப்பிட்டி செல்லப்பிள்ளையார் ஆலயம், காங்கேசன்துறை யாத்திரை செல்லப் பிள்ளையார் ஆலயம்.

**வரத விநாயகர்:**

ஆனைக்கோட்டை வரதவிக்ன விநாயகர் (சம்பந்தப்பிள்ளையார்) ஆலயம், அல்வாய் மாலைசந்தை வரதராஜ விநாயகர் ஆலயம், தும்பளை பெரியவளவு வரத விநாயகர் ஆலயம்.

பிள்ளையார் சிவபெருமானின் திருக்குமாரர் ஆகையால் சிவபெருமானுக்குரிய நாமங்கள் பலவும் விநாயகருக்கும் வழங்கப்படுகிறது. சிவபெருமானுக்குரிய நாமங்களான சிவஞானம், லிங்கேஸ்வரர், ஈஸ்வரர், மகாதேவர், சங்கரநாதர் போன்ற பெயர்களை விநாயகரை வழிபடும் அடியவர்கள் விநாயகருக்கும் வழங்கி அழகு பார்க்கின்றனர். சிவபெருமானைப் போன்றே இருவரும் சடையில் இளம் சந்திரனைத் தரித்துள்ளதால் சந்திரசேகரர் எனவும் அழைக்கப்படுகிறார். இவ்வகை ஆலயங்கள் பலவும் யாழில் செறிந்திருக்கக் காணலாம்.

**சிவஞானப்பிள்ளையார்:**

நல்லூர் சிவஞானப்பிள்ளையார் ஆலயம், உடுவில் சிவஞானப் பிள்ளையார் ஆலயம், சங்குவேலி சிவஞானப்பிள்ளையார் ஆலயம்.

**சந்திரசேகரப் பிள்ளையார்:**

நல்லூர் சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயம், கோண்டாவில் உப்பு மடம், சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயம், சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயம்.

*நல்ல எண்ணங்கள் செயல் வடிவங்களாக உருப்பெறுகின்றன.*

**லிங்கப் பிள்ளையார்:**

வண்ணார்பண்ணை விஸ்வலிங்க மகாகணபதிப் பிள்ளையார் (பன்றிக்கோட்டுப் பிள்ளையார்) கோயில், வண்ணார்பண்ணை வடமேற்கு விஸ்வலிங்கப் பிள்ளையார் கோயில், இருபாலை லிங்கவிநாயகர் ஆலயம்.

சுழிபுரம் பறாளை ஈசுர விநாயகர் கோயில், சங்கானை மகாதேவப்பிள்ளையார் ஆலயம், அனலைதீவு பெரியபுலம் சங்கரநாதர் மகாகணபதிப்பிள்ளையார் ஆலயம்.

மேலும் சிவப் பரம்பொருள் சிதம்பரம் தில்லையம்பலப் பொற்சபையில் திருநடனம் புரிவதால் நடராஜப் பெருமானாக உலகில் அறியப்படுவதுடன் பல தத்துவங்களும் இதனால் உரைக்கப்படுகிறது. இதேபோல் விநாயகரும் திருநடனம் புரியும் அழகுக் கோலமும், தத்துவமும் உலகில் பேசப்படுவதனை அவதானிக்கலாம். இவை நுண்கலைத் துறைக்கூடாக உலகுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளதையும் காணலாம். இதனால் விநாயகர் சிதம்பர நடராஜர் அம்பலவாண நடராஜர், நர்த்தன கணபதி எனவும் அழைக்கப்படுகிறார்.

பத்தமேனி மிட்டிலான் கூடல் நடராஜர் அம்பலவாண விநாயகர் ஆலயம், மீசாலை வடக்கு ஸ்ரீ நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலயம், கல்வயல் பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம், வண்ணார்பண்ணை காட்டுத்துறை அம்பலவாணப் பிள்ளையார் ஆலயம், கொழும்புத்துறை வதிரிபீட மன்றுளாடும் விநாயகர் ஆலயம்.

(தொடரும்...

**மனம் ஒரு குளம் போன்றது**

ஒரு மனிதனுடைய குணத்தை இந்த சம்ஸ்காரங்கள் மொத்தமுமே நிர்ணயிக்கின்றன. நல்ல சம்ஸ்காரங்கள் மேலோங்கி இருந்தால் குணம் நல்லதாக அமைகிறது. தீயவை மேலோங்கி இருந்தால் குணம் தீயதாக அமைகிறது.

ஒரு மனிதன் தொடர்ந்து தீய வார்த்தைகளைக் கேட்டு தீய எண்ணங்களையே எண்ணி, தீய செயல்களையே செய்து கொண்டு இருந்தால் அவனுடைய மனம் தீய சம்ஸ்காரங்களால் நிறைகிறது. அவை அவனுடைய சிந்தனையையும் செயலையும் அவன் அறியாமலே ஆட்டிப்படைக்கின்றன.

உண்மையில் இந்தத் தீய சம்ஸ்காரங்கள் தொடர்ந்து செயற்பட்டவாறே இருக்கின்றன. அவற்றின் விளைவு தீமையாகத்தான் இருக்கும். அதன் காரணத்தால் அந்த மனிதன் தீயவனாக இருக்கின்றான். அவனால் இதைத் தவிர்க்க முடியாது. இந்த சம்ஸ்காரங்கள் மொத்தமும் தீய செயல்களைச் செய்வதற்கான ஆற்றல்மிக்கதொரு தூண்டு சக்தியை அவனுள் உருவாக்கும். தன் சம்ஸ்காரங்களின் கையில் மனிதன் எந்திரம் போலாகி விடுகிறான். அவை அவனை தீமை செய்யும்படி கட்டாயப்படுத்துகின்றன.

*-சுவாமி விவேகானந்தர்-*

# வள்ளலாரின் சீர்திருத்தச் சிந்தனைகள்

– **திருமதி விக்னேஸ்வரி பவநேசன்** அவர்கள் –

**அறிமுகம்**

தமக்கென வாழாது பிறர்க்கென முயலும் பெரியோர்களால்தான் இவ்வுலகம் கொடுமைகளால் அழியாது தொடர்ந்து வாழ்கின்றது. இவ்வாறு வாழையடி வாழையாகத் தோன்றி வரும் அடியார் பரம்பரையில் ஞானியர் வாழ்வில் அடியார்கள் திருக்கூட்டத்தில் இராமலிங்க வள்ளலாரும் ஒருவர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழும் சன்மார்க்கமும் தழைத்தோங்கத் தோன்றியவர் வள்ளலார். மேலும் மாணிக்கவாசகர், திருமூலர், திருவள்ளுவர், தாயுமானவர் போன்ற அடியார் கூட்டத்தில் அவரும் ஒருவர்.

"வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன்" எனும் திருவருட்பாடல் இவ்வுண்மையை வலியுறுத்துகின்றது.

வள்ளலார் இறையருள் பெற்ற ஞானி மட்டுமல்லர், மனித சமுதாயத்தில் புரட்சிகரமான மாறுதல்களை விரும்பிய சீர்திருத்தவாதியும் ஆவார். இன்றைய உலகில் ஏற்பட்டுள்ள சமய - சமூக - பொருளாதார மாறுதல்கள் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு வள்ளலார் கண்ட கனவுகளாகும். ஆனால் இவ்வுண்மையை உலகம் அறிந்திருக்கவில்லை. காரணம் வள்ளலாரின் வாழ்க்கை வரலாறு முழு அளவில் வெளிவராததுதான்.

வள்ளலார் தமிழ் நாட்டின் தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரத்துக்கு வடமேற்கே பத்துக்கல் தொலைவில் உள்ள மருதூரில் 05.10.1823 அன்று மாலை 5.30 மணியளவில் இராமையாப்பிள்ளைக்கும் சின்னம்மாளுக்கும் 5ஆவது மகனாக அவதரித்தார். அவருக்குப் பெற்றோர் இட்ட பிள்ளைத் திருநாமம் "இராமலிங்கம்" என்பதாகும். இவரை ஐந்து மாதக் குழந்தைப் பருவத்தில் முதன் முதலில் பெற்றோர்கள் சிதம்பரத்திற்கு அழைத்துச் செல்ல, அந்த இறைவனை வழிபட்டார். இவ்வகையில் சிதம்பரரகசியம் வள்ளலாருக்கு வெட்ட வெளியாயிற்று. வள்ளலார் ஒன்பதாம் அகவையில் முருகப்பெருமானால் ஆட்கொள்ளப்பெற்று அருட்பாடல்களைப் பாடினார். ஓதாமலே உற்ற கலைகளையெல்லாம் உணர்ந்தார். இவ்வாறே பின்னாளில் வள்ளலார் சிறந்த சீர்திருத்தவாதியாக எழுச்சி கண்டார்.

உலகில் தோன்றிய மிகச் சிறந்த ஞானிகளில் வள்ளலார் ஒருவராவர். அவர் தம் காலத்தவரான இராஜாராம் மோகன்ராய், தயானந்தசரஸ்வதி, இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆகியோரை விடவும் தீவிர சீர்திருத்தவாதியாகத் திகழ்ந்தார். சாதி சமய வேற்றுமைகளற்ற ஏழை, பணக்காரன் என்னும் வர்க்கப் பாகுபாடற்ற சகல ஆன்மாக்களிடத்தும் சம அளவில் அன்பு செலுத்துகின்ற ஆன்ம நேய ஒருமைப்பாட்டை வள்ளலார் காண உழைத்தார். இவ்வகையில் வள்ளலாருக்கு இணையானவர்கள் அக்காலத்திலோ அன்றி அவருக்கு

*வாழ்வது முக்கியமல்ல, சிறப்பாக வாழ்வதே முக்கியம்.*

பிற்காலத்திலோ தோன்றவில்லை என்று கூறலாம்.

வள்ளலாரது சிறந்த குணங்களும் பெருமைகளும் மிகவும் உள்ளன. மிகுந்த அடக்கம், எளிய தன்மை, தூய ஒழுக்கம், அன்பு, ஜீவகாருண்யம் முதலிய சிறந்த குணங்கள் யாவும் அவரிடம் முழுமையாகக் குடிகொண்டிருந்தன. உயிர்களது இரக்கத் திலும் பரந்த மனப்பான்மையிலும் அவர் ஒப் பற்றவராக இருந்தார். மண், பொன், பெண் முதலியவற்றில் ஆசை சிறிதும் இல்லாத வராய் இறைவனிடம் அளவு கடந்த பக்தி உடையவராய்த் திகழ்ந்தார். இத்தகைய குணங்களாலும் விடாமுயற்சியாலும் அவர் இறைவனுடைய திருவருளைப் பூரணமாய்ப் பெற்று அதனால் பேரறிவும் எக்காலத்தும் அழியாத ஒளிவடிவமும் எல்லாம் வல்ல சித்தி யும் கைவரப்பெற்றவராகத் திகழ்ந்தார். எனவே தான் தெய்வீகமான அருட்பாடல்களை எண் ணற்ற அளவில் அவரால் பாடமுடிந்தது.

## வள்ளலாரின் சமத்துவ நோக்கு

வள்ளலார் பாரத தேசிய ஒருமைப்பாட்டை அடித்தளமாகக் கொண்டு அதன்மேல் மனிதநேய ஒருமைப்பாடு என்ற கட்டிடத்தை எழுப்பி அதில் உயிர்க்குலத்தின் ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் ஆன்ம நேய ஒருமைப்பாடு எனும் கொடியைப் பறக்கவிட்டுள்ளார். வள்ளலாரது இரண்டு கண்களில் ஒன்று சமுதாயக் கண் மற்றையது சமயக் கண் என்று கூறமுடிகின்றது. அவர் இவ்விரண்டையும் ஒருங்குற நோக்குகின்றார். அவற்றில் மலிந்து கிடந்த குறைபாடுகளையும் கொடுமைகளையும் கண்டு அவற்றைப் போக்கும் வழியில்லையா என்று இரங்குகின்றார்.

"ஒருவனே தேவன்" என்றது போல் "ஒன்றே குலம்" என்பதனையும் வலியுறுத்துவாராகி நல்ல குலம் எனவும் தீய குலம் எனவும் சொல்லளவல்லால் பொருளில்லை எனவும் "இருகுலம் மாண்டிடக் காண்கிறீர்" எனவும் பாடினார். "மனிதர் எல்லோரும் ஒரு குலம்- ஓர் இனம்" எனும் உண்மையை வலியுறுத்தினார். மேலும் வள்ளலார் கொள்கைகளில் முதன்மையானவை பின்வருமாறு.

1) மாந்தர் உள்ளும் புறமும் ஒத்தவராதல்
2) கொலையும் களவும் தவிர்த்தல்
3) பசியும் பிணியும் வறுமையும் ஒழிக
4) உண்டிக் கொடையே உயிர்க்கொடையாகும்.
5) சன்மார்க்கம் எனும் நன்மார்க்கம்.

இக் கட்டுரை வள்ளலாரின் சீர்திருத்தச் சிந்தனைகள் பற்றியதாகவிருப்பதால் முதலில் அவரது சமயநோக்கு பற்றியும் இதனைத் தொடர்ந்து சமுதாய நோக்கு பற்றியும் ஆராய்வதாக அமைகின்றது.

## வள்ளலாரின் சமயப்பணிகள்

வள்ளலார் ஒரு தெய்வ வணக்கத்தையே விரும்பியவர். இவர் தெய்வம் பல எனச் சொல்லும் மூடத்தனத்தை வெறுத்தார். சிவன் என்ற தெய்வம் ஒன்றே என நம்பி வந்தார். இங்கு "சிவன்" என்பதில் "சிவ" என்பதன் பொருள் சச்சிதானந்தம் என்றார். இதனை சத், சித், ஆனந்தம் எனப் பிரித்து விளக்கினார். இந்த சிவன் ஒருவனே உண்மையான தெய்வம்

என்பது சன்மார்க்கக் கொள்கையாகும். இதனை "எல்லாம் வல்ல இறைவன் ஒருவனே என் பதும் அக் கடவுளை உண்மையன்பால் வழிபாடு செய்து எக்காலத்தும் அழியாத நிலையும் பூரண சித்தியும் பெற வேண்டும் என்பது சன்மார்க்கக் கொள்கை" என்றார்.

வள்ளலார் கூறும் கடவுள் நாம - ரூப - பேதங்களுக்கு அப்பாற்பட்டவர். இதுபற்றி அவர் கூறுமிடத்து "தெய்வமானது உண்மையில் அகிலமெங்கும் உயிர்களிடத்து அன்பாய் இருந்து உலகில் எல்லாவற்றிலும் பரிபூரண சமாதானத்தையும் சமரசத்தையும் ஏற்படுத்தி நிலை நிறுத்துவதுதான் கடவுள்" என்பது வள்ளலாரின் சமய சிந்தனையாகும். வள்ளலார் அருள் நெறியில் நின்றவர். இறைவன் அருளை நினைத்து அருளறத்தை ஓம்பியவர். இங்கு சமயம் என்பது ஜீவகாருண்ய சமயம் அல்லது அருள்நெறி என்பதே இவரது விளக்கமாகும்.

வள்ளலார் மக்களுக்காக இறைவனிடம் விண்ணப்பித்தவர். இவ்வகையில் அவருடைய விண்ணப்பங்கள் நான்கு வகைப்படும்.

1) சுத்த சன்மார்க்க சத்திய சிறு விண்ணப்பம்
2) சமரச சுத்த சன்மார்க்க சத்திய பெரு விண்ணப்பம்
3) சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்
4) சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம்

என்பனவாகும்.

இவ்விண்ணப்பங்களில் வள்ளலார் மக்களுக்காக விண்ணப்பிக்கும் வகையில் "கருணா நிதியான கடவுளே" "இயற்கை உண்மைக் கடவுளே" என்னும்படி சமரச உணர்வை வெளிப் படுத்தும்பொழுது கடவுளை வழிபடத் தூண்டியவர்.

வள்ளலார் இத்தகைய தமது கொள்கைகளை திருவருட்பாடல்கள் (ஆறு திருமுறைகள்), விண்ணப்பங்கள், கடிதங்கள், கட்டளைகள், பத்திரிகைகள், உபதேசங்கள், உரைநடை நூல்களாகிய மனுமுறைகண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் மற்றும் உரைகள் மூலமாகவும் வெளியிட்டார். இவ்வகையில் அவர் "ஜீவகாருண்யம்" என்ற நூலில் வெளிப்படையாகவே உயிரிரக்கம் இன்றி இறைவனை அடைய முடியாது என்றார். ஒவ்வொருவரிடத்தும் அன்பு, கருணை இருக்குமாயின் அங்கு இறைவனும் இருப்பான் என்றார். வள்ளலார் சன்மார்க்க சங்கத்தை அமைத்து அதன்மூலம் இறைவனது சன்மார்க்க நெறியைப் பின்பற்றுமாறு கூறுகின்றார். எனவேதான் சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கைகளை பின்பற்றுவதற்கும் பரப்புவதற்கும் "சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்" என்ற பெயரில் 1865இல் ஒரு சங்கத்தை நிறுவினார். வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கைகள் பின்வருமாறு,

1) கடவுள் ஒருவரே.
2) அவரை ஜோதி வடிவில் உண்மை அன்பால் வழிபட வேண்டும்.
3) சிறு தெய்வ வழிபாடு கூடாது.
4) அத் தெய்வங்களின் பெயரால் உயிர்ப்பலி கூடாது.
5) புலால் உண்ணல் ஆகாது.
6) சாதி, சமயம் முதலிய வேறுபாடுகள் கூடாது.
7) எவ்வுயிரையும் தன்னுயிர்போல் எண்ணி ஒழுகும் ஆன்மநேய ஒருமைப்பாடு உரிமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

*நாம் உண்மையாக வாழ்வதென்பது கடமையைச் சரியாகச் செய்வதாகும்.*

8) ஏழைகளின் பசி தவிர்த்தலாகிய ஜீவகாருண்ய ஒழுக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்.

9) புராணங்களும் சாத்திரங்களும் தெளிவான உண்மையைத் தெரிவிக்கமாட்டா.

10) மூடப் பழக்கவழக்கங்களை ஒழிக்க வேண்டும்.

11) காது குத்துதல் மூக்குக்குத்துதல் வேண்டா.

12) கணவன் இறந்தால் மனைவி தாலி வாங்குதல் வேண்டா.

13) மனைவி இறந்தால் கணவன் மறுமணம் செய்தல் வேண்டா.

14) இறந்தவரைப் புதைக்க வேண்டும், எரிக்கக் கூடாது.

15) கருமாதி, திதி முதலிய சடங்குகள் செய்ய வேண்டா.

16) எதிலும் பொது நோக்கம் வேண்டும் என்பனவாகும்.

வள்ளலாரது வாழ்க்கை பக்தி மார்க்கத்தில் உருவாகியுள்ளது. அதனால்த்தான் எல்லாரையும் இந்த பக்தி மார்க்கத்தில் ஒழுகும்படி கூறினார். மனிதன் கடவுளை அடைவது என்பது அவனது உண்மையான அறிவினால்தான் முடியும் என்றார். மேலும் அவர் உள்ளமே கோயில் என்றும் உள்ளத்தில் இறைவனை இருத்தி வழிபட வேண்டும் எனவும் கூறியுள்ளார். வள்ளலார் இயற்றிய சமயத் திருப்பாவானது ஆறு திருமுறைகளைக் கொண்டது. அதில் ஆறாந் திருமுறையில் அருளறிவுக் கோல் கொண்டு மூட நம்பிக்கையைச் சாடுகின்றார். வள்ளலார் கூறும் முத்தியானது மரணமில்லாத பெருவாழ்வாகும். அதாவது என்றும் இறைவனுடன் இரண்டறக் கலக்கும் நிலையைத்தான் இந்த மரணமில்லாப் பெருவாழ்வு உணர்த்துகின்றது.

எனவே இறைவனாலேயே சாதி, சமயம், கோத்திரம் முதலியன ஒழிந்து போகும், போட்டியும் பூசலும் நீங்கி அமைதியும் இன்பமும் ஓங்கி சமுதாயம் நன்னெறியில் வாழும், நாடு வாழும் உலகம் வாழும் என்பதுதான் வள்ளலாரின் உறுதியான கொள்கையாகும். இவ்வாறான வள்ளலாரின் சமுதாயம் பற்றிய சிந்தனைகள் இந்து சமய மேம்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்துள்ளன எனலாம்.

## வள்ளலாரின் சமுதாயப் பணிகள்

இந்து சமூக மேம்பாட்டிற்கு வள்ளலார் செய்த பங்கு அளப்பரியதாகும். அவரது கொள்கைகள், செயற்பாடுகள் யாவும் சமுதாய மக்களிடையே சில திருப்புமுனைகளை ஏற்படுத்தின. இந்து சமுதாயம் அன்பும் இரக்கமும் கொண்டு ஒற்றுமையாகத் திகழ அவரது பங்களிப்பும் ஒருவகைக் காரணம் என்று கூறலாம். எனவேதான் இவரது காலத்திற்குப்பின் வாழ்ந்த மகாத்மா காந்தி, இராமகிருஷ்ண பரமஹம்சர் மற்றும் பாரதியார் போன்றோர் வள்ள லாரின் வழியில் நின்று சமுதாயத்தைச் சீர்திருத்தினர்.

வள்ளலாரின் சமுதாய சிந்தனைகளில் அரசியல், சாதி, மதம், சமத்துவம், கல்வி, விதவைகள் நிலை, ஜீவகாருண்யம், ஏழ்மை, கொல்லாமை, புலால் உண்ணாமை, நல்லொழுக் கம் போன்றன உள்ளடங்கியிருந்தன.

அரசியல் பற்றிய கருத்தில் வள்ளலார் தனது காலத்தில் சமுதாயத்தில் காணப்பட்ட அரசியல் குறைகளைச் சீர்திருத்த முயன்றுள்ளார். கருணை இல்லாத ஆட்சி ஒழிய வேண்டும் எனக் கோசமிட்டார். அத்தோடு நல்லவர்கள் அரசாள வேண்டும். எல்லோரும் ஒற்றுமையாக

*கோபமும் பொறாமையும் மனிதனைக் கொன்றுவிடும் சக்தி படைத்தது.*

வாழவேண்டும் என்பது இவரது நோக்கமாகும். அரசன் எப்போதும் நீதியுடன் அரசாள வேண்டும் என்பதை மனுமுறை கண்ட வாசகத்தில் மனுநீதிச் சோழன் மூலமாக விளக்கினார். மக்களிடையே பசி, பிணி, பகை என்னும் அச்சம் நீங்கி அறநெறியில் செலுத்தும் நல்லரசு தோன்ற வேண்டும் என்பதை இவர், "எங்கும் எதிலும் என்றென்றும் நீதிக்கொடி வானளவாகப் பறப்பதாக" என்று கூறினார்.

சமுதாயத்தில் நிகழும் கொடுமைகளுக்கு காரணம் பல. அவற்றுள் ஒன்று மக்களில் பலர் அன்பால், அருளால், பண்பால் ஒத்திராமையே ஆகும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவால் ஏற்படும் தீமைகளை எண்ணி அஞ்சுகிறார். உலகம் சன்மார்க்கப் பாதையில் செல்லவேண்டுமாயின் உள்ளத்திற் பகையும் உதட்டிற் கேண்மையும் கொண்டு திரியும் மாந்தர் அக்கொடுமையினின்றும் நீங்கித் திருந்தினால்த்தான் துயர் நிறைந்த இவ்வுலகம் இன்பம் நிறைந்த பொன்னுலகமாக மாறும். மேலும் சமுதாயத்தில் நிகழும் கொடுமைகளுக்கு அடிப்படையானது உயிர்களின் தீய நெஞ்சம் என்பதை உணர்ந்து அதனைத் தூய நெஞ்சமாகத் திருத்தி சமுதாயத்தை சன்மார்க்கப் பாதையில் செலுத்தி இருள் உலகை இன்ப உலகமாக மாற்றுவதே தமது வாழ்வின் குறிக்கோளாகக்கொண்டு வாழ்ந்தார் வள்ளலார் என்பது அவருடைய அருட்பாவால் தெளிவாகின்றது.

அன்றைய சமுதாயத்தில் மக்களிடையே காணப்பட்ட மிகக் கொடுமையான செயல் சாதி வேறுபாடாகும். இறைவனால் படைக்கப்பட்ட மனித உடல்களின் உருவங்கள், வடிவங்கள் வேறுபட்டாலும் அவற்றுக்குரிய அவயவங்கள் எல்லாம் ஒரே மாதிரியானவை. இப்படியிருக்க ஏனிந்த வேறுபாடு என சிந்தித்தார். இவ்வகையில் சாதி என்னும் பகுப்பு வெறும் கற்பனையே அன்றி நிலையானது அல்ல என்றார். சாதி வேறுபாட்டை வெறுத்த வள்ளலார் உயிர்கள் அனைத்தையும் சமமாகக் கருதி கருணை செலுத்த வேண்டும் என்றார். இதற்குத் தடையாக உள்ள எந்தவொரு நிகழ்வையும் வெறுத்தார். இதனை,

"சாதியும், மதமும், சமயமும் தவிர்த்தேன்
சாத்திரக் குப்பையும் தவிர்த்தேன்" என விளக்கினார்.

வள்ளலார் எவ்வகையிலும் ஆதரவற்ற ஏழைகளுக்கு ஜாதி, மத, இன, நிற பேதமின்றி அவர்கள் பசி தீர்க்க சத்திய தருமச்சாலையை ஏற்படுத்தி உணவளிக்க வழி செய்தார்.

மதம் பற்றிய வள்ளலாரின் கருத்தும் குறிப்பிடத்தக்கது. மதவேற்றுமைக்கு எதிராக வள்ளலார் கோஷமிட்டார். சமுதாயத்தில் ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடற்ற நிலையைக் காண விரும்பினார். இதற்காக,

"ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும் ஒருமையுளராகி
உலகியல் நடத்தல் வேண்டும்"

எனும் வகையில் சமரச சன்மார்க்க நெறியினின்று சாதி, மத, இன வேறுபாடு அனைத்திற்கும் அப்பால் நின்று செயற்பட்டார். மேலும் வள்ளலார் சமூகத்திலுள்ள எல்லா உயிர்களிடையேயும் சகோதரத்துவ உணர்வை வளர்க்க முயன்றார். உயிர்கள் அனைத்தும் பரமாத்மாவால் படைக்கப்பட்டன. எனவே எல்லா உயிர்களிடையேயும் ஆன்ம நேய ஒருமைப்பாட்டைக் கண்டுகொள்வது அவசியமாகும் என்றார்.

*உண்மையின் புன்முறுவலே அழகு.*

உலக ஒருமைப்பாட்டிற்குத் தடையாக நாட்டுப்பற்று இருக்கக்கூடாது என்பது வள்ளலார் நிபந்தனையாகும். இவ்வுலகில் எல்லா உயிர்க் கூட்டத்தையும் வள்ளலார் தன்னுயிராகக் கொண்டாரே தவிர எவ்வித வேற்றுமையும் கொள்ளவில்லை.

வள்ளலார் கல்வி பற்றிய சிந்தனைகளையும் எடுத்து கூறியுள்ளார். அவர் காலத்தில் கல்வியானது வசதி படைத்தோரிடமே இருந்தது. எனவேதான் அனைவருக்கும் கல்வி எனும் கோட்பாட்டை முன்வைத்தார். வள்ளலார் பெண் கல்வியையும் முக்கியத்துவப் படுத்தினார். அத்துடன் பெண்கள் மொழியறிவு மட்டுமன்றி மெய்ஞ்ஞான அறிவு பெறவும் உரிமை உண்டு எனப் பிரகடனப் படுத்தினார். இவர் மக்கள் ஒவ்வொருவரும் அறிவுக்காகப் படிக்க வேண்டும் என்றார். மேலும் ஏழை மக்களின் கல்வியை அரசு பொறுப்பேற்க வேண்டும் என்பது அவரது வாதமாகும். மேலும் வள்ளலார் சாதி, மத வேற்றுமைகளுடன் கூடிய தனியார் கல்விக் கொள்கையை வெறுத்தார். வள்ளலார் தமிழ் மொழியில் மிகுந்த பற்றுக் கொண்டிருந்தார். இம்மொழி படிப்பதற்கும் துதிப்பதற்கும் சிறந்தது என்றார். சிறுவர்கள் கல்வி கற்பதற்காக பாடசாலை ஒன்றைத் தொடக்கி வைத்த பெருமைக்குரியவர். இவ்வகையில் கி.பி. 1872 இல் சமரச வேதப் பாடசாலை தொடக்கப்பட்டது. இவ்வாறு கல்விப் பணியால்த்தான் சமூகத்தை மேம்படுத்த முடியும் என்ற கொள்கையுடன் மக்கள் மத்தியில் கல்வியின் பெருமையையும் அதன் அவசியத்தையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இன்றைய சமுதாயத்தில் ஆண், பெண் இருபாலாரிடமும் சமத்துவப் போக்கு ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. ஆனால் வள்ளலாரின் காலத்தில் பெண்களை அடிமையாக வைத்திருக்கும் ஆண்கள் சமுதாயமே நிலவியது. எனவே இந்நிலைக்கு எதிராக வள்ளலார் செயற்பட்டார். பெண்ணை ஆணுக்கு இழிவாகவோ, அன்றித் தாழ்வாகவோ மதிக்கக் கூடாது, அவள் எப்போதும் ஆணுக்குச் சமமானவள் என்பதை வலியுறுத்தினார். இதனை,

"ஆண், பெண் எனும் நாம பேதம் வருவானேன்? அறிவின் உயர்ச்சி தாழ்ச்சியால் ஆண் அறிவு ஆன்ம அறிவாகும். பெண் அறிவு ஜீவ அறிவாகும். ஆன்ம அறிவென்பதும் ஜீவ அறிவென்பதும் புத்தியறிவும் மன அறிவுமாம்" என்றார்.

இவ்வாறு ஆண் பெண் வேற்றுமைகளை அகற்றி, ஆண்களோடு பெண்களும் எல்லாத் துறைகளிலும் முன்னேற வேண்டும். ஆண்கள் போன்று எல்லாவித உரிமையும் பெண்களுக்கு உண்டு என்பதை சுத்த சன்மார்க்கத்தின் மூலம் தெளிவுபடுத்தினார்.

வள்ளலார் விதவை நலனிலும் அக்கறை காட்டியிருந்தார். கணவனை இழந்த பெண்களை சமூகத்தில் நல்ல நிலையில் மதிக்க வேண்டும் என்றார். இவ்வகையில் கணவனை இழந்த பெண்ணிடமிருந்து தாலி வாங்கக் கூடாது என்றார். எனவே வள்ளலார் விதவை மறுமணத்தை ஆதரித்தார். கைம்மை நோன்பை வெறுத்தார். பெண்கள் உடன் கட்டை ஏறுதலைக் கண்டித்தார்.

ஜீவகாருண்யம் பற்றிய கருத்திலும் வள்ளலார் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தார். ஒவ்வோர் உயிரிடத்தும் இரக்க உணர்வு இருக்க வேண்டும் என்றார். இத்தகைய இரக்க உணர்வு உள்ளவர்கள் பிற உயிர்கள்மீது அன்பும் அக்கறையும் கொண்டிருப்பர். இவ்வகையில் ஜீவகாருண்ய ஒழுக்கம் ஒவ்வொரு

*புத்தகங்கள் நிறைந்த வீடு மலர்கள் நிறைந்த தோட்டம் போன்றது.*

மானிட வர்க்கத்திடமும் தேவைப்பட்டது. வள்ளலார் வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் உள்ளம் வாடியவர். பசியால் வாடியோரைக் கண்டு உள்ளம் உருகியவர். இக் கருத்தினை தமது ஆறாந் திருமுறையில் குறிப்பிட்டுள்ளார்.

“வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடு தோறிரந்தும் பசியறாதயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின்றோர் என்
நேருறக் கண்டுளம் துடித்தேன்
ஈடின்மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சு
இளைத்தவர் தம்மைக் கண்டே இளைத்தேன்”

இங்கு வள்ளலார் இரக்கமே எனது உயிர். இந்த இரக்கம் இல்லையெனில் எனது உயிர் நின்றுவிடும் எனக் கூறியதன் மூலம் இவரது இரக்கம் தெளிவாகின்றது. மேலும் சமூகத்தில் இடம்பெறும் தீய செயல்களைக் கண்டும் அவர் பயந்தார். காகம் கரையும் போதும் பல்லி சொல்லும்போதும் கூவை கத்தும் போதும் யாருக்கு என்ன நடந்து விடுமோ? என ஏங்கியவர். அதுமட்டுமல்லாது வீடுகளில் அழுகுரல் கேட்டாலும் உள்ளம் நடுங்கிப் பதைத்தவர். இவ்விதமாக வள்ளலாரின் இரக்க சுபாவம் தெளிவாகின்றது.

வள்ளலார் ஒரு நாட்டில் சாந்தி, சமாதானம், தேசிய உணர்வு என்பன மக்கள் இடையே இருக்க வேண்டுமாயின் பசியுணர்வைத் தீர்க்க வேண்டும் என்றார். அவ்வாறு இல்லாவிட்டால் நாட்டில், களவு, கொலை போன்று தீய செயல்கள் இடம்பெற வாய்ப்பு உண்டு. எனவே நாட்டின் பட்டினியை ஒழிப்பது அவசியம் என்றார். மேலும் கொடியவர் ஆயினும் அவர்களது பசியையும் களைய வேண்டும் என்றார். உலக மாந்தரை வேண்டுகின்றார். அவர்களது உயிருக்குக் கேடு வராமல் உதவுங்கள் என்று அறிவுறுத்துகிறார். எனவே சமுதாயத்தில் உள்ள கொடுமைகள் ஒழிய வேண்டுமாயின் முதற்கண் அதன் பாலுள்ள பசிக் கொடுமைகள் மறைய வேண்டும் என்பதே வள்ளலாரின் கொள்கையின் அடிப்படையாகும்.

வள்ளலார் சமுதாயத்தில் ஏற்பட்ட குறைகளைத் தீர்க்க முயன்றதோடு மக்கள் மீது அன்பும் கொண்டார். உலகியல் வாழ்வில் உண்டான துன்பங்களை நினைத்து பிறருள்ளம் வருந்திக் கண்ணீர் விட்டபோது அவரும் கண்ணீர் விட்டார். மேலும் அருகில் உள்ளவர்கள் அவசரமாக அழைத்தபோதும் சத்தமிட்டு அழுதபோதும் யாருக்கு என்ன நிகழ்ந்ததோ என எண்ணிக் கலங்கினார். அவ்வாறு இரக்க சுபாவமும் இளகிய மனப்பான்மையும் கொண்ட வள்ளலார் ஏழைகளுக்காகப் பாடுபட்ட ஒரு தியாகியாவார்.

வள்ளலார் உயிர்க்கொலையை வெறுத்தார். அவர் காலத்தில் வழக்கிலிருந்த பலியிடுதலைக் கண்டித்தார். இவ்வகையில் புத்தருக்கு நிகராக இவர் போற்றப்படுகின்றார். “பணத்தை வட்டிக்குக் கொடுப்பது பாவம்” என்ற இந்துமதக் கொள்கைக்கேற்ப வட்டியை வாங்குவோர் நரகத்தை அடைவர் என்றார். இதுபற்றித் தமது திருவருட்பாப் பாடலில் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார்.

*உடலுக்குத் தேகப் பயிற்சிபோல மனதிற்குப் புத்தகங்கள்.*

வள்ளலார் மக்களது நல்லொழுக்கம் பற்றியும் கூறியுள்ளார். இவ்வகையில் மானிடர் நால்வகை ஒழுக்கத்தைப் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார். அவையாவன,

1) இந்திரிய ஒழுக்கம்
2) கரண ஒழுக்கம்
3) ஜீவ ஒழுக்கம்
4) ஆன்ம ஒழுக்கம்

இவற்றில் இந்திரிய ஒழுக்கம் என்பது நல்லவற்றைக் கேட்டல், நல்லவற்றைப் பார்த்தல், நல்லதைக் கூறல், தீயவைகளைத் தீண்டாதிருத்தல், பொய் பேசாதிருத்தல் போன்றனவாகும்.

கரண ஒழுக்கம் என்பது சிற்சபையில் கண், மனம் முதலியவற்றை செலுத்துவதைத் தவிர வேறு எந்த ஆசாபாசத்திலும் செலுத்தாதிருத்தல் ஆகும். அத்துடன் குற்றங்களைக் கண்டுகொள்ளாமல் இருத்தல், பிறர்மீது கோபம் கொள்ளாது இருத்தல்.

ஜீவ ஒழுக்கம் என்பது எல்லா மனிதர் இடத்தும் சாதி, சமயம், குலம், கோத்திரம், சாத்திரம், தேசம், மார்க்கம், உயர்வு, தாழ்வு முதலியவற்றில் பேதமுறாது தானாக நிற்றல் ஆகும்.

ஆன்ம ஒழுக்கம் என்பது ஆன்மாவிடம் இரங்கி ஆன்மாவே சபையாகவும் அதன் உள்ளொளி பதியாகவும் கண்டு கலந்து நிற்றல் ஆகும். எனவே இவ்வாறான ஒழுக்கத்தை ஒவ்வொரு மானுடனும் பின்பற்ற வேண்டும் என்றார். வள்ளலாரின் பணிகளை முழுமையாக நோக்கினால் இந்து சமுதாயத்திற் காணப்பட்ட சீர்கேடுகளான சதி, சாதி, தீண்டாமை, பெண்களின் பின்தங்கிய நிலை எனும் இவைகளை நீக்கிச் சீர்திருத்தங்களைச் செய்வதற்கு அரும்பாடுபட்டார். பின்தங்கிய சமுதாயத்தைத் தட்டி எழுப்பினார். மக்கள் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்ற எண்ணத்துடன் கல்விச் சாலைகளை அமைத்து பணிபுரிந்தார். மற்றும் தமது சங்கத்தினூடாக அனாதைகள், விதவைகளைக் கவனிக்கச் செய்தார். மேலும் இந்து சமூகத்திற் காணப்பட்ட சீர்கேடுகளை அகற்றி இந்து மதக் கொள்கைகளை மக்கள் பின்பற்றுவதற்கான வழிகளைச் செய்தார்.

வள்ளலார் உலகம் முழுவதையும் ஒன்றுபடுத்தும் ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்கப் பாடுபட்டார். மக்களிடையே சகோதர உணர்வை வளர்த்து அவர்களிடம் ஒருமைப்பாட்டைக் காண விழைந்தார்.

தொகுத்து நோக்குமிடத்து, வள்ளலார் சமுதாயத்திற்குப் பல்வேறு பணிகளைச் செய்துள்ளார். இவர் தனது வாழ்க்கைக் காலம் முழுவதையும் மக்களின் சேவைக்காக அர்ப்பணித்தவர். இத்தகைய சேவைகளை அவரது நூல்கள், பாடல்கள் மற்றும் உரைநடைகள் என்பவற்றின் மூலமாக அறிந்து கொள்வதுடன் பிற்காலத்தில் வள்ளலார் பற்றி எழுதப்பட்ட ஆராய்ச்சிகள் மூலமாகவும் அறிந்துகொள்ள முடிகின்றது.

மனிதனைத் துன்பத்துக்கு ஆளாக்குவது பொருள் அன்று. பொருளிலும், அதிகாரத்திலுமுள்ள ஆசையும் பற்றுமே. இவற்றைப் பற்றில்லாமல் சரியாக உபயோகிப்பவர்களே மனித இனத்தின் பரோபகாரிகள் ஆவார்கள்.

*சோதனைகள் அதிகமாக இருந்தால் சுகம் பெரிய அளவில் வரப்போகிறது என்று அர்த்தம்.*

# பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவி சாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது

– திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் –

## வேல்

*ஆதி முதல்வனே ஆனைமுக அண்ணலே*
*நீதி தேவனே நிறைமதி தருபவனே*
*ஓதி உணர்ந்தேன் உண்மையை உன்னருளாலே*
*வாதியருக்கும் வாயடைக்க வேதமாய் வருவாயே.*

வேல் சிவசக்தி சொரூபமானது. "சிவம்" என்பது அன்பு "சக்தி" என்பது ஆற்றல் அன்பும் ஆற்றலும் கொண்டது வேல். ஞான வேல் அறிவொளியாகத் திகழ்வது. அறி யாமை இருளை நீக்குவது இந்த ஞானவேல். அன்பும் அறிவும் ஆற்றலும் கொண்டது வேல். முருகனின் முப்பெரும் சக்திகளில் வள்ளி ஆன்மாவாகவும் தெய்வயானை உலகைக் காப்பதற்காக வேள்வி முதலியவற்றைச் செய் யும் கிரியா சக்தியாகவும் முருகன் கைவேல் ஞான சக்தியாகவும் விளங்குகின்றது. வள்ளி யாகிய இச்சாசக்தி மனித மனத்தின் இச்சை களைக் குறிப்பதாகும். இந்த இச்சைகளை (ஆசைகளை) நியாய வழியில் தர்மவழியில் பூர்த்தி செய்வதற்காகவே வேள்வி, பூசை போன்ற கிரியைகள் நடாத்தப்படுகின்றன. முருகனாகிய இறைவனின் துணையோடு செய்யும் கிரியையால் மனம் திருப்தியுறு கின்றது. இச்சைகள் (ஆசைகள்) பூர்த்தி ஆகின்றன. இதனால் ஆன்ம விழிப்பு ஏற்படு கின்றது. இதனால் தூய பக்தியுண்டாகின்றது. தூய பக்தியென்பது பிரதிபலன் கருதாத அன்பு. முருகனுடன் என்றும் பிரியாதிருக்க நினைப்பதேயன்றி வேறெதையும் நாடாதது. இதுவே இச்சாசக்தியெனும் வள்ளியாகும். தெய்வீக சக்தியின் ஆற்றலால் மனிதன் பெறும் சுகபோகங்களைத் தருவது கிரியா சக்தியாகிய தெய்வயானை ஆகும். ஞான சக்தியாகிய வேலோ கிரியைகளை உரிய முறையில் செய்யும் அறிவையும் செய்து முடிக்கும் ஆற்றலையும் தருவதோடு உலக பந்தங்களினின்றும் விடுபடும் ஞானத் தெளிவை யும் தருவதால் ஞானசக்தியாக விளங்குகின்றது.

முருகன் என்பது சிவசொரூப அம்ச மான இறைவனாகவும் வள்ளி மனித மனமாக வும் தெய்வயானை மகாலட்சுமியாகவும் வேல் மனிதனையும் தெய்வத்தையும் இணைத்து வைக்கும் ஞான சொரூபமான முப்பெரும் சக்தி கொண்ட பராசக்தியாக விளங்குவது வேல். எங்கும் நிறைந்த ஆகாய சக்தியாக தூய சக்தியாக இறைவனாகிய அன்பின் சக்தி யாக விளங்கும் அன்னை பராசக்தியின் தூல வடிவமே வேல். ஆகவே இது முப்பெரும் சக்தி கொண்டது. தீய எண்ணங்களை அழித்து நற்சிந்தனையருளி நிறைவான வாழ்வைத்தரும் வழிகாட்டியாக விளங்குவது வேல். பிரம்ம தண்டமாக, வக்ரதுண்டமாக மனிதனின் முதுகெலும்பாக விளங்குவது

வேல். சத்திய தர்ம வழியில் வாழ்வோர்க்கு தன்னம்பிக்கையைக் கொடுத்து இலட்சியம் ஈடேறும் என்ற வைராக்கியத்துடன் தளராது செயற்பட வைப்பது சக்தி வேல்.

"கல்விக்கழகு கசடற மொழிதல்" என்பதற்கு இணங்கச் சொற்சோர்வுபடாமல் உள்ளதை உள்ளபடி தெளிவாக உறுதி யாகச் சந்தேகத்திற்கு இடமின்றிக் கூறிப் புரிய வைப்பதே கற்ற கல்விக்கு அழகாகும். "செல்வற்கழகு செழுங்கிளை தாங்குதல்" என்பது நாம் தேடிய செல்வத்தை செழுங் கிளையாகிய நல்ல விடயங்களைச் செய்ய மனமிருந்தும் செய்யமுடியாத வறிய நிலை யிலிருக்கும் நல்லோர்க்கு உதவி செய்து நல்லதோர் சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பணியிற் செலவிட வேண்டும். இதுவே செல் வர்க்கு அழகைத் தருவதாகும்.

"வீரத்திற்கழகு விவேகமுடன் செயற் படல்" என்பது போர்க்காலங்களிலும் வேறு பிரச்சினைகளால் பகை உண்டாகும் காலங் களிலும் வெல்லும் வகையை ஆய்ந்துணர்ந்து நிதானமுடன் செயற்பட்டுப் பகையை பணிய வைப்பதே வீரத்திற்கழகு. இத்தகைய அறிவை யும் ஆற்றலையும், தெளிவையும் தருவது ஞானவேல். நான் செய்கின்றேன் என்ற கர்வத் தோடும் செருக்கோடும் செய்ய வைப்பது மலத் தோடு கூடிய மாய சக்தியாகும். எல்லாம் அவன் செயல், நாம் அவன் கைக்கருவி என்னும் எண்ணத்தோடு செய்ய வைப்பது தூயசக்தி. தூய சக்தியான சுத்த சக்தியான அன்னை யோக மாயை என அழைக்கப்படுகின்றாள். இந்த யோக மாயையின் அருட்சக்தியே வேல். மனிதனை அழிப்பதல்ல வேலின் வேலை. அஞ்ஞான இருளிலிருந்து மெஞ்ஞான ஒளிக்கு அழைத்துச் செல்லும் ஞானச்சுடராக விளங்கி தன்னையறிந்து இன்புறச் செய்வதே வேலின் வேலை. இதுவே சூரசங்காரத்தத்துவம்.

உலகையாளும் மன்னர்களை நடு நிலை பிறழாது மக்களை நல் நிலையில் நீதி நெறி தவறாது வாழவைக்கும் அதிகாரம் கொண்டது செங்கோல். வாழ்வைச் செம்மைப் படுத்துவது செங்கோல். இதனையே மன்னன் கோன் முறை அரசு செய்க என்று வாழ்த்தினர். இங்கு கோன் என்பது நடுநிலை வகிக்கும் செங்கோலாகிய வேலைக்குறிப்பதாகும்.

"வேலி" என்னும் சொல் வேலில் இருந்தே தோன்றியது. வேலி என்பது ஓர் பாதுகாப்பு எல்லையைக் குறிக்கும் சொல். வேலியைக் கடந்தால் எவ்வித பாதுகாப்பும் இல்லை. ஆகவே இறைவன் வகுத்த எல்லைக் குள் மனிதனை வாழவைப்பது இறைவனின் வேத வாக்கியமாகும். இந்த வேத வாக்கியத் தின் உட்பொருளாக விளங்கி அதன் அர்த் தத்தை உணர வைத்து வாழ்க்கையை எல்லை கடக்காமல் உரிய முறையில் வாழ வைக்கும் வழிகாட்டியாக குருவாக விளங்கு வது வேத மாதாவின் சொருப அம்சமான ஞான வேலாகும். வேலை வணங்கினால் விவேகம் உண்டாகும். விவேகத்துடன் செயற் படும் துணிவும் ஆற்றலும் உண்டாகும். புத்திக் கூர்மையுண்டாகும். இதனால் எடுத்த காரியத் தில் வெற்றியுண்டாகும். இதனால் வீரவேல் சக்திவேல் ஞானவேல் வெற்றிவேல் என்றும் வேலைப் புகழ்ந்து பாடிப் பணிவோம். சக்தியும் புத்தியும் பெற்று வெற்றியுடன் வாழ்வோம்.

வேலுண்டு வினை நீக்க
மயிலுண்டு எமைக் காக்கப்
பாரினில் பயமின்றி வாழ்வோம்
பயனுள்ள வாழ்வு வாழ்வோம்
பகவான் துணையிருப்பார்.

*ஒரு நூல்நிலையக் கதவு திறக்கும்போது ஒரு சிறைச்சாலைக் கதவு மூடப்படுகிறது.*

(தொடர் -29)

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

பெற்றோர்களுக்கு பிள்ளைகளிடத்தில் கடமை இருப்பதைப் போலவே பிள்ளைகளுக்கும் பெற்றோர்களிடத்தில் கடமைகள் உண்டு.

இதை இராமாயணக் கதை எடுத்துக்காட்டுவதைப்போல் வேறு எந்தக் கதையும் எடுத்துக்காட்டுவதாகச் சொல்ல முடியாது.

இராமன் ஓர் இலட்சிய மகனாக விளங்குகிறான். பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகள், மனைவிக்குச் செய்ய வேண்டியவை, சகோதரர்களுக்குச் செய்யவேண்டியவை, நண்பர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் ஆகிய எதிலிருந்தும் இராமன் பின் வாங்கிய தில்லை.

பரதனுக்குப் பட்டம் கட்ட வேண்டும் என்று கைகேயி சொல்லுகின்றபோது, எல்லா வகையிலும் அரசாளத் தகுதியானவன் பரதன் என்று இராமன் அதை ஏற்றுக் கொள்ளுகிறான். மூத்தவனுக்குத்தானே முடி உரிமை என்று இராஜ நியாயத்தை பேசவில்லை. "தந்தை சொல்லே மந்திரம்" என ஏற்று பதினான்கு வருடம் வனவாசம் செய்யச் சம்மதிக்கிறான்.

இந்து தர்மம் காட்டுகின்ற வழியில் சகோதரர்கள் நடந்துகொள்ளத் தொடங்கி விட்டால் சொத்துத் தகராறுகளுக்கு வழியே இருக்காது. நீதிமன்றங்கள் ஈயோட்டிக் கொண்டிருக்கும். சட்டத்தரணிகள் முகாரி பாட வேண்டி வரும்.

சகோதர துரோகம் செய்கிறவன் நிம்மதியாக வாழ்வதில்லை என்பது பலரது வாழ்வினூடாகக் கண்டு கொண்ட அனுபவம்.

தர்மத்தின் தீர்ப்பு உறுதியானது. அது நிறைவேறுவதற்கு சற்று காலதாமதமாகலாம். "தெய்வம் நின்று கொல்லும்" என்று அதனால்த்தான் சொன்னர்கள். தர்மச்சக்கரம் சுழல்வதால் தான் மனித சமுதாயத்தில் இன்னமும் ஓரளவுக்காவது ஒழுங்கு இருக்கிறது. ஒழுக்கம் மதிக்கப்படுகின்றது.

சிலர் நினைப்பதுபோல சட்டத்தால் எல்லாப் பிரச்சனைகளையும் தீர்த்துவிட முடியாது. சட்டத்தால் ஒழுங்கை வேண்டுமானால் ஏற்படுத்த முடியும். ஒழுக்கத்தை ஒருபோதும் ஏற்படுத்த முடியாது. தர்ம உணர்விலிருந்து தோன்றுவதுதான் ஒழுக்கம். அது வெளியில் இருந்து வர முடியாது. உள்ளிருந்து வரவேண்டும். அதனால்த்தான் நம்முடைய இதிகாசங்கள் ஒழுக்க உணர்வை வலியுறுத்துகின்ற கதைகளாக உருவாயின.

இராமன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமைகளிலிருந்து தவறியதே இல்லை. காட்டுக்குப் புறப்படும்போது, சீதை உடன் வருவதால் அவளுக்கு ஏற்படக்கூடிய துன்பங்களை எடுத்துச் சொல்லுகிறான். ஆனால், அவள் "நின் பிரிவிலும் சுடுமோ நெடுங்காடு" எனக்

*அன்புள்ள மனம் சலனமற்று ஓடும் நதி.*

கூறியதும், அதன் உட்பொருளை உணர்ந்த இராமன், வேறு வார்த்தை பேசாமல் தன்னுடன் அழைத்துச் செல்லுகிறான்.

இராமாயணக் கதையில் இராமன், மனைவி சீதைக்குச் செய்ய வேண்டிய கடமைகளை எல்லாம் செய்தான் என்பது சரி; அவளைச் சந்தேகப்பட்டு தீக்குளிக்கச் சொன்னானே, அது என்ன நியாயம்? மனைவிக்குக் கணவன் செய்கின்ற கடமை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று இந்து மதம் சொல்கிறதா? அப்படியாயின் நம்மவர் பலரின் செயல்கள் நியாயமாகி விட்டதா?... தொடர் கேள்விகள் எழலாம்.

இந்த சந்தேகத்துக்கு விடை காணவேண்டும். ஓர் அரசனின் மனைவியின் நடத்தை பற்றி மக்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டால் அதைத் தீர்த்து வைப்பது அரசனின் கடமையாகும். சீதை, அசோகவனத்தில் இருந்ததால், அவளின் செயற்பாடுகளில் எழக்கூடிய மக்களுக்கு ஏற்படக்கூடிய சந்தேகங்களை இராமன் தனது கூற்றாகச் சொல்கிறான்.

"ஊண் திறம் உவந்தனை; ஒழுக்கம் பாழ்பட
மாண்டிலை; முறை திறம்பி அரக்கன் மாநகர்
ஆண்டு உறைந்து அடங்கினை!...."

"மருந்தினும் இனிய மன்னுயிரின் வார்தசை
அருந்தினையே; நறவு அமைய உண்டியே;"

"பெண்மையும் பெருமையும் பிறப்பும் கற்பு எனும்
திண்மையும், ஒழுக்கமும், தெளிவும் சீர்மையும்
உண்மையும் நீ எனும் ஒருத்தி தோன்றலால்
வண்மை இல் மன்னவன் புகழின் மாய்ந்தவால்"

(கம்ப இராமாயணம் மீட்சிப் படலம் பாடல்கள் 62,64,66)

பிராட்டியை நோக்கி இராமன் "நீ புலால் உண்டாய், ஒழுக்கம் கெட அரக்கருடன் வாழ்ந்தாய், கள்ளைக் குடித்தாய், நீ பிறந்த காரணத்தால் உலோப குணமுடைய மன்னவன் புகழ் அழிவதுபோல் பெண்மை, பெருமை, நற்குடிப்பிறப்பு, கற்பு, திண்மை என்பன அழிந்து விட்டன" என்று கூறுகிறான். இந்த இடத்தை உற்றுநோக்கினால் "சீதையை நோக்கிய பின்னர் பேசிய வார்த்தைகளாக இவ் வரிகள் கம்பனால் பாடப் பெறுகிறது.

ஆனால் இங்ஙனம் கருணை இன்றிக் கடுஞ்சொல் கூறிய இராமனை "புலவர் புந்தியான்" என்ற சொற்களால் கம்பன் குறிப்பதையும் சேர்த்துச் சிந்திப்போமானால் இராமன் பயன்படுத்திய சொற்கள் மக்கள் இப்படி எண்ணுவார்கள் என்பதன் வெளிப்பாடாகும். அரசியைப் பேசியதும் அனுமன், விபீடனன் போன்றவர்களின் முன்னிலையில் தான். இதன் பின்னர் இராமனின் உள்ளக் கருத்தை அறிந்து தனது தூய்மையை உறுதிப்படுத்திய நிகழ்வுதான் "தீக்குளித்தது" தவம் செய்த தவமாக சீதை உணரப்படுவதற்கு இந்த நிகழ்வு காரணமாக அமைந்துவிட்டது.

ஓர் அரசனின் மனைவியின் செயற்பாடுகளில் மக்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டால் அதைத் தீர்த்து வைப்பது அரசனின் கடமை. இது குடும்ப வாழ்வில் கணவனுக்கான பாடமும் ஆகும்.

*ஒருவனின் அறிவை அறிந்துகொள்வதற்கு அவனது பேச்சே அளவுகோல்.*

கடமைகளை உணர்த்துவதில் இந்துமதம் அற்புதமான வழிகளைக் கையாண்டிருக் கிறது. இன்றைக்கு அலுவலகத்துக்குச் செல்லும்போது மனைவியானவள் படும் வேதனைகள் அதிகம். சந்தேகம் எனும் பேய் யாருக்கு வந்தாலும் குடும்ப வாழ்வு சீரழிந்துவிடும்.

பெண் தனது கற்பைத் தானே காக்க வேண்டும். யாரும் துணை செய்ய மாட்டார்கள்.

சிறை காக்கும் காப்பு எவன் செய்யும்? மகளிர்
நிறை காக்கும் காப்பே தலை

(குறள் 57)

வீட்டிற்குள்ளே மகளிரை அடைத்துக் காக்கும் சிறைக்காவல் சிறந்த காவல் அல்ல; ஆனால் அம் மங்கையரே, தம் கற்பைத் தம் மன உறுதியால், காத்துக் கொள்ளும் மனக் காவலே சிறந்த காவல் என்பது வள்ளுவர் கூறும் கருத்தாகும்.

இன்றைய சூழலில் பெண்கள் வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இந்நிலையால் பெண்கள் "தற்காப்பு கலைகள்" பயின்றிருப்பது அவசியமாகும்.

குடும்ப வாழ்க்கையில் உணர்ச்சிப் பிரச்சனைகள் ஏற்படவே செய்கின்றன. அதனால் ஏற்படுகின்ற சிறுசிறு தவறுகளுக்கு மன்னிப்பே இல்லை என்றால்; வாழ்க்கையே நாசமாகிவிடும்.

வாழ்க்கையை வாழாமல் இறைவனை உணரமுடியாது என்பது இந்துக்கள் கண்ட தெளிந்த முடிவு. அதனால்த்தான் தெய்வ அவதாரங்களும் மனிதர்களாகவே வாழ்கிறார்கள். காதல் செய்கிறார்கள். திருமணம் செய்து கொள்ளுகிறார்கள். வாழ்க்கையின் சுக துக்கங்கள் அனைத்தையும் அனுபவிக்கிறார்கள்.

மனிதனாகப் பிறந்த பிறகு; வாழ்க்கையின் பொறுப்புகளிலிருந்து எவரும் ஓடிவிட முடியாது.

குறிப்பிட்ட வயதில் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் ஏற்படுகின்ற கவர்ச்சியும் இறைவன் கொடுத்த உணர்ச்சிகளே. இதைத் தவறான வழிகளில் செலுத்தக்கூடாது என்பதுதான் இந்து மதம் போதிக்கின்ற ஒழுக்கமே தவிர, இந்த உணர்ச்சியினை அடியோடு புறக்கணித்து வாழ வேண்டும் என்று இந்து மதம் சொல்லவில்லை.

விரும்பித் துறவற நெறிகளை மேற்கொண்டவர்களை இதற்கு விதிவிலக்காகவே கருத வேண்டும்.

ஒரு வாலிபனும் யுவதியும் பெற்றோருக்குத் தெரியாமல் காதல் கொள்ளுவது இந்த நாகரிகயுகத்தில் நமது நாட்டில் உருவாகியுள்ள புதிய பழக்கம் என்று நாம் எண்ணிக் கொண்டிருக் கிறோம். இந்து சமுதாயத்தில் நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகின்ற பழக்கம்தான் இது.

பழங்கால குறுந்தொகைப் பாடல் ஒன்றில் வருகின்ற நிகழ்ச்சி இந்தப் பழக்கத்தையும், அதற்குப் பின்னே உள்ள இயற்கை உணர்வினையும் அருமையாக எடுத்துக்காட்டுகிறது.

வயதுக்கு வந்த பெண் ஒருத்தி திடீரென்று வீட்டிலிருந்து காணாமல் போய் விடுகிறாள். அவள் எங்கே போயிருப்பாள் எனத் தெரியாமல் அவளுடைய தாய் பதை பதைக்கிறாள். யோசித்தபோது அவளுக்கு ஒரு விடயம் நினைவுக்கு வருகிறது. தன்னுடைய மகள் ஒரு வாலிபனோடு அவ்வப்போது சந்தித்துப் பேசிக்கொண்டிருப்பதை அவள் பார்த்திருக்கிறாள். ஒருவேளை அந்த வாலிபனோடு அவள் போயிருப்பாளோ என்கிற சந்தேகம் வருகிறது.

மகளைத் தேடிக்கொண்டு புறப்படுகிறாள். போகிற வழியெல்லாம் தன் மகளின் அடையாளத்தையும், அந்த வாலிபனின் அடையாளத்தையும் சொல்லி, அவர்களை யாராவது பார்த்தீர்களா என்று விசாரித்துக் கொண்டு செல்லுகிறாள். யாரும் பார்க்கவில்லை என்று சொல்லுகிறார்கள். இன்னும் சற்றுத் தூரம் போன பிறகு, எதிர்ப்பட்ட ஒரு துறவியைச் சந்தித்து விசாரிக்கிறாள்.

அவர், அவள் அடையாளம் சொல்லுகின்ற இருவரையும் வழியில் பார்த்ததாகச் சொல்லுகிறார். உடனே அந்தத் தாய் கண்ணீருடன் நடந்ததைச் சொல்லுகிறாள்.

அதற்கு அந்தத் துறவி சொல்லுகிறார், "சந்தனம் மலையிலே பிறந்தாலும் மலைக்கு அது பயன்படுவதில்லை. அதை யார் பூசி மகிழ்கிறார்களோ அவர்களுக்குத்தான் பயன்படுகிறது. முத்து கடலிலே பிறந்தாலும் அது கடலுக்கு பயன்படுவதில்லை. மாலையாக யார் அணிந்து கொள்கிறார்களோ அவர்களுக்குத்தான் பயன்படுகிறது. இசை யாழிலே பிறந்தாலும் யாழுக்கு பயன்படுவதில்லை. யாழை யார் மீட்டி மகிழ்கிறார்களோ அவர்களுக்குத்தான் பயன்படுகிறது. பருவம் அடைந்த உடன் மகள் எங்கே சேர்ந்து பயன்பட வேண்டுமோ அங்கே போய்ச் சேர்ந்துவிட்டாள். நீ எதற்காகக் கவலைப்படுகிறாய்?"

அவர் சொல்லும் விளக்கத்தைக் கேட்டு அந்தத் தாய் ஆறுதல் அடைந்ததாக குறுந்தொகைப் பாடல் கூறுகிறது.

பண்டைக் காலத்தில் வயது வந்த ஆணும் பெண்ணும் காதலித்து மணம் புரிந்து, தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுபடுவது சமுதாயம் ஏற்றுக்கொண்டுவிட்ட ஒரு வழக்கமாக இருந்திருக்கிறது. மகாகவி காளிதாசனின் சாகுந்தலமும் இதைத்தான் சொல்லுகிறது.

மன்னன் துஷ்யந்தன் சகுந்தலையைக் கண்ணுவரின் ஆசிரமத்தில் சந்தித்து காதல் கொள்ளுகிறான். இருவரும் தனிமையில் சந்திக்கிறார்கள். அவளை கந்தர்வ மணம் செய்து கொண்டதாகக் கூறி, அதற்கு அடையாளமாக ஒரு மோதிரத்தை அவள் விரலில் அணிவித்துவிட்டு துஷ்யந்தன் செல்லுகிறான்.

ஆண் - பெண் இன்ப உறவு பாவம் என்று இந்து மதம் எந்த இடத்திலும் சொல்ல வில்லை. உலக இன்பங்களை அனுபவிப்பதற்கு இறை உணர்வு ஒருபோதும் தடையாக இருந்ததில்லை.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் திருமணம் செய்துகொண்டு இல்லற தர்மத்தில் இருந்திருக்கிறார்கள்.

ஐம்புலன்களின் இன்பத்தை அனுபவிப்பது குற்றம் என்று இந்துமதம் எங்கேயும் சொல்லவில்லை. வாழ்க்கைக்கு வகுக்கப்பட்ட நெறிகளை மீறுவதுதான் குற்றம் என்று இந்துமதம் சுட்டிக்காட்டுகிறது.

குமார சம்பவம் எனும் காவியத்தில் காளிதாசன் இறைவன் இன்பம் அனுபவிப்பதை அருமையான கவிதைகளில் எடுத்துக் காட்டி இருக்கிறார். காளிதாசனின் வர்ணனைகளை இங்கே விவரிப்பது தேவையில்லை. ஆனால் பின்னாளில் வேறு நபர்களினால் எழுதப்பெற்றுள்ள "காமசூத்திரம்" நூல்களுக்கு அடிப்படையாக அமைவது காளிதாசனின் கவிதைகள்தான். காளியின் வரம்பெற்று காவியம் இயற்றும் ஆற்றலைப் பெற்றவன் காளிதாசன் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

வாழ்க்கை இன்பத்தை உணராமல் வாழ்க்கையை உணரமுடியாது. வாழ்க்கையை உணராமல் இறைவனை உணரமுடியாது. இதுவே இந்துக்கள் கண்ட நடைமுறையாகும்.

பாசம் என்றால் என்ன என்பதை இல்லற வாழ்க்கையிலிருந்துதான் தெரிந்துகொள்ள முடியும். அவ்வாறு உணர்கின்ற பாசத்தை இறைவன்மீது நாம் காட்டவேண்டும். அதுவே பக்தி. பக்தியின் தன்மை எப்படிப்பட்டது என்பதை சேக்கிழாரின் பெரியபுராணம் எடுத்துக் காட்டுகிறது. உயிர்களை நேசிக்காமல் இறைவனை நேசிக்க முடியாது. இறைவனின் படைப்பை நேசிக்காமல் இறைவனை நேசிக்க முடியாது.

(தொடரும்...

## அனைத்திற்கும் முன் நிற்பாய் ஐந்து கரத்தாண்டவனே

ஆற்றங்கரை தன்னில் அழகுறவே கோயில் கொண்டு
அகிலத்தை காத்து நிற்கும் ஆண்டவனே
அணியணியாய் உன்இடத்தில் அலைமோதும் உள்ளங்களை
ஆதரித்து அருள் பாலிப்பாய் அன்புடனே எப்போதும்.

தீமை யென்ற தொன்று தினையளவும் கொள்ளாமல்
வாய்மை தன்னை போற்றி நிற்கும் வள்ளல் பெருமானே
வஞ்சனைகள் வல்வினைகள் வருகின்ற வினைகள்யாவும்
வழிமாறி போக வைப்பாய் மாணிக்கப் பிள்ளையாரே.

ஓமென்னும் பிரணவத்தின் உட்பொருள் நீயே
உனக்கிணையாய் வேறெவரும் இல்லாதவன் நீயே
வேழமுகம் படைத்த வித்தகனும் நீயே
வினைகளை வேரறுக்கும் தத்துவனும் நீயே

ஆலமரத்தடியில் அமர்ந்திருப்பாயே
அடியவர் உள்ளங்களில் மலர்ந்திருப்பாயே
அள்ளி எடுத்தபிடி மண்ணிலும் இருப்பாயே
அகிலங்கள் அனைத்திலும் நிறைந்திருப்பாயே

முன்னவனும் முழுமுதலும் மூத்தவனும் நீயே
மூஷிக வாகனத்தை கொண்டவனும் நீயே
கண்களீராறுடைய கந்தனுக்கு மூத்தவனும் - பூத
கணங்களுக்குத் தலைவனான கணபதியும் நீயே.

திருவாற்றில் மூழ்கி எழுந்து உன் திருநாமம்தனை ஓதி
திருக்கோயில் வலம் வந்து தேங்காய் உடைத்து நின்று
குந்திஎழு வோரின் குறைகளைக் களைந்திடுவாய்
நம்பிக்கை வைத்து உன்னை நாடி தொழுவோர்க்கு

காக்கை உருவில் வந்து கமண்டலத்தை கவிழ்த்தாய்
காவிரியை ஓடவைத்து நந்தவனம் காத்தாய்
அம்மை அப்பனையே அகிலமெனக் கொண்டாய்
அனைத்திற்கும் முன்நிற்பாய் ஐந்து கரத்தாண்டவனே.

-முருகுப்பிள்ளை செல்லத்தம்பி.

*நம்பிக்கை மட்டும் இருந்தால் போதாது, சிந்திக்கவும் தெரிய வேண்டும்.*

# கதிர்காம யாத்திரை

## -எனது அனுபவம்- (தொடர்ச்சி...)

– **செல்வி சி. நிலா** அவர்கள் –

கொக்கட்டிச்சோலை தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய தரிசனத்தை முடித்துக்கொண்டு பெரும் மனநிறைவுடன் உகந்தை முருகனாலயத்தை நோக்கி எமது யாத்திரை ஆரம்பமாயிற்று. வழியில் எமக்கு வழிகாட்டியாக வந்திருந்த உதயண்ணாவையும் அவரது மகனையும் அவர்களது இடத்தில் இறக்கிவிட்டு எமது பேருந்து புறப்பட்டது.

மட்டக்களப்பினூடாக நாம் போகவேண்டிய காரணத்தினால் ஐயா தம்பிலுவில் கணேசன் என்பவரோடு தொடர்பினை ஏற்படுத்தி நாம் வருகின்ற விடயம்பற்றி ஏற்கனவே கதைத்திருந்தார். அதன் பிரகாரம் அவரும் இடையில் எம்மோடு இணைந்திருந்தார். திரு கணேசன் யாழ் சைவ மகாசபையோடு ஏற்கனவே தொடர்பிலுள்ளவர். பண்டாரவளையில் இடம்பெற்ற மீரியப்பெத்த மண்சரிவின் காரணமாக நிவாரணப்பணி ஆற்றும் முகமாக ஐயா சென்றபொழுது தம்பிலுவிலில் இருந்து மோட்டார் சைக்கிளில் பதுளை வந்து நிவாரணப் பணியில் பங்குபற்றியவர். அன்றிலிருந்து மலையகப் பணி என்றாலும் மட்டக்களப்பு அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இடம்பெறும் நிவாரணப் பணி என்றாலும் அதில் கலந்துகொள்ளும் ஒருவர். ஏன் இன்றும்கூட



ஐயா உகந்தைக்கு வழிபாட்டுக்கு செல்லும் காலங்களில் அவரது இல்லத்துக்கு சென்று வருவது வழக்கம்.

நாம் வருவதையிட்டு எமக்குரிய இரவு உணவை மட்டக்களப்பு, பளுகாமம் திலக வதியார் மகளிர் இல்லத்தில் ஏற்பாடு செய்திருந்தார். அதன் பிரகாரம் கணேசன் அவர்கள் எம்மை அங்கே அழைத்துச் சென்றார்கள். அவ் இல்லத்திற்கு பொறுப்பாக இருந்தவர்களும், பிள்ளைகளும் எம்மை வர வேற்று பிரயாணச் சோர்வு நீங்கும் வண்ணம் சிற்றுண்டி வகைகளை வழங்கி தேனீர் தந்து உபசரித்த விதம் அனைவரின் மனதையும் கவரக்கூடியதாக இருந்தது. எமக்குரிய இரவு உணவையும் அங்கேயே தயாரித்திருந்தார்கள். உகந்தையில் போய் இரவு உணவை உண்ணும் முகமாக நாம் கொண்டு சென்ற பாத்திரங்களில் உணவைப் பெற்று அவர்களுக்கும் நன்றி கூறி எமது பிரயாணத்தைத் தொடர ஆயத்தமானோம். திரு கணேசன் இவ்வகையான ஒரு இல்லத்தில் எமக்குரிய இரவு உணவை ஏற்பாடு செய்திருப்பார் என்பதை முன்பே ஐயா அறிந்திருக்கவில்லை. அதன் காரணமாக அந்த இல்லத்திற்கு வெறுங் கையுடன் வந்துவிட்டேன் பிள்ளைகளுக்கு கொடுக்க ஒன்றும் கொண்டுவரவில்லை என்று கூறி ஒரு கணிசமான நிதியினை பிள்ளைகளுக்கு ஏதும் வாங்கிக் கொடுங்கள் என்று இல்லப் பொறுப்பானவர்களின் கையில் கொடுத்துவிட்டு உகந்தையை நோக்கிப் புறப்பட்டோம். பொத்துவில்வரை நகர சூழலுக்கிடையில் இடம்பெற்ற பிரயாணம் பொத்துவில் கழிந்து பாணமைவரை வெறும் வயல்வெளியூடாகவும் சன நடமாட்டம் அற்ற பகுதியினூடாகவும் போய்க்கொண்டிருந்தது. எமக்கெல்லாம் ஒரே பயம். வாகனம் ஓடிக் கொண்டிருக்கிறது. வழியில் என்ன நடைபெற்றாலும் ஒருவருக்கும் தெரியாது. அப்படியான பாதை. நாம் பாணமை போகும்வரை வழியில் ஒருவித வாகனத்தையும் காணவில்லை. அதுவும் எனது மனதில் பயத்தைத் தோற்றுவித்தது. ஆனாலும் ஐயா அவர்கள் அமைதியான முறையில் இருந்த காரணத்தால் நானும் எனது மனப் பயத்தை வெளிக்காட்டாது இருந்தேன்.

ஒரு வழியாக பாணமையை எமது பேருந்து இரவு 09 மணியளவில் அடைந்தது. இன்னும் உகந்தையை அடைய இரவு 10.30 மணியாகும் என்ற தகவலைக் கூறியதோடு இனி நாம் போகும் பாதை மனித சஞ்சாரமில்லாத காட்டினூடாகத்தான் செல்ல வேண்டும். வழியில் மான், முயல் முதலிய பிராணிகளோடு யானையும் நிற்கும். அதோடு பாதையும் சீரில்லை. பகல் என்றால் பயமில்லை. இரவு நேர பிரயாணம். கவனமாகத்தான் செல்ல வேண்டும் என்று கணேசன் கூற அனைவருக்கும் பயம் தொற்றிக்கொண்டது. பாதையோ இருட்டு எமது பேருந்தின் வெளிச்சத்தோடு, முருகன்தான் துணை எனும் எண்ணத்துடன் வழியில் ஒருவித தடங்களுமில்லாத முறையில் உகந்தை முருகன் ஆலயத்தை இரவு 11 மணியளவில் அடைந்தோம்.

(தொடரும்...

வலிமை, உடலினின்று வருவதில்லை. அசைக்க முடியாத மன உறுதியில் இருந்து வருகிறது.

நமது மனத்தின் தூய்மை அதிகமாக இருந்தால், நமது வலிமையும் அதிகமாக இருக்கும். அவ்வளவுக்கவ்வளவு வெற்றி இன்னும் வேகமாகக் கிடைக்கும்.

*ஆசைகள் வளர வளர தேவைகளும் வளர்ந்துகொண்டே போகும்.*

அமரர்

# நித்திய தசீதரனின்

## 3ஆம் ஆண்டு நினைவு

## (09.05.2020)



பதிவு இல: QD/78/NEWS/2020

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

